
# நதி



"தேன் தமிழ் ஓசை"யின் 3ம் ஆண்டு நிறைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


முன்னுரை

தேன் தமிழ் ஓசை பற்றி . . .

ஆசியுரை

| | |
|---|---|
| புலம்பெயர்ந்த தமிழர் வாழ்வும் தொடர்பு ஊடகங்களும் | 1 |
| மாற்றுக் கலாச்சாரப் போக்கும் உலகப்பார்வையும் | 8 |
| தாய்மொழிக்கல்வி | 15 |
| புலம்பெயர் நாடொன்றில் தமிழ் கற்பித்தல் | 18 |
| நூல் அறிமுகம் | 24 |
| அன்னை பூமி | 26 |
| பிரயாணத்தின் பின்னணி | 34 |
| உணர்வுகளின் உள்ளடக்கம் | 35 |
| அன்னப்பட்சி சொன்ன கதை | 37 |
| அங்கீகாரம் | |
| 1–விமர்சகன் | 40 |
| 2–கவிஞன் | 41 |
| உள்ளதைச் சொல்வோம் | 43 |
| விமர்சனம் | 64 |
| விமர்சனக்கவிதை | 66 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

உலகப்பந்தின் பரிதிகள் எங்கும் சிதறுண்டு, அல்லலுறும் ஈழத்தமிழர்களாகிய எம்மில் ஒரு துளியினர், வடதுருவத்தின் அருகேயும் பனிக்காட்டில் சிதறுண்டு நோர்வே நாட்டிலே மேற்கு கரையோரமான பேர்கன் நகரிலே உறைந்துள்ளோம்.

பேர்கன் நகரிலே ஈழத்தமிழர்களுக்கு ஒரு வரலாறு உண்டு. எமது வாழ்வுடன் கூடவே எமது கலை இலக்கியங்களின் பரிவர்த்தனையும் இங்கு காலத்திற்கு காலம் நிகழ்ந்து வந்துள்ளது. அந்த வகையிலே "தேன் தமிழ் ஓசை" என்ற தமிழ் வானொலி சேவையை நாம் ஆரம்பித்து மூன்று வருடங்கள் நிறைவு செய்து நான்காவது வருடத்தில் தவழ்ந்து கொண்டிருக்கின்றோம்

வாரந்தோறும் அரை மணிநேரமாக ஆரம்பித்த எமது வானொலி நிகழ்ச்சிகள், ஓராண்டின் பின்பு வாரம் ஒரு மணிநேரமாக வளர்ச்சி பெற்றது. இப்போது வாரம் இரு மணித்தியாலங்களாக வானலைகளில் தவழ்ந்து வரும் எமது நிகழ்ச்சிகள் பேர்கன் வாழ் தமிழ் நேயர்களைச் சென்றடைகிறது. பொதுவாக வெளிநாடுகளில் பொருளாதாரத்தை மையப்படுத்திய எம்மவர் வாழ்வினால், இவ்வாறான முயற்சிகள் காலப்போக்கில் சலிப்படைய வைத்து கைவிடும் நிலையே ஏற்படுகிறது. ஆயினும் பேர்கன் வாழ் தமிழ்மக்களின் ஆர்வமும் அக்கறையும் எம்மை மேலும் உற்சாகமூட்டி தேன் தமிழ் ஓசையை மேலும் வளர்ச்சிபெற வைத்தமையே, நாம் இன்று நமது தொடர்பு ஊடகங்களை விரிவுபடுத்தும் பொருட்டு இம் மலரை வெளியிடக் காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன் தமிழ் ஓசை

***F M 100,3 103,3 107,5MHZ***

ஞாயிற்றுக்கிழமை: *15.00–16.00*
புதன்கிழமை: *19.00–20.00*

முகவரி:

RADIO TAMIL
POSTBOKS 29
5001 BERGEN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன்தமிழோசை பற்றி . . .

புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் மக்களினதும் நாளைய சந்ததியினரினதும் நிலைமை பல கேள்விகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கினறது. பழம்பெரும் கலை இலக்கியங்களை சிறப்பாக தன்னகத்தே கொண்டு கலை கலாச்சார வழம் பொருந்தியது எமது தமிழ்மொழி எனலாம். பலவகைக் காரணங்களால் தாய் நாட்டைவிட்டு சிதறி வாழும் எமக்கு எமது கலைகள்தான் பெரும் சொத்தாக இருக்கின்றன. அவைதான் எமது நிரந்தரச் செல்வம். இத்தகைய எமது கலையையும் மொழியையும் எமது நாளைய சந்ததியினருக்கு அறிவிக்க வேண்டியது நமது தலையாய கடமை. தேனினும் இனிய எமது தமிழ் மொழியையும், இனிய நமது கலைகளையும் மறக்கமுடியுமா? பிறமொழிகளையும், பிறகலைகளையும் மட்டும் பின்பற்ற நினைப்பது பழம் இருக்க காய் சுவைப்பதற்கு சமனாகும்.

இந்த வகையில் தமிழ்மொழிக்கும் எம் மக்களிற்கும் சிறு சேவை புரியவேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்டது தான் " தேன் தமிழ் ஓசை" என்ற எமது வானொலியாகும். இந்த வானொலிச் சேவை உருவாவதற்கு ஒஸ்லோவிலுள்ள "தமிழ் நாதம்" வானொலிச் சேவை பெரிதும் உறுதுணையாக இருந்துள்ளது. அதே வேளை புளுரோவிலுள்ள "தமிழ் அலை" வானொலிச் சேவையும் எம்மோடு சேர்ந்து ஒத்துழைத்து வருகின்றது.


எமது ஆரம்ப ஒலிபரப்பிலிருந்து இன்றுவரை சிலர் தொடர்ந்து சேவையாற்றி வருகிறார்கள். பல தவிர்க்கமுடியாத காரணங்களால் தற்போதைக்கு எமது சேவையின் நேரடி உதவிகளில் இருந்து சற்று இளைப்பாறிய உள்ளங்களை உங்களிற்கு அறிமுகப்படுத்துவதும் எமது கடமையாகும். "தேன் தமிழ் ஓசை" பேர்கனில் உருவாகுவதற்கு பல வழிகளிலும் ஒத்துழைப்புகளை வழங்கிய திரு. திருமதி தேவநாதன் அவர்கள் மிகவும் பாராட்டப்படத்தக்கவர்கள். அதேபோல் திருமதி தவராஜா, திரு மோகனகுமார், திருமதி எலிசபெத் பெலீசியன் இவர்களுடன் எமது முன்னணி அறிவிப்பாளரும் சிறுவர் நிகழ்ச்சிகளை நடாத்தி "வானொலிமாமா" எனப் பெயர் எடுத்த திரு தேவதாஸ்(மதிவாணன்) அவர்களின் சேவையும் நினைவு கூர்ந்து பாராட்டத்தக்கது. இவர்களது ஒத்துழைப்பு எதிர்காலத்திலும் எமக்கு கிடைக்கும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளோம். தொழில்நுட்பரீதியாக உதவி புரிந்த திரு எல்மர் அவர்களையும் பாராட்ட வேண்டும்.

"தேன் தமிழ் ஓசை"யை நிர்வகிக்கவென ஓர் பணிப்பாளர் குழுவும் சேவையை திறம்பட நடாத்த தேன் தமிழ் ஓசை வானொலிக்குழுவும் இயங்குகிறது. நேயர்களாகிய உங்கள் ஆர்வமும், ஊக்கமும் தான் எமது இந்த வளர்ச்சிக்கு காரணமாகும். வானொலிச் சேவையை நடாத்த எம்மாலியன்றவரை நடுநிலைமை தவறா பண்பை கடைப்பிடிக்கும் அதேவேளை உங்கள் அனைவரிடமுமிருந்து கிடைக்கும் பாராட்டுகளையும் விமர்சனங்களையும் மிக ஆர்வத்தோடு கவனத்திலெடுத்துக் கொண்டு சேவையாற்ற முனைகின்றோம். செய்திகளை வழங்குவதில் சிரமங்கள் இருப்பினும் செய்திப்பிரிவு மிகவும் நிதானத்துடனும் பொறுப்புடனும் நேயர்களுக்கு செய்திகளை வழங்கி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலிபரப்பப்படும் செய்திகளுக்கு தேன் தமிழ் ஓசை செய்திப்பிரிவு கூட்டுப்பொறுப்பு ஏற்கிறது.

இந்த வானொலிச் சேவையில் பணிபுரியும் அனைவரும் தங்கள் பொன்னான நேரத்தைப் பாவித்து முழுக்க முழுக்க இலவசமாகவே இயங்குகின்றார்கள் என்பதை வானொலிக்குழு சார்பில் கூறுவதோடு தேன் தமிழ் ஓசை சிறக்க உங்களது உதவிகளையும் வேண்டி நிற்கிறோம்.



குணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

பேர்கன் தமிழ் வானொலிச் சேவை தனது மூன்றாவது ஆண்டை பூர்த்தி செய்கின்ற வேளையில் எனது ஆசிச்செய்தியை வழங்குவதில் மனமகிழ்ச்சியடைகிறேன்.

கலையின் முகங்கள் பலவகை. இம்முகங்களின் ஒருசிலவற்றை வாரந்தோறும் பரப்பி தமிழ் மணம் பரவ இச்சேவையில் தங்கள் அரிய நேரத்தை பொருட்படுத்தாமல் தமது சேவையைச் சிறப்பாகச் செய்யும் அனைவருக்கும் நன்றியும் வாழ்த்தும் வழங்குகின்றேன்.

குறிப்பாக நோர்வே நாட்டில் பிறந்து வளரும் இனிய எதிர்காலச் சிறார்களுக்கும் சந்ததியினருக்கும் இச்சேவை ஆக்கபூர்வமான பணியைச் செய்கின்றது என்று ஐயமின்றிக் கூறிவிடலாம். மேலும் எமது இனிய மொழியையும் இச்சேவை பரப்புகின்றது. கதைகள், கட்டுரைகள், நாடகங்கள் இவர்களின் அரிய படைப்புக்களாகும்.

எமது கலாச்சாரத்தை மேம்படுத்தும் வகையில் இச்சேவை மேலும் வளர என் ஆசியைக் கூறி நிற்கின்றேன்.

வாழ்க தமிழ் மொழி. வாழ்க தங்களின் சேவை.

– பே. இருதயநாதன்
(அ.ம.தி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர்ந்த தமிழர் வாழ்வும் தொடர்பு ஊடகங்களும்

## ஒரு கண்ணோட்டம் — *ரஞ்சித்*

மனிதன் சமூகமாக வாழத்தொடங்கிய காலத்திலிருந்து தோற்றம் பெற்ற மனிதனின் நாகரீக வரலாறு, அவன் சக மனிதர்களுடன் தொடர்புகொள்ளும் போதும், இணைந்து செயலாற்றும் போதும் மானுடச் செயற்பாடாக உருவாகிறது.

மனிதன் தன் சமூகத்தினைத் தான் விரும்பியபடி மாற்றியமைக்கவும், அதனூடாக மானுடம் வளர்ச்சி கொள்ளவும், அவன் பிற மனிதர்களுடன் இணையவேண்டியது அவசியமாகிறது. இந்த முயற்சியினடிப்படையிலேயே மனிதன் சமூகமாக வாழ்கிறான். ஒரு சமூகப்பிராணியாக இல்லாமல் மனிதனுக்கு இருப்பு இல்லை.

ஆதிகாலத்திலிருந்தே கூட்டமாக வாழ்ந்த மனிதனை முக்கியமாக இணைத்தது அவனது கருத்துப் பரிமாற்றமே. மனிதன் சகமனிதர்களுடன் தொடர்பு கொள்ளவும், சேர்ந்து செயலாற்றவும் பயன்படுத்திய ஊடகமானது உடலசைவுகள், ஒலிவடிவங்கள் எனப் பலவேறு மொழிகளில் பரிணமித்தன. அவன் தன்னை ஒரு சமூகஜீவியாக மாற்றிக்கொள்ள பல்வேறு தொடர்பு ஊடகங்களைப் பயன்படுத்திக் கொள்கிறான். இது அவனது விருப்பத்திற்கும், ஆளுமைக்குமேற்ப வெவ்வேறு ஊடகங்களாக, வெவ்வேறு சாதனங்களாக, வெவ்வேறு வடிவங்களாகத் தோற்றம் பெற்று நடைமுறையில் செயற்பட்டும் வருகிறது.

ஒரு குழந்தைக்கு அதன் ஆர்ப்பரிப்பு - ஒரு ஓவியனுக்கு அவன் ஓவியம் - ஒரு இலக்கியவாதிக்கு அவன் இலக்கியம் - ஒரு கவிஞனுக்கு அவன் கவிதை - அப்படி ஒவ்வொரு மனிதனும் தன் விருப்பங்களுக்கும், ஆளுமைக்குமேற்ப ஒரு ஊடகத்தினை வரித்துக்கொள்கிறான்.

இங்கே ஊடகங்கள் வேறுபடலாம். ஆனால் அடிப்படையில் நிகழ்வது ஒரு அனுபவப் பகிர்வு, ஒரு கருத்துப் பகிர்வு.

மனிதன் தன்னைச் சமூகத்தின் ஒரு உறுப்பினனாக மாற்றிக்கொள்ள இத்தகைய பகிர்வும், பங்குகொள்ளலும் அவசியமாகிறது. இது புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும் விதிவிலக்காக இல்லை.

தமிழ் மக்களின் புலம்பெயர்வு என்பது 1983களுக்கு முன்னர் தொழில், கல்வி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதியான வாழ்க்கை எனப் பல்வேறு காரணங்களுக்காக நிகழ்ந்துள்ளது. ஆனால் 1983ம் ஆண்டின் பேரின வன்முறையை அடுத்தும், நமது போராட்ட வரலாற்றின் கறையாகவிருக்கும் இயக்க முரண்பாடுகளின் காரணமாகவும் தமிழராகிய நாம் உலகின் மூலைமுடுக்கெல்லாம் புலம்பெயர்ந்தோம். இந்தப் புலம்பெயர்வுக்கு முன் புலம்பெயர்ந்த தமிழரை விட, இனப்பிரச்சனையின் கூர்மையினால் அகதியாகப் புலம்பெயர்ந்த தமிழரின் வாழ்பனுபவம் வித்தியாசமாகவும், உக்கிரமானதாகவுமிருந்தது. புலம்பெயர்ந்த முதற்பகுதித் தமிழரிடமில்லாத வாழ்பனுபவங்கள் இவர்களிடம் நிறையவிருந்தன. இவர்கள் பெருந்தேசிய இனவாதத்தின் கொடூரத்தினை மட்டுமல்ல, ஆயுதக்கலாச்சாரத்தின் கொடுமைகளையும் நேரடியாக அனுபவித்தவர்கள். தமது உயிர், உடமைகள் களவாடப்படுவதையும், எரியுண்டு போனதையும் தம் கண்களால் பார்த்தவர்கள். இறுதியில், உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடி வந்த இம்மக்கள், வந்த இடங்களில் எதிர்கொண்ட துன்பங்கள் ஏராளம்.

பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதைபோல இங்கு வந்த நாம் பாசிஷம், நிறவெறி, வேலையின்மை, குழந்தைகள் சுய அடையாளமற்றுத் தவித்தல் எனப் பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்கினோம்.

இந்த நிலமைகளிற்தான் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் சஞ்சிகை, பத்திரிகை, நாடகம், நடனம், இசை, ஓவியம், புகைப்படம், சினிமா, வானொலி, விளையாட்டுப்போட்டிகள் எனப் பலவேறு முயற்சிகள் கூர்மையாகத் தொடங்கின. இது காலத்தின் தேவையாகவும் இருந்தது. சொந்த நாட்டின் வாழ்பனுபவங்களைப் பதிவுகளாக ஆக்க முற்பட்டபோதும் இவற்றினை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள முற்பட்டபோதும், இன்னும் எமது வாழ்வுடன் இணைந்த எமது விடுதலைப் போராட்டம் தொடர்பான விடயங்கள் – நிலமைகள் – போக்குகள் தொடர்பாகவும், புலம்பெயர்ந்த வாழ்வில் முகங்கொடுக்கும் பிரச்சனைகள் தொடர்பாகவும் இந்த ஊடகங்கள் பேசத் தொடங்கின.

1960 – 1970களில் புலம்பெயர்ந்த தமிழர்களது அக்கறைகள் சமுதாயத்தின் மேற்தட்டுகளில் கலாச்சாரத் தொடர்புடையவைகளாக இருந்தன. லண்டனிலிருந்து 1970ன் தொடக்கங்களில் "லண்டன் முரசு" என்ற சஞ்சிகை வந்திருக்கிறது. இது மரபுசார்ந்த விடயங்களினையும், அவர்களது சுய அடையாளத்தின் நெருக்கடி சார்ந்தும் கவனம் கொண்டிருந்தது. ஆனால், 1983களின் பின்னால் தோற்றம் பெற்ற சஞ்சிகைகளின் அக்கறைகள் புதிய பரிணாமங்களைக் கொண்டிருந்தன.

பொதுவாகப் பத்திரிகைகள் ஜனரஞ்சக நோக்கோடு வெளிக்கொணரப்பட்டவையாகும். இவை பரபரப்பிற்கும், நடைமுறை அரசியல் செய்திகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்தன. மாறாக, நமது வாழ்நிலையில் நாம் எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சனைகளையும், விடயங்களினையும், விஞ்ஞானபூர்வோடு ஆராயத்தவறி விட்டன. ஆனால், சஞ்சிகைகள் அவ்வாறு தோற்றம் பெறவில்லை. நேரமின்மை, நிதிப்பிரச்சனை, வெளிநாட்டு வாழ்வின் உத்தரவாதமற்ற தன்மை, உரியநேரத்திலும், போதியளவிலும்ஆக்கங்கள் வந்துசேராமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய குப்பைச் சஞ்சிகைகளின் ஆதிக்கம் போன்ற விடயங்கள் ஏராளம். அந்த வகையில் புலம்பெயர்ந்த தமிழர் வாழ்வில் சஞ்சிகைகளின் பங்கும், தாக்கமும் அதிகமெனச் சொன்னால் இது மிகையாகாது.

ஒருபுறம் அரசியல், ஸ்தாபனச் சார்பின்றி வரும் சஞ்சிகைகள், மறுபுறம் ஸ்தாபனச் சார்புகளுடன் வரும் சஞ்சிகைகள், சஞ்சிகைகளின் பின்னணியில் உள்ளவர்களது அக்கறை, அரசியல் – சமூக – கலை – இலக்கியம் – பொருளாதாரம் பற்றி அவற்றில் எழுதுவோரது பார்வை போன்றன ஒரு சஞ்சிகையின் தரத்தினை நிர்ணயம் செய்கின்றன.

இவைகளில் நமது தேசத்தில் நிகழும் விடுதலைப் போராட்டம், இன்று நிகழும் சம்பவங்கள், எமது மண்ணிலான இவர்களது வாழ்பனுபவங்களின் ஆதிக்கம் அதிகம் இருந்தாலும் அவை தவிர்க்கமுடியாதவையே. இவை எழுத்தாளர் மனதிலிருந்து இயல்பாக எழுபவை. இவைகளை விடப் புலம்பெயர்ந்த வாழ்வின் துன்பங்களையும், நெருக்கடிகளையும் கோடிட்டுக் காட்டும் ஆக்கங்களும் இடம் பெறுகின்றன. இந்த வகையில் பல கவிதைகளும், சிறு கதைகளும் புலம்பெயர்ந்த வாழ்வினது பிரச்சனைகளின் மையங்களைத் தொடுகின்றன.

மேலும் இந்தப் புலம்பெயர்ந்த வாழ்வு நல்ல புதிய எழுத்தாளர்களை சிருஷ்டித்திருப்பதுமன்றி, புலம்பெயர் இலக்கியம் புதிய வினாக்களையும் நம்மத்தியில் எழுப்பியிருக்கின்றது. இவை புலம்பெயர்ந்த நம் மத்தியில் நமது இருப்புத்தொடர்பான கனமான பல கேள்விகளையும் எழுப்புகின்றன.

இலக்கியம் அடிப்படையில் மனித வாழ்வு நிலையிலிருந்து பிறக்கின்றது. அதற்குக் கிடைக்கும் களம் சமூகம். அது தன்னைப் பிரசவித்த சமூகத்தினை மாற்ற முயல்கிறது. அதிலே ஒரு சிறு சுவாலையை ஏற்படுத்த விரும்பினாலும், அதன் தொடக்கம் ஏற்கனவே உள்ளதிலிருந்துதான் பிறப்பெடுக்க முடியும். இங்கே யதார்த்தபூர்வமான சூழல்களும், அதிலியங்கும் யதார்த்தபூர்வமான மாந்தர்களுமே இலக்கியப் படைப்பின் வெற்றி, தோல்வியை நிர்ணையிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

புலம்பெயர்ந்த தமிழர் வாழ்வில் சஞ்சிகைகளைப் போன்றே நாடகங்களும் பாரிய வளர்ச்சியடைந்துள்ளதை நாம் காணலாம். தீவிர உணர்வுடன் பார்வையாளனை உருவாக்கும் முயற்சியில் ஆவேசமாகச் செயற்பட்டு வருபவர்களும் புலம்பெயர்ந்த நம் மத்தியில் இருக்கிறார்கள். இந்த முயற்சியும் சஞ்சிகைகளைப் போன்றே அரசியல், ஸ்தாபனச் சார்பின்றியும், சார்புடனும் நடைபெற்று வருகின்றன. நமது தேச விடுதலைப் போராட்டம், போராளிகளின் வாழ்வு, மக்களின் துன்பங்கள், அவர்களது கடமைகள், புலம்பெயர்ந்த வாழ்வின் நெருக்கடிகள் எனப் பல்வேறு விடயங்களில் அவை கருக்கொண்டிருக்கின்றன. கூடவே, மொழிபெயர்ப்பு நாடகங்களும் அரங்கேற்றப்பட்டுள்ளன. அதுமட்டுமின்றி, நாட்டுக்கூத்து வடிவங்களையும், நவீனநாடகத்தினையும் இணைத்துப்புதிய மெருகோடும் நாடகங்கள் மேடையேறி இருக்கின்றன. நாட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்துகளும் பரவலான மேடைகளைக் கண்டிருக்கின்றன. பல இளைய தலைமுறையினரின் முயற்சியினால் நமது பாரம்பரிய நாட்டுக்கூத்து வடிவங்கள் நம்மத்தியில் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழ்விலிருக்கும் நேரப்பிரச்சனை இந்த முயற்சிகளைப் பாதிக்காமலில்லை. இவைகளை மீறியும் பரிசோதனை முயற்சிகளும் நாடகங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. நமக்கென ஒரு கலை வடிவத்தை உருவாக்க வேண்டுமென்ற அவாவே இந்த வெளிப்பாடாகும்.

ஒரு சமூகப் பிரச்சனையைக் கருவாகக் கொண்டு நாடகம் தயாரிப்பவர்கள் இந்தப் பிரச்சனையின் உள்ளும், புறமும் சிந்தித்தால் போதுமா அல்லது அதன் எதிர்காலத் தீர்வு எப்படி இருக்கப் போகிறது என்பதினையும் சேர்த்துச் சொல்ல வேண்டுமா? பிரச்சனையைச் சுட்டிக்காட்டி அதைப் பார்வையாளனை உணர வைத்தாலே அது பெரியதொரு சாதனையே. அதற்கு மேலே சென்று, அதுதான் அதன் தீர்வெனப் பார்வையாளன் நெஞ்சில் கோடிட்டுக் காட்டிவிட்டால் அதனை விடப் பெரியதொரு சாதனை இல்லை எனறே சொல்லலாம். ஆனால் நடிகனைச் சூழலுக்குச் சம்பந்தமில்லாமல் தான் நினைக்கிற சமூக மாற்றத்திற்கான இயக்கத்தில் அவனை இழுத்து விடுவாராயிருந்தால் அங்கே பிரகடனமும், பிரச்சாரமும் தானிருக்கும். மாறாக, பாத்திரப் படைப்பு சிதைந்து விடும். தான் சொல்ல வருகின்ற செய்தியினைப் பார்வையாளர் நெஞ்சில் உருவாக்க முடியவில்லையென்றால் அங்கே படைப்பாளி தோற்றுப் போய் விடுவான். நாடகத்தின் வெற்றி இதிலேயே அடங்கிக் கிடக்கிறது. ஒரு படைப்பாளி வாசகனின் அல்லது பார்வையாளனின் இதயத்தினைத் தொடவேண்டும், அவனுக்கு உணர்வு பூர்வமான ஒரு உந்துதலையும், உத்வேகத்தையும் கொடுக்கவேண்டும்.

எனவே ஒரு படைப்பாளி இரு விடயங்களைக் கவனத்திற்கொள்ளவேண்டும்:

1. பார்வையாளனை உணர்வு பூர்வமாகப் பாதிப்படையச் செய்யவேண்டும். இயல்பான கதை நகர்வினாலும், கதாப்பாத்திரத்தின் யதார்த்தபூர்வமான இயக்கத்தினாலுமே அது சாத்தியமாகும்.

2. யாருக்காக இப்படைப்பு படைக்கப் படுகிறது என்பதினையும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

ஒரு படைப்பானது யதார்த்த பூர்வமான சூழல்களை உண்மைபூர்வமாகச் சித்தரிப்பதன் மூலம்தான் காலம் காலமாக ஆதிக்கம் செலுத்தி வருகின்ற மாயைகளைத் தகர்த்தெறிய முடியும். வாழ்க்கை என்பது படைப்பாற்றல் மிக்கது, முன்னேறிச் செல்வது, தன்னைத்தானே தொடர்ந்து புதுப்பித்தும் கொள்வது. வாழ்வின் நோக்கமென்பது மானுடத்தின் வளர்ச்சிக்காக ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ளிருக்கும் ஆற்றலை, ஆளுமையை வெளிக்கொண்டு வருவது. மனித வாழ்வென்பது மேடுபள்ளங்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாண்டி ஓடும் ஜீவநதி என்பதினை உணர்ந்து, உருவாக்கப்படும் கலை – இலக்கிய வடிவங்கள் அவசியமானதாகும்.

இசை – நடனம் ஆகிய துறைகளைப் பொறுத்தவரை, பொதுவாக மேல்தட்டு – நடுத்தர வர்க்கத்தினர் இத்துறைகளில் அதிக கவனம் செலுத்துவது குறிப்பிடத்தக்கது. எல்லோரையும்போல நமது பிள்ளைகளும் இத்துறையில் ஈடுபடவேண்டும் என்ற மனோபாவத்திலிருந்து விடுபட்டு, இத்துறையில் ஈடுபடுவோருக்குக் கூடிய ஊக்கமளிக்கப்பட்டு இத்துறை ஒரு ஆக்கபூர்வமான வளர்ச்சியை நோக்கி அமைய ஆவனசெய்ய வேண்டும். ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தினருக்கும், ஒரு குறிப்பிட்ட இடத்திற்கும் உரிய கலையாக இல்லாமல், மூலை முடுக்கெல்லாம் ஒலிக்கும் கலையாக இவை மிளிரவேண்டும். நாடகம், சினிமா போன்ற துறைகளில் இசையுடன் நடனமும் நிறையப் பங்களிப்பினை வழங்குகின்றன. எனவே, கற்றதையே மீள ஒப்புவிக்கும் மனோபாவம், இந்திய இசை – நடன வடிவங்களில் தங்கியிருத்தல் போன்றவற்றிலிருந்து விடுபட்டு நமக்கென ஒரு கலைமரபை உருவாக்கும் பணியில் இசை – நடனத்துறையும் முழுமூச்சாக ஈடுபடவேண்டும். இதற்குத் தேடல் மிக அவசியமாகும். மூன்றாந்தர சினிமாப் பாடல்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தினை நாம் நல்லதொரு இசைக்குக் கொடுப்பதில்லை. நமது முன்னோர்களின் பொக்கிஷமான கிராமிய – நாட்டார் பாடல்களுக்கு ஒரு இசை வடிவம் கொடுப்பதற்கு இத்துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் முயற்சியெடுப்பது அவசியமாகும். சுருங்கச் சொன்னால், இசையும், நடனமும் வெறும் நுண்கலையாக மட்டுமிராது, பயன் கலையாகவும் இருக்க வேண்டும்.

ஓவியம் – புகைப்படம் – சினிமா நல்ல கலை வடிவங்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாகப் புலம்பெயர்ந்தோர் வாழ்வில் இதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. ஒரு சிலர் இத்துறையில் முயற்சிகள் செய்திருந்தாலும், அதற்கான ஊக்கமும் ஒத்துழைப்பும் நம்மத்தியிலிருந்து அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அதற்கு இக்கலைகள் பற்றிய முக்கியத்துவத்தினை உணராமையே காரணம். சஞ்சிகைகளும், நாடகங்களும் ஒரு காத்திரமான பங்களிப்பினை எப்படி ஒரு சமுதாயத்திற்கு வழங்க முடியுமோ, அப்படி இக்கலைகளினாலும் முடியும் என்பதினை உலக வரலாற்றில் நாம் காணக் கூடியதாக இருக்கிறது.

ஆனால், பொழுதுபோக்கு என்ற போர்வையில் இன்னும் மூன்றாந்தர இந்தியத் திரைப்படங்களிலேயே நாம் தங்கி நிற்கிறோம். இவை எமது வாழ்வின் முன்னேற்றத்திற்குப் புதிதாக சொல்லித் தருவதென்பது எதுவுமில்லை. மாறாக நமது வாழ்வின் பிற்போக்குத்தனங்களுக்கும், இழிநிலைகளுக்குமே துணைபோகின்றன. வருகின்ற ஒருசில காத்திரமான இந்தியப் படங்கள் இக்கீழ்த்தரமான படங்களுடன் போட்டி போட முடியாத நிலையிலேயே இருக்கின்றன. சீனா, லத்தீன் அமெரிக்கா, வங்காளம் போன்று பல நாடுகளில் சினிமாக் கலை சாதித்ததும், சாதிப்பதும் ஏராளம். அவை தரத்தில் மிக உயர்ந்தவையாகவே இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மத்தியில் இருக்கும் நல்ல ஆற்றல் மிக்க ஓவிய - புகைப்படக் கலைஞர்களை இனங்கண்டு அவர்களுக்கு ஊக்கமும், ஒத்துழைப்பும் அளிப்பதினூடாகக் காலப்போக்கில் இவைகளையும் ஒரு முக்கியமான கலைகளாக மாற்றமுடியும். இன்று உலக நாடுகளில் இத்துறைகளினது தேடல் மேலும் தீவிரமடைந்;து வருவதினைக் காணலாம். தத்துவத்தினைப் போலவே இக்கலைகளும் உண்மையைத் தேடிப் புறப்பட்டுவிட்டது.

எல்லாக் கலை - இலக்கிய வடிவங்களுக்கும் உரிய பொதுத்தன்மைகள் வானொலிக்கும் உரியவையாகும். புலம்பெயர்ந்த வாழ்வில் பல்வேறு பிரச்சனைகளின் மத்தியில், ஒரு குறிப்பிட்ட பயனுள்ள நேரத்தில் ஒலிபரப்புவது சிரமமே. ஆயினும் வானொலி என்றவுடன், அது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்ற நினைப்பை அதன் நிகழ்ச்சி நமக்கத் தரக்கூடாது. இம்முயற்சிகள் ஒரு காத்திரமான பங்களிப்பினை வழங்கவேண்டுமென்பதில் நாம் அக்கறையுடன் இருக்கவேண்டும். நமக்கென எல்லாத் துறைகளிலும் ஒரு சுய அடையாளத்தினை, ஒரு புதிய தேடலை வரித்துக்கொள்ளக் கூடிய வகையில் பல கருத்துக்களங்களுக்கான இடமளிக்கப்படவேண்டும். இந்நிகழ்சியினூடே நம்மத்தியில் இன்னும் விடை காணப்படாத பல கேள்விகளுக்கு விடை காணக் கூடிய வகையில் பல கருத்துப் பரிமாற்றங்களுக்கும் களம் அமைத்துக் கொடுக்கப்படுவதும் அவசியம். அதற்குப் போதிய நேர வசதியும், உரிய ஒத்துழைப்பும் அவசியமானது. மேலும் புலம்பெயர்ந்த தமிழ்க் குழந்தைகளை மையமாகக் கொண்டு செயற்பட்டு வரும் தமிழ்ப்பாடசாலைகள், விளையாட்டுப்போட்டிகள் என்பனவும் புலம்பெயர்ந்த நம் மத்தியில் நல்ல புரிந்து கொள்ளலையும், சமூக உணர்வுகளையும் ஏற்படுத்தக் கூடியவை.

இவ்விடத்தில் இரு முக்கிய விடயங்களைக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

1. கருத்துச் சுதந்திரம் - பேச்சுச் சுதந்திரம் - எழுத்துச் சுதந்திரம்.

புலம்பெயர்ந்த தமிழர் வாழ்வில் இவ்வுரிமைகளுக்கு எதிராக நிகழும் மனிதவுரிமை மீறல்கள் அனைத்தும் கண்டிக்கப்பட வேண்டியவை. பரீஸ் ஈழ நாடு பத்திரிகை தாக்கப் பட்டது, கனடாவில் "தேடகம்" நூலகம் எரிக்கப்பட்டமை, பரீஸில் வெளியீட்டாளர் சபாலிங்கம் காட்டுமிராண்டித்தனமாகச் சுட்டுக் கொல்லப்பட்டமை போன்ற நிகழ்வுகள் நமது விழுமியங்களின் மீதே கேள்விகளை எழுப்புகின்றன.

2. புதிய தேடல்களை நோக்கி ஒரு பொதுவமைப்பு.

நாம் போராட்டச் சூழலில் வாழாவிட்டாலும், நமது போராட்டத்தின் மீதும், இலக்கியத்தின் மீதும் அக்கறை கொண்ட பலர் நம்மத்தியில் வாழ்கிறார்கள். இவர்களை இணைத்து அரசியல் - ஸ்தாபனச் சார்பின்றி இயங்கக் கூடிய ஒரு பொதுவமைப்பு நம்மத்தியில் அவசியம்.

இங்கிருந்து தமிழர்கள் பலரைத் திருப்பியனுப்ப நோர்வே அரசாங்கம் முயற்சி எடுத்து வருகின்ற இவ்வேளையில் அதனைக் கண்டித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகமாக பலவமைப்புக்கள் இணைந்து, ஒரு அமைப்பினை உருவாக்கியதுபோன்று சமூக – அரசியல் – கலை – இலக்கிய – பொருளாதாரத்துறைகளில் புதிய தேடல்களை நோக்கி இயங்க ஒரு பொதுவமைப்பு உருவாக்கப்பட்டு எந்த அரசியல் – ஸ்தாபனச் சார்பின்றியும் செயற்படின் பயனுள்ளதாக இருக்கும்.
வருடாவருடம் ஐரோப்பிய நாடுகளில் நடாத்தப்படும் இலக்கிய மாநாடு இலக்கியத்துறையில் புதிய தேடல்களுக்கும், சிந்தனைகளுக்கும் இடமளிப்பதுபோல, இப்பொதுவமைப்பினூடாகவும் எல்லாத்துறை சார்ந்தும் ஒரு புதிய தேடலை நோக்கி நாம் செல்லலாம். நம்மத்தியில் பரஸ்பர ஒற்றுமையும், நம்பிக்கையுமிருந்தால் ஏன் இது சாத்தியமாகாது?

இவைகள் போக, புலம்பெயர்ந்த தமிழர் வாழ்வில் நம் சமுதாயமரபின் இழிவான சில அம்சங்களை இன்னமும் நாம் கட்டிப்பிடித்துக்கொண்டிருக்கிறோம். சாதி – மத வேறுபாடுகள், பெண்ணடிமைத்தனம், சீதனமுறை போன்றவற்றினை இங்கு குறிப்பிடலாம். விஞ்ஞானமும் நாகரீகமும் மிகவேகமாக வளர்ந்து வருகின்ற இவ்வுலகில் இவ்விழிவான அம்சங்களைப் பேணி வருகின்றோரை என்ன சொல்ல? இது அவர்களின் வக்கிரத்தன்மையா அல்லது மனச்சிக்கல்களின் வெளிப்பாடா?

மேலும் இந்திய வீடீயோ திரைப்படங்களினதும், குப்பைச் சஞ்சிகைகளினதும் செல்வாக்கு கறையான்போன்று நமது சிந்தனைகளை அரித்துத் தின்பவை. நமது புலம்பெயர்ந்த சமூகத்தினை நாடி பிடித்துப் பார்த்து, நோய்களை அடையாளம் கண்டு, அதற்கு நல்ல வைத்தியம் செய்ய வேண்டிய தேவையும், அவசியமும் நம் மத்தியில் உண்டு. இவற்றைச் சாதிப்பதற்குத் தனி மனிதர்கள் போதாது. புரிந்துணர்வு, பரஸ்பர நம்பிக்கை, பொறுப்பான விமர்சனத்துடன் கூடிய செயற்பாடு அவசியம்.

ஒரு நாள் வரும்
எழுதுகோல்கள் நிற்கும் – பின்
கைகள் ஆயுதம் ஏந்தும்
இலக்கியம் இயல்பாகவே யுத்தத்திற்கு
இட்டுச் செல்லும்.

– ஜீன் போல் சாத்ரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுக்கலாச்சாரப் போக்கும் உலகப்பார்வையும்

*–ச.விமலநாதன்–*

கடந்த காலங்களில் சந்தித்த கலை இலக்கியவாதிகள், புத்திஜீவிகள் மற்றும் எமது சமூகத்தின் வளர்ச்சியில் அக்கறைகொண்ட சமூகப்பிரக்ஞையுடைய மனிதர்கள், அவர்களுடன் பரிமாறிக்கொண்ட கருத்துக்கள் என்பவற்றிலிருந்து கிடைக்கப்பெற்ற அறிவையும் அனுபவங்களையும் ஒரு முழுமைப்படுத்தப்பட்ட வடிவமாக்குவதும் புதிய சிந்தனைப் போக்குகளுக்கு தளம் அமைத்துக் கொடுப்பதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 1. கலை கலாச்சார வடிவங்களின் தோன்றலும் பரம்பலும்

மனிதன் கூர்ப்படையத் தொடங்கிய காலத்திலிருந்து மனிதனுக்கும்–இயற்கைக்கும் ஒருவகையான உறவுமுறையும், மனிதர்கள்–மனிதர்களுக்கிடையிலே ஒருவகையான உறவுமுறையும் நிலவிவந்தது. இவ்விரு உறவுமுறைகளும் பல பொதுவான அம்சங்களைக் கொண்டிருந்ததோடு இதன் அடிப்படையிலே சமூகப் பிராணியான மனிதனிடத்திலே, ஒரு சமூகவாழ்வையும், வாழ்முறையையும் முழுமையாக குறிக்கும் விதத்திலேயும், அதில் இடம்பெறும் அம்சங்களை நெறிப்படுத்தும் வகையிலேயும் உருவாக்கப்பட்டது தான் – மனித கலாச்சாரமாகும். இச் சமூகவாழ்விலே இடம் பெறும் அம்சங்களை அழகியலினூடாக வெளிப்படுத்துவதும், புதிய கற்பனை வடிவங்களை பிரசவிப்பதுமே கலை–இலக்கியங்களாகும்.

மனித அபிவிருத்தியுடன் மனிதனுக்கும் இயற்கைக்குமான உறவும், மனித உறவுகளும் மாற்றம்பெற்று ஒரு சந்தையின் உருவாக்கமும் புதிய மனித உறவுமுறைகளும், பண்டங்களுக்கிடையிலான உறவுமுறைகளும் தோன்றலாயின. இச் சந்தையின் உருவாக்கம் மனிதனின் சமூகவாழ்வியலிலும் வாழ்முறையிலும் பல தாக்கங்களை ஏற்படுத்தியது. இது இயல்பாகவே இவ்வாழ்வியலை வெளிப்படுத்தும் அழகியலான கலைஇலக்கிய வடிவங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தியது.

இச் சந்தையின் உருவாக்கம் பல புதிய உற்பத்தி உறவுகளை உருவாக்கின. தன்நிறைவு, பண்டமாற்று என விருத்தியடைந்து வந்த உற்பத்தி முறைகள் பின்பு இலாபநோக்கினை இலக்காகக் கொண்டு வளர்ச்சி பெற்றது. இவ் இலாபநோக்கிலமைந்த உற்பத்திமுறையானது படிப்படியாக மனித வாழ்வியலை வெளிப்படுத்தும் அழகியலான கலைஇலக்கிய வடிவங்களுக்கும் தொற்றிக் கொண்டது. இந்தச் சந்தை – உற்பத்திமுறைகளின் அடிப்படையிலேயே ஒரு குறிப்பிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தின் வர்க்கங்களும் உருவானவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ் அபிவிருத்தியுடன் சமூக விழுமியங்களின் மாற்றமும், மீளுற்பத்தியும், புதிய வடிவங்களின் பரம்பலும் காலத்திற்குக் காலம் இடம் பெற்றுவந்தன. இம் மாற்றங்கள் வர்க்கம், இனம், சாதி, பால், குறிப்பிட்ட சமூகத்தின் அபிவிருத்திமட்டம் என்பவற்றைப் பொறுத்து வேறுபட்டிருந்தது. கலை கலாச்சார வடிவங்கள் பல்கிப்பெருகி ஒவ்வொரு சமூகத்திலும் அச் சமூகத்திற்கும் இயற்கைக்குமான உறவு, அச் சமூகத்தின் உற்பத்திமுறை என்பவற்றின் அடிப்படையில் ஒரு கலாச்சாரக் கழஞ்சியமாகக் பாதுகாக்கப்பட்டு வந்தது. இக் கழஞ்சியம் ஒன்றிலிருந்து ஒன்றிற்குச் செல்கின்றது. இவ்வாறு அது செல்லும் போது மாற்றமடையக் கூடியதாகவும் உள்ளது. இவற்றுள் சில ஒரு தொடர்ச்சியைக் கொண்டிருக்கக் கூடியன, வேறும் சில படிப்படியாக தொடர்புகள் அறுந்து போகின்றன. இவ்வாறு ஒன்றிலிருந்து ஒன்றிற்குக் செல்லும் போது பல பழைய விழுமியங்கள் களையப்பட்டு, புதிய விழுமியங்கள் சேர்த்தும் கொள்ளப்படுகின்றன. இதனை விஞ்ஞான ரீதியில் நோக்குவோமாயின் சமூகம் ஒரு ஆய்வுகூடமாகவும், கலை இலக்கியவாதிகளும், அரசியல்வாதிகளும் ஆய்வாளர்களாகவும் செயற்படுகின்றனர். இதில் பல்வேறுபட்ட கருத்தமைவுகளும், பார்வைகளும் இருப்பது இயல்பானதே. இதில் ஆதிக்கம் செலுத்தும் கருத்தமைவும், (ஆதிக்கம் செலுத்தும் கருத்தமைவே சிறந்தது என்பது அர்த்தமல்ல) அதனடிப்படையில் உருவான மனித விழுமியங்களும், கலை இலக்கிய வடிவங்களுமே முதன்மைபெற்று ஆட்சி செலுத்துகின்றன.

## 2. நவீன சமூகம்

முன்பு கூறியது போல் இலாபநோக்கிலமைந்த உற்பத்தி, பண்டமயமாக்கல் என்பன உற்பத்தியாளர் – இலாபமடைவோர் என வேறுபட்ட பிரிவினரை சமூகத்திலே உருவாக்குகின்றது. சந்தையில் இலாபமடைவதையே நோக்கமாகக் கொண்டவர்கள் அவ்வாறான உற்பத்திகளை ஊக்குவிக்கின்றனர். இவ்வாறு இலாபமடைவோராலேயே அச் சமூகத்தின் அரசும், அதிகார நிறுவனங்களும் வழிநடத்தப்படுகின்றன. ஒரு சிறு கும்பலான இப்பிரிவினர், குறிப்பிட்ட சமூகத்தின் பெரும்பான்மை மக்களின் உழைப்பிலுருவான உற்பத்தியைச் சந்தைப்படுத்தி ஏப்பம் விடுபவர்களாகவே உள்ளனர். இவர்களின் மேலாதிக்கத்தில் உருவாக்கப்படும் அரசியல் அமைப்புக்களும் ஆதிக்கம் செலுத்துகின்ற கலாச்சார வடிவங்களும் இன்று மேற்கத்தைய நாடுகளில் வெற்றியடைந்திருப்பதை நாம் காணலாம்.

இன்றைய யதார்த்தத்தில், ஆதிக்கம் செலுத்தும் கலை கலாச்சார வடிவங்கள் என்னும் போது இவை மனிதனுக்கும் – இயற்கைக்கும், மனிதனுக்கும் –மனிதனுக்கும் இடையிலான உறவினை துண்டாடி அல்லது கொச்சைப்படுத்தி மனித வாழ்முறை, அதை வெளிப்படுத்தும் அழகியல் என்பவற்றை ஒரு பண்டமாக மாற்றி சந்தைப்படுத்துகின்றன. இவ்வாறு மனித உணர்வுகளையும், உறவுகளையும் துண்டாடிச் சிதைப்பது என்பது இலகுவான காரியமல்ல. ஆனால் இதைச் சாதிக்க சிறுகும்பலான இவ் அதிகார அமைப்புக்கள் பரந்துபட்ட மக்கள் மீது பாவிக்கும் தந்திரோபாயங்களையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிட்ட செயற்பாடுகளையும் நோக்குவோம்.

இவ் அதிகார அமைப்புக்கள் தாம் அடையும் இலாபத்தில் ஒரு சிறு தொகையை வீசியெறிந்து, கல்வி அமைப்புக்கள், கலாச்சார நிறுவனங்கள், வெகுஜன தொடர்பு சாதனங்கள், என பல்வேறு ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனங்களினூடு செல்வாக்குச் செலுத்தி, கலை கலாச்சாரமென்பது, விழுமியங்களுக்கும், உணர்வுகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு பண்டம் என்ற கருத்தமைவை பரந்துபட்ட மக்கள் மத்தியில் உருவாக்குவதோடு, மக்களின் சிந்தனையையும் மழுங்கடித்து வருகின்றது.

வெற்றிகரமாக மேற்கொள்ளப்படும் இப்பண்டமயமாக்கல் கருத்தமைவானது பாடசாலை, வகுப்பறை போன்ற பெரிய சமூக அலகுகளிலிருந்து குடும்பம், தனிமனிதன் என்ற சிறிய சமூக அலகுகள் வரை பாதிப்பை ஏற்படுத்தி ஆதிக்கம் செலுத்துகின்றது.

முதலாளித்துவம் வளர்ச்சியடைந்த நாடுகளில் பரந்துபட்ட மக்கள் மத்தியில் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலான, சொத்துப் பங்கீடு, வருமானப் பங்கீடு போன்றவற்றினூடு போலிச் சமத்துவமுலாம் பூசப்படுவதோடு, ஏனைய சமூகங்களோடு குறிப்பாக மூன்றாம் உலகநாட்டு மக்களோடு ஒப்பிடும் போது மேம்பட்ட மானுடப் பிறவிகளாக இந்நாட்டு மக்களை திருப்திப்படுத்தும் வகையிலான எண்ணக்கருக்கள் விதைக்கப்படுகின்றன. அத்தோடு இம்மக்கள் தமது உழைப்பினால் பெறும் வருமானத்தை அதாவது போலிச்சமத்துவ அடிப்படையில் பங்கீடு செய்யப்பட்ட மனித உழைப்பிற்கான கூலியை மீண்டும் சுரண்டுவதிலேயும் இவ் அதிகாரவர்க்கங்கள் குறியாய் உள்ளன. இதைத் திறம்பட நிகழ்த்துவதற்காக வாங்குதலைத் தூண்டும் வகையிலேயே(அதாவது நுகர்வுமையவாதத்தை ஒட்டிய) பிரச்சாரங்களும், விளம்பரங்களும் ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனங்களால் திட்டமிட்டுச் செய்யப்படுகின்றன. அத்தோடு உலகின் மூலை முடக்குகளெல்லாம் தமது சந்தைகளை உருவாக்கி தமது சீரழிவுக் கலை கலாச்சாரங்களின் பரம்பலை உறுதிப்படுத்துவதனூடாக ஒரு கட்டுக்கோப்பான வாழ்முறையைக் கொண்டுள்ள சமூகங்களில் சமநிலையைக் குழப்பி, குழப்பங்களை விளைவித்து மக்களின் சிந்தனை ஆற்றலை மழுங்கடிப்பதோடு அதனூடாகவும் தமது இலாபத்தை வெவ்வேறு வழிகளில் உலகளாவிய ரீதியில் உறுதிப்படுத்திக் கொள்ளுகின்றனர். இவ்வாறு இவர்களின் சதிகளுக்கு இலகுவில் இரையாவது இலங்கை போன்ற வளர்முக நாடுகளாகும். இவ்வாறு ஆதிக்கம் செலுத்துவோரிடையிலேயும் சந்தைகளுக்கான போட்டிகள் நிலவிவருகின்றன. இப்போட்டிகள் மேலும் மேலும் மனித சமூகத்தை சீரழிவுப்பாதையிலேயே இட்டுச் செல்கின்றன. அத்தோடு ஏழைச் சமூகங்களை மேலும் சீர்குலைத்து சின்னாபின்னமடைய வழிசமைக்கின்றன.

## 3. மாற்றுக் கலாச்சாரம்

மேற்கூறிய விளக்கங்களும், காரணங்களும் இயல்பாகவே ஆதிக்கம் செலுத்தும் கலாச்சாரப்பிடியிலிருந்து விடுபட்ட, மனித வாழ்வையும் சமூகத்தின் இருப்பையும் நிலைப்படுத்தும் கலாச்சாரத்தையும் அதனை வெளிப்படுத்தும் அழகியலான கலை இலக்கியவடிவங்களின் அவசியத்தையும் உணர்த்துவதனூடாக சமூக மேம்பாட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கிய மாற்றுக் கலாச்சாரத்தை வலியுறுத்தி நிற்கின்றது.

அந்த வகையிலே இவ் ஏகாதிபத்தியங்களின் பிடிக்குள் அகப்பட்டு நேரடியாகவும், மறைமுகமாகவும் பல நூற்றாண்டுகளாகச் சுரண்டப்பட்டு வரும் இலங்கை போன்ற வளர்முகநாட்டுமக்கள் என்றவகையிலும், இவ் ஏகாதிபத்தியங்களின் சுரண்டலுக்கு ஏதுவாக எமது நாட்டை தாரைவார்த்துக் கொடுத்து சிறுபான்மைத் தேசிய இனங்களை ஒடுக்கிவரும் சிறீலங்கா அரசிற்கு எதிராகப் போராடும் தமிழ்த் தேசியம் என்ற வகையிலும் எமது சமூகம், இனம், நாடு, பிராந்தியம் என உலகளாவிய கடமை ஒன்று எமக்கும் உண்டு. எமது தேசியவிடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்றபோது எமது கலை இலக்கியவடிவங்களின் பரிமாணங்களும் மாற்றமடைந்தன. ஆயினும் அவற்றின் தொடர்ச்சியான வளர்ச்சி மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்தது. இதற்கு எம்மிடையே நிலவிய, இன்றும் நிலவிவருகின்ற, இயக்கவாதம், குழுவாதம், தனிநபர்வாதம் போன்றவையே முக்கிய காரணங்களாகும். நாம் இவற்றிலிருந்து விடுபட்டு கருத்துமட்டங்களில் விவாதங்களை நடத்தவும், அவற்றிலிருந்து கற்றுக்கொள்ளவும் பழகிக்கொள்ளவேண்டும். இதைப் பரந்து பட்ட மக்கள் மத்தியில் கொண்டு செல்வதிலேயே எமது வெற்றி தங்கியுள்ளது. வெறும் பிரச்சாரத்தைமட்டும் குறிக்கோளாகக் கொண்ட கலை இலக்கியவடிவங்கள் ஒருவகையில் மக்களின் சிந்தனையை மழுங்கடித்து, மூளைச்சலவை செய்வனவாகவே இருக்கும். மாறாக விமர்சனப் பார்வை கொண்ட, யதார்த்தத்தில் இருந்து பிறக்கின்ற கலை இலக்கியவடிவங்களைப் படைக்க வேண்டும். இதைச் செய்யத் தவறும் எவரும் எம்மிடையே இன்னுமோர் அதிகார வர்க்கத்தை உருவாக்க வழிசமைத்த கலை இலக்கியவாதிகளாகவே இருக்க நேரிடும்.

இவ் ஆதிக்கக் கலாச்சாரத்தை முறியடித்து மாற்றுக்கலாச்சாரத்தை நிறுவுவதற்கு நாமும் சில நுட்பங்களைக் கற்றுக் கொண்டு அவற்றைக் கையாளவேண்டும்.

★ ஆதிக்கக் கலாச்சாரத்தை பறைசாற்றும் கலாச்சார நிறுவனங்களின் கருத்துருவாக்கத்தை முறியடித்து மாற்றுக்கலாச்சாரத்தை உருவாக்கும் கருத்தமைவை பரந்துபட்ட மக்கள் மத்தியில் உருவாக்கவேண்டும். இதற்காக எமது ஆழுமைக்குட்பட்ட நிறுவனங்கள் தொலைதொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவதோடு, இவற்றின் வீச்சத்தை விரிவுபடுத்தல்.

★ காத்திரமான படைப்புக்களை உருவாக்கி, காத்திரமான நிறுவனங்கள் மூலமாக பரந்துபட்ட மக்கள் முன் வழங்கல். அத்துடன் இவ்வாறான படைப்புக்களின் பரம்பலை விரிவுபடுத்தல்.

★ ஆதிக்கக் கலாச்சாரத் தளத்திற்கு ஈடான மாற்றுக்கலாச்சாரத் தளத்தை அமைத்து பல்நோக்குக் கொண்ட ஸ்தாபனமாக வெவ்வேறு மட்டங்களில் அதனை விரிவுபடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஆதிக்கக் கலாச்சார கலை இலக்கியவடிவங்களுடன் போட்டி போடக்கூடிய மாற்றுக் கலாச்சார கலை இலக்கியவடிவங்களை உருவாக்கும் பொருட்டு படைப்பாளிகளை ஊக்குவிப்பதும், அவர்கள் மத்தியில் போட்டியை உருவாக்குவதும், தொடர்ச்சியாக நடைபெறுவதுடன் அதனுடைய பரவலாக்கமும் முதன்மை பெற வேண்டும்.

★ இலாப நோக்கமற்ற ஆனால் வியாபார நோக்கிலான சந்தைப்படுத்தல் மூலம் வியாபாரரீதியில் வெற்றிபெறுவதின் ஊடாக மாற்றுக்கலாச்சார கலை இலக்கியவடிவங்களின் தொடர்ச்சியையும், பரம்பலையும் உறுதிப்படுத்தும் அதேவேளை புதிய வடிவங்களின் உருவாக்கத்திற்கு உதவியும், ஊக்கமும் அளித்தல்.

மேற்கூறிய அம்சங்களை கருத்திற் கொண்டு கலை இலக்கியவாதிகளும், புத்திஜீவிகளும், எமது சமூக மேம்பாட்டில் அக்கறை கொண்டு பல்வேறு ஈழத்தமிழ் ஸ்தாபனங்களில் அங்கம் வகிப்போரும் ஒரு பொது விவாதத் தளத்திற்கு வந்து கருத்துமட்டங்களில் ஆழமான விவாதங்களை நிகழ்த்தி பொது உடன்பாடுகளுடனும் புரிந்துணர்வுடனும் செயற்படவேண்டும்.

பொதுவான தேடலினூடாகவும், சமூக பொருளாதாரக் காரணிகளைக் கணக்கிற்கொண்டும் பாரம்பரிய கலைகலாச்சாரவடிவங்களை தொடர்ச்சியான விமர்சனத்திற்கு உட்படுத்த வேண்டும். இன்று கணிசமான அளவு ஈழத்தமிழர்கள் உலகின் பலபாகங்களிலும் குடியேறி வாழ்ந்துவருகின்றார்கள். எமது அடுத்த தலைமுறையொன்று நாம் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் வளர்ந்துவருகின்றது. இப்புதிய தலைமுறையின் எதிர்காலத்தைக் கணக்கிற் கொண்டு நாம் வாழும் இந்த சூழலில் இருந்து நல்ல விடயங்களைக் கற்றுக்கொள்வதோடு, எம்மிடமுள்ள பிற்போக்கான அம்சங்களை களைந்தெறிய வேண்டும். எமது பாலகர்கள் நடந்து செல்லக் கூடிய ஒரு சீரான பாதையை அமைக்கும் பொருட்டு தொடர்ச்சியான ஆய்வுகளும், விவாதங்களும் நடத்தப்பட வேண்டும்.

இக் கட்டுரை மிகவும் மேலோட்டமாகப் பரந்தளவில் விடயங்களைத் தொட்டுச் செல்வதனூடாக நாம் கணக்கிலெடுத்துச் செயற்பட வேண்டிய அடிப்படை அம்சங்களை சுட்டிக்காட்டுகின்றது. இதற்கப்பால் பல விடயங்கள் மிகவும் ஆழமாக ஆராயப்பட வேண்டியவை. அவ்வாறான சில விடயங்கள் கீழே:

■ இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஒரு பிராந்திய வல்லரசாகவும், தன்னகத்தேயுள்ள பல் தேசிய இனங்களின் மீது இனஒடுக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டிருக்கும் இந்தியாவானது தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் அச்சுறுத்தலாக இருந்துவந்துள்ளது. இந்தியாவில் உருவாக்கப்படும் ஆதிக்கம் செலுத்தும் கலைப்படைப்புக்கள் இலாபநோக்கிலே படைக்கப்படுவதோடு அது மக்களின் சிந்தனையை மழுங்கடிப்பதாகவே உள்ளது. மாறுபட்ட மக்களைச் சிந்திக்கத் தூண்டும் படைப்புகள் அதிகார வர்க்கத்தினரால் தணிக்கை செய்யப்படுகின்றன. இன்று ஈழத்தில் இவ்வாறான கலைவடிவங்களின் பரம்பல் கணிசமான அளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடை செய்யப்பட்டுள்ள போதும், புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியில் இந்திய குப்பைத் திரைப்படங்களும், திரை இசையும், இரண்டாந்தர நகைச்சுவையும் அதிகளவு ஆதிக்கம் செலுத்திவருகின்றன. இவற்றிற்கான மாற்றீடும்–இதில் புலம்பெயர்ந்து வாழும் கலை இலக்கியவாதிகளின் பங்கும்.

- முன்பு கூறியது போல் அதிகார வர்க்கங்களுக்குள் சந்தை தொடர்பான போட்டி நடந்துகொண்டேயுள்ளன. அந்தவகையில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களும் ஒடுக்குமுறைக்கெதிரான இன விடுதலைப்போராட்டங்களும் நிகழ்ந்து கொண்டிருக்கும் சமூக அமைப்புக்களில் போராட்டத்தை நெறிப்படுத்துவதிலும், மாற்றுக்கலாச்சார அடித்தளத்தை நிறுவுவதிலும் கலை இலக்கியவாதிகளின் பங்கு இன்றியமையாதது. யதார்த்தத்திலிருந்து விமர்சனப்பார்வைகொண்ட கலைப்படைப்புக்கள் உருவாகுவது அவசியம். கலை இலக்கிய வடிவங்கள் வெறும் பிரச்சார ஊடகங்களாக மட்டும் பயன்படுத்தப்படும் போது புதியதோர் அதிகாரவர்க்கத்தை நிறுவும் பணியை மட்டுமே ஆற்ற முடியும்.

- கலாச்சாரம் என்ற முகாமிற்குள் ஒளிந்து கொண்டு பெண்அடிமைத்தனத்தை முதன்மைப்படுத்தும் கருத்துக்களின்பரவலாக்கம் முதன்மைபெற்று விளங்குகின்றது. பெண்ணிலைவாதம், பெண்விடுதலை என்ற பதங்களின் சரியான புரிந்துகொள்ளல் அவசியம். இவை பொதுவாக ஆண்களுடன் சமமான உரிமை என்றே அர்த்தப்படுத்தப்படுகின்றன. ஆனால் ஒரு சமூகத்தில் உள்ள எல்லா ஆண்மகனும், அவனுக்கு உள்ள உரிமைகளும் தான் வாழ்க்கை நெறிமுறையல்ல, எனவே பெண்கள் ஒப்பீட்டு ரீதியான வரையறைகளைக் கடந்து ஒருபடி மேலே சென்று, வாழ்வியல் அடிப்படையிலான விளக்கங்களைத் தேடலும், அதனுடன் இணைத்துச்செல்லலும்.

- புலம்பெயர்ந்த வாழ்வில் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் மீது கொண்டிருக்க வேண்டிய அக்கறையும், அவர்களுக்கான சரியான வழிகாட்டலை வழங்கலும். வெறும் புழுகுப்போட்டிகளைத் தவிர்த்து தமது பிள்ளைகள் எதிர்நோக்கும் பொதுவான பிரச்சனைகள், குறித்த ஒரு தீர்வைக் கண்டடையும் பொருட்டு விடயங்களைப் பகிர்ந்து கொள்ளல். பிள்ளைகளுக்கு வீட்டிலும், வெளியிலும் நல்ல சூழலை அமைத்துக் கொடுப்பதும், நல்ல கலை இலக்கியவடிவங்களையும், கலாச்சாரவடிவங்களையும் அவர்கள் உள்வாங்கும் வகையிலும், குப்பைகளைக் களைந்தெறியும் வகையிலும் அவர்களை வழிநடத்தல். சூழலுக்கு ஒவ்வாத எதையும் பிள்ளைகள் மீது திணிக்காது இருப்பது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ நாம் வாழும் சூழலில் கலைகலாச்சார வடிவங்களின் பரிவர்த்தனையைக் கணக்கிற் கொண்டு, இலக்கிய வடிவங்களின் மொழிபெயர்ப்புகள், நாடகவடிவங்களின் உத்திமுறைகள் போன்றவற்றை நாம் வாழும் சமூகங்களிலிருந்து உள்வாங்கி எமது கலைவடிவங்களில் பயன்படுத்தலும், எமது வடிவங்களையும் மற்றைய சமூகங்களுக்கு கொண்டு செல்லல்.

இவ்வாறான முயற்சிகளை செய்ய முற்படும் போது எமது இன்றைய சூழலில் இயல்பாகவே எழுகின்ற மூன்று கேள்விகளை முன்வைத்து, இக்கட்டுரையினால் பயன் பெறவிரும்புவோரையே கருத்துப்பரிமாற்றங்களூடாக விடைகளைக் கண்டுகொள்ளுமாறு விட்டுச் செல்லுகின்றேன்.

1. *இவ்வாறான வேலைகளை எப்படிச் செய்வது ?*
2. *இவ்வாறான வேலைகளை யார் செய்வது ?*
3. *இவ்வாறான வேலைகளை எப்படிப்பட்ட ஊடகங்களினூடாக முன்னெடுத்துச் செல்வது ?*

<u>நன்றி</u>.



வேட்டி சால்வையுடன்
கைகளை இறுக்கக்கட்டி
கதையளந்து திரிந்ததனால்
அலைகின்றோம் நாம் இன்று
அகதிகளாய் அவனியெங்கும்!
–சங்கீதா–

குணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மொழிக் கல்வி

*- பானு -*

ஐரோப்பா முழுவதும் பரவிக் கிடக்கும் எமது தமிழ்ச் சமூகம் எதிர்கொள்ளும் பொதுவான முக்கியமானதொரு பிரச்சனை தாய்மொழிக் கல்வியை எமது குழந்தைகளுக்கு எவ்வாறு சரிவரப் புகட்டுவது என்பது. ஏற்கனவே ஒவ்வொரு நாடுகளிலும் அந்தந்த நகரங்களில் உள்ளவர்கள் தமிழ்ச் சிறுவர் பாடசாலையை அமைத்து இத்தகைய பணிகளில் ஈடுபட்டுள்ளார்கள் என்பது மன நிறைவைத் தருகின்ற விடயம். அந்தந்தப் பாடசாலையைச் சேர்ந்தவர்கள் தங்களது இயல்புக்கும் வசதிக்கும் ஏற்றவாறு தாய்மொழிக் கல்வியைப் போதித்து வருகின்றார்கள். இருந்தபோதிலும் இந்தக் கல்வி புகட்டலின் பெறுபேறுகள் இந்தப் பாடசாலைகள் கொண்டிருக்கின்ற பாடத்திட்டங்கள், கற்பித்தல் முறைகள் என்பவற்றிலேயே தங்கியுள்ளது.

எமது நாட்டிலோ அல்லது இந்தியாவிலோ தயாரிக்கப்படுகின்ற குழந்தைகளுக்கான பாடப்புத்தகங்கள் அங்கேயுள்ள சூழலுக்குத் தான் பொருந்த முடியும். முற்றிலும் மாறுபட்ட ஒரு சூழலில் வளர்கின்ற குழந்தைகளுக்கு மொழியைக் கற்பிக்கும்போது அந்த மொழியறிவின் அடிப்படை வேறொரு சூழலைச் சித்தரிப்பதாக இருக்குமிடத்து குழந்தைகள் சரியானபடி கிரகிக்க முடியாத நிலமை தான் ஏற்படும்.

உதாரணமாக "ஆ" என்ற எழுத்துக்குரிய சொல்லை விளக்குவதற்கு " ஆலமரம்" என்று கற்பிக்கும் போது குழந்தையின் எண்ணத்தில் படத்திலுள்ள ஆலமரம் முழுமையான வடிவத்தைத் தரப்போவதில்லை. அதே போன்று ஔவை, என்பதும் இவ்வாறே. அதிலும் குறிப்பாக இந்தியாவிலிருந்து எமக்குக் கிடைக்கின்ற பாலர் பாடப்புத்தகங்கள் சரியான கரிசனையோடு தயாரிக்கப்படுபவையாகத் தெரியவில்லை. இந்தப் புத்தகங்களில் ஆங்கில மொழிச் சொற்களினது உபயோகம் தமிழோடு கலந்து தமிழ்ச் சொல்லாகவே ஆகிவருகின்ற நிலமையைக் காணலாம்.

உதாரணமாக ஆரஞ்சு, ரயில், கார், ஐஸ்கிறீம் அத்தோடு ஒரேபடத்துடன் ஒரு பொருளைக் குறிக்கின்ற இரு சொற்கள் ஒரே புத்தகத்திலேயே இடம் பெற்றுள்ளது. "ர" என்ற எழுத்தை விளக்க "ரயில்" என்றும் "ண்" என்ற எழுத்தை விளக்க "புகைவண்டி" என்றும் ஆரஞ்சு என்பது வேறொரிடத்தில் கிச்சிலி எனவும் எழுதப்பட்டுள்ளது. நிறங்களைப் பற்றி விளக்குகின்ற இடத்தில்

ஆரஞ்சுப்பழம்– ஆரஞ்சு நிறம் எனவும்
கிச்சிலி– ஆரஞ்சு நிறம் எனவும் வருகின்றது.

தோடம்பழம் செம்மஞ்சள் நிறம் என்று நல்ல தமிழில் எழுத ஏன் முடியவில்லை என்று தெரியவில்லை. இது பிள்ளைகளைக் குழப்புவதாகவே அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையிலுள்ள புத்தகக் கடைகளிலும் இந்திய வெளியீடுகளே பெரும்பாலும கிடைக்கின்றது. தவிர இலங்கையில் தயாரிக்கப்படும் புத்தகங்களும் இந்திய வெளியீடுகளின் தழுவலாகவே உள்ளது. பிள்ளைகளுக்கு அடிப்படை மொழியறிவைக் கொடுக்கின்ற போது இந்த மொழிக்கலப்பு அவசியமற்றது. தவிர்க்கப்பட வேண்டியது.

இங்கேயுள்ள தமிழ்ச் சிறுவர்களில் பெரும்பாலானோர் சரளமாகத் தமிழைப் பேசுபவர்களாக இருந்தபோதிலும் எழுத, வாசிக்க முடியாதவர்களாகவே இருக்கின்றார்கள். ஐரோப்பிய நாடுகளில் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளைப் பொறுத்தவரை தமிழ் மூன்றாவது மொழியாகவே உள்ளது. இந்த நிலையில் தமிழிலுள்ள 247 எழுத்துக்களையும் பயிற்றுவிப்பது என்பது மிகவும் சிரமமான விடயமாகும். தங்களது குழந்தைகளுக்கு 247 எழுத்துக்களையும் எவ்வாறு எழுதப்படிக்கப் பழக்குவது என்று பல பெற்றோர்கள் அங்கலாய்ப்பதைப் பார்த்திருக்கின்றோம்.

இலகுவான முறையில் மொழியறிவைக் கொடுப்பதற்கு இங்கேயுள்ள சூழலுக்கேற்றவாறு பாடப்புத்தகங்களைத் தயாரிப்பது சிறந்த வழியாக அமைய முடியும். குழந்தைகளுக்கான பாடநூல் தயாரிப்பது இலகுவான விடயமல்ல. அதேவேளை முடியாததொன்றுமல்ல. முதலில் பாடசாலை நிர்வாகம், ஆசிரியர்கள், பெற்றோர்கள் இது விடயத்தில் ஒருமித்த கருத்திற்கு வருவது அவசியமாகின்றது.

நோர்வேயை உதாரணமாக எடுத்துக் கொண்டால் வெவ்வேறு நகரங்களிலுள்ள பாடசாலைகளுக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்துதல், மொழியைக் கற்பிக்கும் போது எதிர்நோக்குகின்ற பிரச்சனைகள், அவை எப்படித் தீர்க்கப்படலாம்–தீர்க்கப்படுகின்றன, கற்பித்தல் முறைகள் என்பவற்றைப் பரிமாறிக்கொள்ளுதல், விவாதித்தல். இந்தத் தொடர்புபடுத்தலினூடாக நல்ல உபயோகமான முடிவுகள், கருத்துக்களை வந்தடைய முடியும். ஒவ்வொரு நாடுகளிலுமுள்ளவர்கள் இவ்வாறு ஒரு பொதுமுடிவை வந்தடைகின்ற போது ஐரோப்பா முழுவதற்குமான ஒரு பொதுவான பாடத்திட்டத்தையோ அதனூடாக பாடப்புத்தகங்களையோ தயாரிக்க முடியும்.

இது எப்படிச் சாத்தியமாக முடியும்? என்ற கேள்விதான் எல்லோரது உள்ளங்களிலும் எழப்போகின்றது. இது சாத்தியமாகாது என்று நாம் முடிவு செய்வோமாயின் அது எங்கள் இனத்தினுடைய துர்ப்பாக்கியம். இந்தப் பிரச்சனைக்கு நாங்கள் எந்தளவு முக்கியத்துவம் கொடுக்கின்றோம் என்பதைப் பொறுத்துதான் சாத்தியப்படலும், சாத்தியமின்மையும் அமையும்.

ஐரோப்பாவைப் பொறுத்தவரை இத்தகைய ஒரு பொதுவான பாடத்திட்டம் உருவாக்கப்படுவதன் அவசியம் ஆங்காங்கே உணரப்பட்டாலும் அதற்கான குரல்கள் பலமாக ஒலிக்கவில்லை. இதை மறுபுறமாகச் சொல்வதென்றால் இந்தப் பிரச்சனை எதிர்காலத்தில் ஏற்படுத்தப்போகும் அபாயம் பற்றி நாங்கள் சரிவர உணரவில்லை, அல்லது உணரப் பலவந்தமாக மறுக்கின்றோம் என்பதுதான் உண்மை. ஐரோப்பாவைப் பொறுத்தளவில் ஓர் பொதுவான நிலைமை உருவாக்குவது முதலில் முடியாததெனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்தபட்சமாக அந்தந்த நாடுகளிலாவது பொதுவான பாடத்திட்டத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு செயற்பட முடியும், செயற்பட வேண்டும் என்று உறுதி செய்து கொள்வோம். சம்மந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் அக்கறை கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் விடுப்போம்.

நன்றி



சுதந்திரப்பறவைகள்

செபஸ்ரியஸ் யேசுதாசன்(லெனின்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் நாடொன்றில் தமிழ் கற்பித்தல் சில குறிப்புகள். . . சில அனுபவங்கள். .

- திருமதி ம. ஆதவன் -
(டென்மார்க்)

இலங்கையில் ஏழுவருடங்களாக ஆசிரியராக பணி புரிந்த நான் 1987இல் டென்மார்க்குக்கு வந்தேன். என்னைப்பற்றி என் கணவனிடம் கேட்டறிந்த அகதிகள் உதவிச் சங்கம் 1988ஆம் ஆண்டு தமிழ் படிப்பிக்குமாறு என்னைக் கேட்டது. நான் விரும்பிய, எனக்கு நிறைய அனுபவமுள்ள ஆசிரியர் பணியையே செய்யுமாறு கேட்கிறார்கள் என்று மகிழ்ந்தேன். நான் வசிக்கும் நகரத்திலேயுள்ள பள்ளிக்கூடத்தில் ஐந்து பிள்ளைகளுடன் மீண்டும் என் ஆசிரியர் பணியை ஆரம்பித்தேன். தொடங்கிய பின் தான் எனது முன்னைய அனுபவங்கள் செல்லுபடியாகாது என்பதை படிப்படியாக உணர்ந்தேன். நாளாக நாளாக எனக்கே என் படிப்பித்தல் முறையில் சந்தேகம் வரத் தொடங்கியது. இலங்கை பாடசாலைகளில் படிப்பிப்பதைப் போல் இங்கு படிப்பிக்க முடியாது என்பதை முற்றாக உணர எனக்கு கிட்டத்தட்ட 2 வருடங்கள் தேவைப்பட்டன. இந்தக் காலகட்டத்தில் நான் கண்டுகொண்ட உண்மைகள் என்னவெனில்:

1. பிள்ளைகள் தாய்மொழியை இரண்டாம் மொழியாகவே கற்கின்றனர். எனவே தாய்மொழியை முதல் மொழியாகக் கற்பிக்கப்படும் இலங்கையில் எழுதப்பட்ட பாடத்திட்டத்தை இங்கே உபயோகிக்க முடியாது. எனக்கென ஒரு பாடத்திட்டம் வகுத்துக் கொள்ள வேண்டும்.
2. ஆசிரியர் மாணவருக்குரிய இடைவெளியைக் குறைக்க வேண்டும். பண்டிதத்தன்மையை மாணவர்களிடத்தில் காட்டுவதை விடுத்து, அவர்களின் தரங்களை உணர்ந்து, நாமும் அவர்களில் ஒருவராய் மாறி, மிகவும் பக்குவமாய் . . . விளையாட்டு விளையாட்டாக படிப்பிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன்.

நான் கண்டு கொண்ட இந்த உண்மைகளை செயற்படுத்த முதலில் எனக்கு பயிற்சி தேவைப்பட்டது. அதனால் மிகவும் முயற்சி செய்து டெனிஷ் பாடசாலையொன்றில் பாலர் வகுப்பில் உதவி ஆசிரியராக வேலை தேடிக் கொண்டேன். இவ் வேலை ஒரு வருடம் தான் என்றாலும், நான் படித்த விடயங்கள், எனக்கு கிடைத்த பயிற்சி தமிழ் கற்பித்தலுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தது. இலஙகையின் பாடப்புத்தகங்களை மூட்டைகட்டி வைத்து விட்டு, நானே சிறு சிறு கட்டுரைகள், கதைகள் எழுதவும், டெனிஷ் மொழியிலிருந்து மொழிபெயர்க்கவும் தொடங்கினேன். அவற்றை தமிழ் வகுப்புகளில் பயன்படுத்துவதோடு, மொழிப்பயிற்சிகளை தயார் செய்ய பெரும்பாலும் டெனிஷ் மொழிப் பயிற்சிப் புத்தகங்களையே பயன்படுத்தினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்நாட்டைப் பற்றிய அறிவை வளர்க்கத் தேவையான தகவல்களை, கட்டுரைகளை இலங்கை பாடப் புத்தகங்களிலிருந்து எடுப்பேன். இப்படிப்பித்தல் முறையினால் மாணவர்கள் வகுப்புகளில் குழப்பமடையாமல் படிக்கவும், வகுப்புகளுக்கு விருப்பத்தோடு வரவும் கூடியதாக இருந்தது. இது எனது தனிப்பட்ட முயற்சியின் வெற்றியென்றே கருதுகின்றேன். இப்பொழுது நான் 3 நகரங்களில் கிட்டத்தட்ட 80 மாணவர்களுக்கு ஆசிரியராக வேலை பார்க்கிறேன்.

எனினும், தமிழ் ஆசிரியர் என்ற ரீதியில் நான் அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும் இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகின்றேன்.

1. மாணவர்களின் தரம்.
2. பெற்றோர்களின் ஒத்துழைப்பு.
3. நேரம் போதாமை.

## மாணவர்களின் தரம்:

மாணவர்களின் தமிழ் மொழி அறிவின் தரத்தை வளர்ப்பதில் என்னாலான முயற்சிகளை செய்து கொண்டு வருகின்றேன். இம் மாணவர்களை இருவகையில் அடக்கலாம். முதலாவது வகையினர் இலங்கையில் கீழ் வகுப்புகளில் படித்துவிட்டு வந்தவர்கள். இரண்டாவது வகையினர் இங்கேயே பிறந்து, பராமரிப்பு நிலையங்களில் கூடுதலான நேரங்களில் விடப்பட்டதால் டெனிஷ் நன்றாக கதைக்கக் கூடியவர்கள். இவர்கள் தமிழறிவில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளார்கள்.

இதில் முதலாவது வகையினருக்கு ஓரளவுக்கு அடிப்படை மொழியறிவு இருக்கின்றது. எனினும் இவர்களின் கூடுதலான டெனிஷ்மொழி பிரயோகத்தால் தமிழ்மொழியறிவு குறையும் தன்மை காணப்படுகிறது. வாரம் ஒரு முறை தமிழ் படிக்கும் இவர்களுக்கு வீட்டுப்பாடங்கள் கொடுக்க வேண்டிய தேவை உள்ளது. எனினும் ஏனைய வீட்டுப்பாடங்கள் (உதாரணம்: கணிதம்) இருப்பதாகச் சொல்லி தமிழ் பாடங்களை செய்யாமல் வருவார்கள். அத்துடன் தமிழ் கதைப்புத்தகங்களைத் தேடி வாசிக்கும் பழக்கமும் அவர்களுக்கு இல்லை. அவர்கள் வாசிக்கக்கூடிய புத்தகங்களும் அதிகம் இங்கே கிடைப்பதுமில்லை. இது மிகவும் பரிதாபத்துக்குரிய நிலையாகும்.

இவர்களின் நிலை இப்படியிருக்க 8ம் 9ம் வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் தமிழ் வகுப்புகளுக்கு ஒழுங்காக வருவார்கள் எனினும் அவர்களது மனோநிலை மிகவும் வேறுபட்டதாகவே காணப்படுகிறது. தமிழ்ப் படித்தல் என்பது இவர்களைப் பொறுத்தவரையில் அவ்வளவு அவசியமானதாகக் கருதவில்லை. அதற்குப் பதிலாக தமிழ் வகுப்பில் நாலுபத்து விஷயங்களைக் கதைக்கவும், சிரித்து விளையாடவுமே இவர்கள் விரும்புகிறார்கள். படிக்க வேண்டுமென்கின்ற ஆர்வமுள்ள ஓரிரு மாணவர்களும் இதனால் ஒன்றும் செய்யமுடியாமல் செயலற்று விடுகிறார்கள். இலங்கையில் கிடைத்த குறைந்த மொழியறிவுடன் இவர்களது தரம் அப்படியே நிற்கிறது. அதை வளர்த்து தாங்கள் என்ன செய்யப் போகின்றோம் என்றொரு மனநிலை இவர்களுக்கு ஏற்படுவதும் ஒரு வகையில் நியாயமே. ஏனெனில் தொடர்ந்து மேல் வகுப்புகளுக்கு போக அவர்களுக்கு தாய்மொழி தேவையில்லைஇவர்கள் தமிழ் படிப்பது ஒன்பதாம் வகுப்புடனேயே நின்று விடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரச்சனையை வெளிநாட்டில்வாழும் பிள்ளைகளுக்கு தாய்மொழி கற்பிக்கும் (டென்மார்க்கில்) பெரும்பாலான ஆசிரியர்கள் எதிர்நோக்குகிறார்கள். அதனால் தாய்மொழியை கட்டாய பாடமாக மேல்வகுப்புகளுக்கும் கொண்டு வரவேண்டுமென இங்கு தாய்மொழி படிப்பிக்கும் சங்கம் குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறது.

அடுத்து இங்கேயே பிறந்து, இங்கேயே வளர்ந்து வரும் தமிழ் சிறார்களின் நிலைமையை பார்ப்போம். இவர்களுக்கு தமிழில் கதைக்கப்பழக்குதல் முதல் முழுமையான ஆரம்ப மொழியறிவைக் கொடுக்க வேண்டிய பெரியதொரு பொறுப்பு ஆசிரியருக்கு உண்டு. ஆரம்பமொழியறிவு சிறப்பான முறையில் அமைந்தால் தான் அவர்களின் தரம் முன்னேறிக் கொண்டு போகும். அதற்காக மிகவும் கஷ்டப்படவேண்டியிருந்தாலும் இவர்களுடன் வேலை செய்வது இலகு. ஏனெனில் ஆரம்பத்திலிருந்து படிப்பிக்க வேண்டியிருப்பதால் ஒரு ஒழுங்குமுறையில் திட்டமிட்டு படிப்பிக்கக் கூடியதாக இருக்கிறது.

## பெற்றோர்களின் ஒத்துழைப்பு:

இவ்விடயத்தில் எனக்கு பல கசப்பான அனுபவங்களே அதிகம் உள்ளன. எனினும் இங்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். தங்கள் பிள்ளைகளுக்கு தமிழ்மொழியறிவு தேவை என்பதை பெரும்பாலான தமிழ்ப் பெற்றோர்கள் உணரத் தொடங்கியுள்ளனர். அவர்கள் தம் பிள்ளைகள் 5 வயதானவுடன் தமிழ் படிக்க தொடங்க வேண்டுமென அக்கறைப்படுகிறார்கள் என்பதை அண்மைக்காலங்களில் அவதானித்து வருகிறேன். எனினும் இப்படி அக்கறைப்படுகின்ற பெற்றோர் ஆசிரியருடன் எவ்வளவு தூரம் ஒத்துழைக்கிறார்கள் என்றால் அவர்களது அக்கறையில் சந்தேகம் எழவே செய்கிறது.

பெற்றோரும் ஆசிரியரும் இணைந்து செயலாற்றுதல் என்ற விடயம் கல்விமுறையில் மிக முக்கியமாக அவதானிக்கப்படும் இந்த நாட்டில், அந்த வாய்ப்பு எனக்கு மிகக்குறைவாகவே கிடைத்துள்ளமை கவலைக்குரிய விஷயமே. பெற்றோர் ஆசிரியருக்குரிய தொடர்பை பலப்படுத்துவதற்காகவே இங்கு அடிக்கடி பெற்றோர் ஆசிரியர் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் என்பன நடைபெறுகின்றன. தன் வகுப்பில் இருக்கும் ஒவ்வொரு மாணவன் மாணவியைப்பற்றியும் ஆசிரியருக்கு நன்றாகத் தெரியும். அவர்களது குடும்பப் பின்னணியைப் பற்றியும் நன்றாக அறிந்து வைத்திருப்பார். அவர் மாணவர்களின் பெற்றோருடன் அவர்கள் பிள்ளைகளின் குறைநிறைகளைப் பற்றி தனித்தனியே கதைப்பார். இம் முறையால் பெற்றோர் ஆசிரியருக்கிடையே ஒரு புரிந்துணர்வு ஏற்படுகின்றது. இப்புரிந்துணர்வானது மாணவர்களின் கல்வியறிவை சிறப்பான முறையில் வளர்க்க மிகவும் அவசியம் என்பதை நான் பூரணமாக நம்புகிறேன். இந்த நம்பிக்கையினால் நானும் இப்படி செய்தால் என்ன என எனக்கும் ஒரு நப்பாசை ஏற்பட்டது. பல கூட்டங்களை ஒழுங்கு படுத்திப்பார்த்தேன். தமிழ் பெற்றோரின் ஒத்துழைப்பு மிகவும் குறைவாகவே இருந்தது. டெனிஷ் வகுப்பு ஆசிரியருடன் ஒத்துழைக்கும் எம் பெற்றோர் ஏன் தமிழ் ஆசிரியருடன் ஒத்துழைக்க மறுக்கிறார்கள் என்பது எனக்கு இன்னும் தான் விளங்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் வீட்டுப்பாடங்களில் தம் பிள்ளைகளுக்கு உதவி செய்வதும் மிகக் குறைவாகவே உள்ளது. தம் பிள்ளைகளின் படிப்பின் மீது வீட்டில் பெற்றோர் காட்டும் அக்கறையை வகுப்பில் மாணவர்களின் முன்னேற்றத்தில் காணக்கூடியதாக இருக்கும். இதைவிட இன்னுமொரு கேலிக்குரிய விடயம் என்னவென்றால், தமிழ் வகுப்பை பராமரிப்பு நிலையமாகக் கருதும் பெற்றோர்களும் இருக்கிறார்கள். அதாவது தமிழ் ஆசிரியர் தன் பிள்ளையை 2 மணித்தியாலங்கள் பராமரிப்பார் என்ற நம்பிக்கையில் தம் அலுவல்களில் திரிவார்கள். பிள்ளைகளுடன் கதைக்கவேண்டும், பாடசாலையில் நடந்தவற்றைக் கேட்கவேண்டுமென எத்தனை பெற்றோர் அக்கறைப்படுகிறார்கள்? பிள்ளைகளின் தாய்மொழியறிவை வளர்ப்பதில் தமக்கும் பங்குண்டு என எத்தனை பெற்றோர் நினைக்கின்றனர்?

## நேரம் போதாமை:

தாய்மொழியைத் திறம்பட கற்கும் பிள்ளை மற்றைய மொழிகளை மிக இலகுவாக கற்கும் என்ற அடிப்படையில் தான், தாய்மொழியின் அவசியத்தைக் கருதி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். எனினும் இதில் கவலைக்குரிய விடயம் என்னவெனில், தரப்பட்ட நேரம் 35 மாணவர்கள் படிக்கும் ஒரு தமிழ் வகுப்புக்கு ஒரு கிழமைக்கு 6 மணித்தியாலங்களே எனக்கு தரப்பட்டுள்ளன. இந்த குறைந்த நேரத்தில் நான் கற்பிக்க வேண்டிய அம்சங்கள்:

- ★ கதைக்கப் பழக்குதல்
- ★ வாசிக்கப் பழக்குதல்
- ★ எழுதப் பழக்குதல் என்பதாகும்.

இதில் கதைக்கப் பழக்குதல் என்பது மிகவும் கஷ்டமான விடயமாகும். ஏனெனில் டெனிஷ் மொழிச் சொற்களின் பாவனைகளை தடுக்க முடியாமல் உள்ளது. கடினமான தமிழ் சொற்களின் கருத்துக்களை தமிழில் சொல்வதைவிட டெனிஷில் சொன்னால் விளங்கக் கூடியதாக உள்ளது. அத்துடன் தமிழ் சொற்களின் உச்சரிப்பு கேட்கவே தேவையில்லை. சில நேரங்களில் " ஐயகோ எம் தமிழ் மொழி படும் பாடு " என கத்தி அழவேண்டும் போலிருக்கும். கொடுக்கப்பட்ட கொஞ்ச நேரத்தில் கதை சொல்லல், பாட்டுப் பாடல், ஒத்த ஓசையுடைய சொற்களை (அடுக்கு மொழி) சொல்லிக் கொடுத்தல் போன்றவற்றை இடையிடையே செய்ய வேண்டும். இதன் மூலம் தெளிவான உச்சரிப்பு, கதைக்கும் திறன் என்பவற்றை வளர்க்கலாம் என்பது நான் கண்டறிந்த உண்மை. ஆனால் ஒரு கவலை அதிக நேரம் எனக்கு தரப்படவில்லையே, அப்படி கிடைத்தால் எப்படியெல்லாம் என் மாணவர்களுக்கு சொல்லிக் கொடுத்திருக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து வாசிக்கப் பழக்குதலை எடுத்தால் ஓரளவுக்கு எழுத்துக்கூட்டி வாசிக்கும் மாணவர்களுக்குரிய சிறிய கதை, கட்டுரைகளை சேகரிப்பது பெரும்பாடாக உள்ளது. கனமான சொற்களைக் கொண்ட நீண்ட கட்டுரை, கதைகளை மாணவர்கள் வாசிக்க கஷ்டப்படுவதுடன் நேரமும் போதாமல் உள்ளது. இப்படிப்பட்டவற்றை நானே வாசித்து, ஒவ்வொருசொல்லாக விளங்கப்படுத்தி, பின்பு கேள்வி கேட்டு பதில் எடுத்து . . . முடிப்பதற்கிடையில் நேரம் முடிந்துவிடும். இதனால் மாணவர்களின் வாசிப்புத்திறன் குறைந்த வேகத்திலேயே வளர்கிறது. டெனிஷ் படிப்பித்தல் முறையில் மாணவர்களுக்கு வாசிக்கப்பழக்குதல், எழுதப்பழக்குதல் என்பன முதலாம் வகுப்பிலேயே அதாவது 7 வயதிலேயே தொடங்குகிறது. எனினும் இம்முறையில் மாணவர்கள் துரித வேகத்தில் வாசிக்கப் பழகிவிடுகிறார்கள். அதே நேரம் தமிழ் மாணவர்களுக்கும் அதே திறமை டெனிஷ் மொழியில் வந்துவிடுகிறது. ஆனால் தமிழ் மொழியை 5, 6 வயதிலேயே படிக்கத் தொடங்கும் மாணவர்கள் ஓரளவுக்காவது வாசிக்கும் திறனை 9, 10 வயதிலே அடைகிறார்கள். இதற்குக் காரணம், ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரம் போதாமை ஆகும்.

மேலும், மாணவர்களுக்கு எழுத்துப் பிழையில்லாமல் எழுதப்பழக்குதல், வசனப்பிழையில்லாமல், எழுதுதல், இலக்கணம் படிப்பித்தல் போன்றவையும் கொடுக்கப்பட்ட குறைந்த நேரத்தில் செய்யப்பட வேண்டும். எழுத்துக்கள் ஒன்றும் தெரியாமல் தமிழ் வகுப்புக்கு வரத் தொடங்கும் மாணவர்களுக்கு ஒரு கிழமைக்கு ஒரு மணித்தியாலமே தமிழ் படிக்க நேரம் கொடுக்கப்படுகிறது. இதனால் முதற்கிழமை அறிமுகப்படுத்திய எழுத்துகளை முற்றாக மறந்து விடுகிறார்கள். குறிப்பாக பாலர் வகுப்புக்கு போகும் மாணவர்களுக்கு அவர்கள் மனதில் பதியக் கூடிய முறையில் எழுத்துக்களைப் பழக்கினாலும் வீட்டில் மீட்டல் செய்யப்படாததால் மறந்து விடுகிறார்கள். இந்தப் பரிதாபமான நிலையில் ஆசிரியரும் மாணவரும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். டெனிஷ் ஆசிரியர்களுக்குரிய அதே அந்தஸ்துடன் தாய் மொழி படிப்பிக்கும் ஆசிரியர்களாகிய நாங்களும் கடமையாற்றக் கூடியதாக இருந்தாலும் 'நேரம் போதாமை' என்ற பெரிய பிரச்சனை எமக்கு மட்டுமே உரியது.

கடைசியாக நான் இங்கே என்ன குறிப்பிட விரும்புகிறேன் என்றால் மேலே நான் குறிப்பிட்ட பிரச்சனைகள் புலம்பெயர்நாடுகளில் தாய்மொழி கற்பிக்கும் எல்லா ஆசிரியர்களுக்கும் இருக்கலாம், அல்லது இல்லாமலும், அல்லது இவற்றைவிட வேறு புதுப்பிரச்சனைகளும் இருக்கலாம். இங்கே குறிப்பிடப்பட்டவை யாவும் நான் நேராக அனுபவித்தவையும், வேறு பல ஆசிரியர்களிடம் கேட்டறிந்தவையுமே ஆகும். டென்மார்க்கில் தமிழ் படிப்பிக்கும் ஆசியர்களுக்கான ஒரு பாடத்திட்டம் செய்வதில் இங்கு வசிக்கும் ஆசிரியர்கள் சிலர் ஒன்று கூடி ஈடுபட்டோம். இம் முயற்சிக்குரிய முதற் கட்டமே முடிந்துள்ளது. நேரம் போதாமை, பொருளாதாரப்பிரச்சினை போன்ற பல நடைமுறைப் பிரச்சினைகளால் இம் முயற்சி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இப் பாடத்திட்டம் முடிவடைந்து பாடப்புத்தகங்களும் வெளியிடப்பட்டால் . . . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டென்மார்க்கில் படிப்பிக்கும் ஆசிரியர்களுக்கு மட்டுமல்லாமல் புலம்பெயர்நாடுகளில் படிப்பிக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் உதவியாக இருக்கும் என நம்பிக்கையாக கூறுகிறேன்.

-----



சி.சமரன்

"நாளை மனிதம் தேடியோ இன்று தீட்டினன் மனிதனை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அறிமுகம்

## தமிழ்
## கற்பித்தலில் உன்னதம்
## ஆசிரியர் பங்கு

இன்றைய நிலையில் தமிழைத் தாய்மொழியாகக் கற்பித்தலில் உள்ள பல்வேறு பிரச்சனைகள் பற்றிய ஓர் ஆய்வு.
நூலாசிரியர்– கார்த்திகேசு சிவத்தம்பி

1992இல், சிங்கப்பூரில் நடைபெற்ற முதலாவது உலகத்தமிழாசிரியர் மகாநாட்டில் உயிர்ப்புரை ( keynote, ஜீவசுருதி ஆய்வு) ஆக அமைந்த இக்கட்டுரையானது ஒரு சிறுநூலாக வெளிவந்துள்ளது. 36 பக்கங்களைக் கொண்ட இச்சிறுநூல் அறிமுகவுரை முடிவுரையோடு 9 அத்தியாயங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

உலகமட்டத்தில் தாய்மொழிக்கல்வி பயிற்றல் எவ்வாறு நிகழ்கின்றது என்ற பின்புலத்தில் வைத்தே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாறிவரும் உலகச்சூழலில் தமிழ் தாய்மொழியாகக் கற்பிக்கப்படும் போது மேற்கிளம்பும் பிரச்சனைகளுக்கு உதவும் ஒரு சிறுநூலாக இது அமைந்துள்ளது.

தாய்மொழி கற்பித்தல் மேற்கொள்ளப்படும் பொழுது இருக்க வேண்டிய கருத்துத்தெளிவு பற்றி ஆய்கையில் பேராசிரியர் ஸ்ரேன் ( Stern-1987) முன்வைத்த வினாக்கள் விளக்கப்பட்டுள்ளது.

முதலாவது வினா – மொழியின் தன்மை, இயல்பு பற்றியது
இரண்டாவது வினா– கற்பவர் யார், கற்றலின் தன்மை பற்றியது
மூன்றாவது வினா – மொழிகற்பிப்பவர், கற்பித்தல் பற்றியது
நான்காவது வினா – மொழிகற்பிக்கப்படும் சூழல் பற்றியது

இந்த நான்கு வினாக்களையும் மனத்திருத்தி, தமிழ் கற்பித்தலின் இன்றைய நிலைமைகள் இதன் பிரச்சனைகள் பற்றி இவ்வாய்வு இனங்காண முயல்கிறது. தமிழ் கல்விக்கான முதல் மொழி, இரண்டாம் மொழியாகப் பயிலப்படும் நிலைமையில் ஏற்படக்கூடிய வேறுபாடுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

முதன் மொழி நிலையில் – தமிழ் கல்வி மொழியாகவிருத்தல்
– தமிழ் கல்வி மொழியாக இல்லாத சூழல்
இரண்டாம் மொழி நிலையில்– தமிழினத்தவர்களல்லாதவர்கள் பயில விரும்புமிடத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– தமிழர் அல்லாதோர் வாழும் ஒரு சூழலில் வாழும் தமிழர், அந்தச் சூழலுக்கு அந்நியமாகவிருந்த தமிழைப் பயிலுமிடத்து.

வளர்ச்சியடைந்த நாடுகளில் இன்று தாய்மொழி கற்பித்தல் நடத்தப்பெறும் முறைமை, அம்முறைமைக்கான கல்வியல் எடுகோள்கள். இதுதவிர தமிழ்ப்பாரம்பரியத்தில் தமிழ் கற்பித்தல் முறைமை, மொழி கற்பித்தலின் பிரதான சிரத்தைகள், இலக்கணம், இலக்கியம் பயிற்றுவிக்கையில் ஏற்படக்கூடிய பிரச்சனைகள், தமிழ் பயிற்றுவித்தலில் நவீன தொழில்நுட்பத் துணைக்கருவிகளை எவ்வாறு பயன்படுத்தல் போன்ற பன்முகப்பட்ட ஆய்வுகளையும் இச்சிறுநூல் விளக்கி நிற்கிறது. தமிழ் கற்பித்தலில் உன்னதத்தை எட்ட இச்சிறுநூல் பெரிதும் உதவக் கூடியதாகும்.



படம்: தமயநதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை பூமி

– இராஜமோகனா –

நிறுத்துவதாக இல்லை, யாரும் நிறுத்துவதாக இல்லை. நட்டுவாங்கம் தொடர்ந்து கொண்டிருந்தது. அவளும் ஆடிக்கொண்டே இருந்தாள். கண்கள் மெல்ல மெல்லச் சிவந்தன. கண்களில் கண்ணீர் இல்லை. அவளது சுழற்சி கண்டு பஞ்சபூதங்கள் நிலைதடுமாறின. வருணன் மெல்ல மெல்ல தன்னை இழந்து அவளை அணைத்துக் கொண்டான். ஒட்டிய மேனியில் இயற்கையின் தாண்டவம்.

அற்புதம்! அற்புதம்! எங்கிருந்தோ ஒரு குரல். குரல் வந்த திசையை நோக்கினாள். ஆட்டம் நின்றது. மெல்ல மெல்ல அவனை நெருங்கினாள். அவனது கைகளை மெதுவாகப் பற்றினாள்.

"அம்மா தண்ணீ". . .– சின்னவனின் அழுகையில் அவள் விழித்துக்கொண்டாள். கனவை மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்த்தாள்.

வெளியில் மழை பெய்து கொண்டிருந்தது. யன்னலை இலேசாகத் திறந்து விட்டாள். மழையின் இசை இதமாகவிருந்தது.

இன்னும் கொஞ்சத்தில் விடிந்து விடும். விடிந்தால் வேலை. மீரா லைட்டைப் போட்டாள். 'சித்தர் பாடல்கள்' சிரித்தது. "பற்றற்ற நீரதிலே பாசி படர்ந்தது போல் உற்றுப் பார்த்தாலும் உன் மயக்கம் தீரவில்லை".

பக்கங்களைப் புரட்டினாள். "புல்லரிடத்திற் போய் பொருள் தனக்குக் கையேந்திப் பல்லை மிகக் காட்டிப் பரக்க விழிக்கிறண்டி" நெஞ்சத்தைத் தொட்ட அழுகுணிச்சித்தர், நேற்றைய நினைவுகளில் அவளைத் தள்ளியும் விட்டார்.

" நான் சுக்கா இருக்கேக்கை, அவன்கள் என்னைப் பார்த்தவன்கள்; இப்ப கலைச்சுக் கலைச்சு சிரிக்கிறான்கள் "– பாவலன் கலங்கிய கண்களோடு சொன்னான். மீரா அவனை மடியில் இருத்தியபடி சின்னவால்களில் சீறினாள்.

வெள்ளைக் குழந்தைகளுக்கு மத்தியில் பொட்டு வைத்தாற் போல் தனித்து நிற்கும் இந்தச் சின்னஞ்சிறு குஞ்சுகள் எத்தனை வதையறியும்.

ஓய்வு எடுக்கும் நேரம் வர, மீரா பாவலனை ஊஞ்சலில் இருத்தினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் அவனை இருத்திவிட்டு நகர்ந்ததுதான் சின்னவாலுகள் ஓடிவந்து அவனை இறக்கி விட்டன. அவனும் மெல்ல ஒதுங்கிப் போனான்.

ஒதுங்கிப் போன அவனுக்கு அந்நியப்பட்டது நிறமும், மொழியும் மட்டுமல்ல, அவனது ஆளுமையும் தான்.

ஓய்வெடுக்கும் அறையில் மீரா கோப்பியை உறிஞ்சிக் கொண்டிருந்தாள். சிகரெட்டைப் பற்ற வைப்பதற்காக வந்த லைலா மீராவுக்கு ஒரு சேதி என்றபடி அமர்ந்தாள்.

சாந்தியின் அம்மா தன் பிள்ளைகளுக்கு தமிழ் படிப்பிக்க வேண்டாம் என்றதல்ல ஆச்சரியம், சாந்தி கொஞ்சம் தமிழ் கதைப்பதால் அவளை வசந்தியுடன் விளையாட விட வேண்டாம், மற்றத் தமிழ்ப்பிள்ளைகளுடனும் சேர விட வேண்டாமாமென்றாள்.

சகோதரங்களைக் கூட, சேர்ந்து விளையாட விட வேண்டாமென லைலா சொன்ன சேதி எல்லோர் கவனத்தையும் ஈர்த்தது. அமெரிக்காவில் செட்டில் பண்ணிவிட்ட தன் பேரன், பேத்தி தம் மொழியையும் கலாச்சாரத்தையும் பேணுவதைப் பெருமையுடன் சொல்லிக் கொண்டாள் லைலா. மீரா சொல்வதற்கு எதுவுமிருக்கவில்லை.

தமிழர்களும் போராட்டமும், தமிழ்ப்பெண்களும் கலாச்சாரமும் பற்றிக்கூட மீராவுக்கே சொல்லக்கூடிய வகையில் அவர்கள் அறிந்திருந்தனர்; வழக்கம் போலவே உண்மைக்குப் புறம்பான தரவுகளுடன்.

பர்தா போடும் பெண்ணை விட மேலாகவே அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு பற்றி இந்த வெள்ளைத் தோல்களுக்கு சொல்லிவைத்த சீரிய நங்காள் வாழ்கவென மீரா நொந்து கொண்டாள். அந்தப் பத்தினியின் பெண்ணுக்கு பால்யவிவாகம் செய்து வைத்து, மறக்காமல் அவளை உடன்கட்டை ஏற்றவும் திட்டம் போட்டபடி மீரா கோப்பியைக் குடித்து முடித்தாள்.

அவளைப் பொறுத்தவரையில் அவளும் அந்தச் சிறுவர் பராமரிப்பு நிலையக் குழந்தைகளும் மிருகக்காட்சிச்சாலையில் காட்சிக்கு வைக்கப்பட்ட குரங்குகள்தான்.

மீரா கடிகாரத்தினைப் பார்த்தாள். அவளின் சுழற்சிக்கு ஈடுகொடுப்பதற்காக வேகமாகச் சுழன்று நின்ற காலத்தை என்ன சொல்வது?

அவள் போனில் வேலைக்கு வரவில்லை என்பதை ஒப்புவித்தாள். வேகமாக வந்து சின்னவனை இறுக அணைத்தபடி கண்களை மூட முயன்றாள்; முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீராவும் சின்னவனும் தாண்டிக்குளம் இராணுவமுகாம் இராணுவத்தினரின் சோதனைக்கான நீண்ட வரிசையின் கடைசியில் காத்து நின்றனர். மீராவுக்கு எல்லாமே கனவு போல் இருந்தது. இந்தக் குட்டியுடன் இத்தனை தூரம் கடந்து விட்டோமே என நினைக்க மனம் நிறைந்தது.

"குழந்தைப் பிள்ளைக்காரர் முதல் வாங்கோ"– என்ற கருணை மொழியால் மீரா ஆறுதல் அடைந்தாள்.

இராணுவத்தினர் செக் பண்ணும்போது சின்னவனின் விளையாட்டுப் பொருட்களுக்குள் இருந்த பற்றரியையும், அவன் ஆசையாகக் கொண்டு வந்த ஒரு குட்டிக்கமராவையும் வேண்டி வைத்து விட்டனர்.

சின்னவன் "ஏன் மாமா பற்றி கழட்டுறார் "– என ஏக்கத்தோடு கேட்டான்.

" என்ன? மாமா சொல்லுறது, வெளிநாட்டுக்கு ஓடிப்போனதா? கோலா யாப்பன இல்லே "– கிண்டலாகக் கொச்சைத்தமிழில் அந்த இராணுவவீரன் சீண்டினான். " மே கட்டிய மாமா கியனவா "– என மேலும் சிரித்தான்.

" ஆமிமாமா ஏன் எடுத்தவர் "– என்று கேட்டுக் கேட்டு சின்னவன் களைத்தானோ இல்லையோ மீரா பதில் சொல்லிக் களைத்தே விட்டாள்.

இராணுவத்தினரின் செக்கிங் முடிய பஸ்ஸில் ஏறி, பின்னர் கொஞ்சத்தூரம் நடந்து போய் மீண்டும் லொறியில் ஏறி, தாண்டிக்குளம் புலிகளின் சோதனை முகாமில் காத்து நின்று, காரில் ஏறி, கடைசியாக டிரக்டரில் வந்து கிளாலி கடற்கரை மணலில் உற்சாகமாக குதித்துக் கொண்டிருந்தான் சின்னவன்.

" அம்மா, இங்கை பாருங்கோ; நான் boat தள்ளுறன், எல்லாம் நனைஞ்சு போச்சு "– சின்னவனின் உற்சாகத்தைக் கண்ட படகோட்டி " தம்பி உன்னைப் போல ஆக்கள் தான்டா எங்களுக்கு வேணும் "– எனக் குட்டியுரை ஒன்று நிகழ்த்தினார்.

" பார்த்துப் போங்கோ; சேறு . . . முன்னால போற ஆக்களைப் பார்த்துப் போங்கோ, கவனம் தம்பி, கைக்குழந்தையோட போறீர், கவனம் " . . . .

ஓயாமல் உற்சாகமான சத்தங்கள். யாரும் சோர்ந்து விடுவதாக இல்லை. தள்ளாத வயது எது? தள்ளுகின்ற வயது எது? என்று தெரியாத வேகம், உறுதி.

" எங்கட மண் இது, என்ன பிரச்சனை வந்தாலும் நாங்க வாழுவம் "– முதியவர்கள் சிலர் பேசிக் கொண்டனர். எந்தப் பிரச்சனையையும் எதிர்கொள்ளவும், சமாளிக்கவும் பழக்கப்பட்ட அந்த மக்களுக்கு முன்னால் தலைநிமிர்ந்து நடக்கவே மீரா சங்கடப்பட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" மீரா, இங்கை கொழும்பில இருக்கிறவையின்ட கதையைக் கேட்டு சும்மா குழம்பாதை. போயா அண்டு போவம், நிலவுக்கும் கிளாலிக்கும் என்ன சம்பந்தமெண்டு சொன்னா விளங்கா; வாவன் விளங்கும் " – அப்பா சொன்னதை நினைக்க அவரின் ரசனையும் கூடவே வந்தது.

படகும் வேகமாக ஓடத் தொடங்கி விட்டது. மீரா சின்னவனை துவாயால் போர்த்தி நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள்.

அந்தக் குட்டிப்படகு எல்லோரையும் சுமந்தபடி அமைதியாகப் போய்க் கொண்டிருந்தது. இந்தக் கிளாலிக்கடல்தான் கோரமாக வெட்டிக் குத்திப் போடப்பட்ட அப்பாவி மக்களைத் தாங்கிக் கொண்டது. அதே கிளாலிக்கடல் தந்த அமைதி, ஒருவித அசட்டுத்துணிச்சல், எமது மண்ணுக்குப் போயே தீர வேண்டுமென்ற வேகம், இத்தனை நாளாக அவளுக்குள் காணாமல் போயிருந்த எத்தனையோ உணர்வுகள் கடலம்மாவுடன் பேசிக் கொண்டன.

ஏதோவொரு அமைதி நெஞ்சை அடைத்தது. கடந்த வாரம் அவளுக்கு நீண்ட ஓய்வு தேவையென டாக்டர் சொல்ல அவள் "சித்தமற்று சிந்தையற்று, சீவனற்று" எனத் தன் நிலைமையைத் தானே சொல்லி நின்றதை இந்தக் கிளாலி நிலா நம்ப மறுத்தது; அவளும் கூடத்தான்.

" கரை வருது; இனி ஓடேலா இறங்கி நடவுங்கோ "– படகோட்டி கத்தினான். மீரா தூங்கிக் கொண்டிருந்த சின்னவனோடு இறங்கினாள்.

" பிள்ளை தம்பி கவனம். மூச்சை இறுக்கிப் பிடி, மெல்ல இப்பிடி வா "– துணைக்கு வந்த வேலுமாமா அவளை உற்சாகப்படுத்தியபடி " வெளிநாட்டில இருந்த உனக்கு இதெல்லாம் . . ." அவர் சொல்ல வந்ததை நினைக்க மீராவின் நெஞ்சம் விம்மியது அந்த நிலவுக்குக் கேட்டது.

வேலுமாமாவுக்கு ஒரு சின்னக்குடிசை. கூடவே கருக்கு மட்டைக் குசினி, வீட்டைச் சுற்றி வாழைமரங்கள், வாசலில் செவ்விளனி, கிணற்றடியில் தேவைக்களவாய் மிளகாய், கத்தரி, தக்காளி. காவலுக்கு வாலை ஆட்டியபடி ஒரு மண்நிறநாய். அவள் போகும்போது நிர்வாணமாய் நுளம்புவலைக்குள் தூங்கிக்கொண்டிருந்த இரட்டைக்குழந்தைகள். நேசிக்க மட்டுமே தெரிந்த மனைவி. வழக்கம் போலவே கம்பீரமான வேலுமாமா.

மீரா நிலவைப் பார்த்தாள். " தன்னையறிந்து இன்பமுற வெண்ணிலாவே – ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே " கோரிக்கைகளோடு தன்னைப் பார்க்கும் மீராவை நிலவு பரிதாபமாகப் பார்த்தது.

கிளாலிதாண்டி, டிரக்டரில் தாவி, ஓட்டோவில் தூங்கி வழிய வீடு. ஓட்டோ வாசலில் நிற்க குப்பி விளக்கோடு வீடே வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" இவன் இருட்டைக்கண்டு பயப்பிடேலையே; எங்கட கெட்டிக்குட்டி "– அவனை கட்டியிறுக்கிக்கொண்டது அன்னை இல்லம்.

. . . . . . . . .

" போரம்மா போரம்மா உன்னையன்றி யாரம்மா? " புதுவையின் பாடல். நல்ல படைப்பு. இப்படியான படைப்புகள் திரும்பத் திரும்ப ஒலித்து போராளிகளை உருவாக்கிக் கொண்டிருந்தது. அங்கு மக்கள் வாழ்ந்து கொண்டு இருந்தார்கள். பதுங்குகுழிகளால் நிறைந்த அந்தமண் விடியலை நோக்கி உறுதியுடன் காத்திருக்கும் மனிதர்களாலும் நிறைந்திருந்தது.

மீரா எதையோ பறிகொடுத்தவள் போல் இருப்பதாக பலரும் குறைபட்டுக் கொண்டனர். அவள் மண்ணைப் பிரிந்திருந்த காலம் சும்மா அல்லவே, ஆறு வருடங்கள்.

அவள் வாழ்ந்த இடங்கள், சுற்றி அலைந்து திரிந்த வீதிகள், நண்பர்களுக்காகக் காத்திருந்த பொழுதுகள், மண்ணோடும் மக்களோடும் பழகிய நினைவுகள், அனுபவங்கள் எல்லாமே . . . ஏக்கங்களும் பெருமூச்சுக்களுமாய் மிஞ்சிக் கிடந்தது.

" இது நான் வாழ்ந்த மண்; நான் நானாக நிமிர்ந்து நின்ற மண் " அவள் மனம் கத்தியது.

உண்மையில் ஊர் அவளை அடிக்கடி சிலுவையில் அறையத்தான் செய்தது. அதிலும் இந்தச் சின்னவன் பண்ணிய சின்னஞ்சிறு சேட்டைகள் அவளால் நம்ப முடியாததாக இருந்தது.

எதற்கெடுத்தாலும் அவளைச் சுற்றிச் சுற்றித் திரியும் சின்னவன்; கைகளைப் பற்றியபடி ஒட்டியொட்டித்திரியும் சின்னவன்; செட்டை கட்டிய சிட்டுக்குருவியாய் தன்னந்தனியத் திரிந்தான்.

"மோனே. . . இங்கை பார் கிணத்தை, இவன் என்னத்தையெல்லாம் போட்டிருக்கிறான் எண்டு "– அம்மா சொல்ல மீரா எட்டிப் பார்த்தாள்.

டிங். . . டொங். . . பெல் என்றபடி கிணற்றைச் சுற்றிச்சுற்றி அலையும் அவன் தண்ணீரை அள்ளச் சொல்லி பிறகு அதை ஊத்தச் சொல்லி எத்தனை அட்டகாசம்.

எந்த அறிமுகமும் இல்லாதவர்களோடெல்லாம் சேர்ந்து பழகி, தன்னந்தனியே மணிக்கணக்கில் சுற்றித்திரிந்த அவனது நடத்தை ஆச்சரியத்திற்கு மேல் ஆச்சரியம் தருவதாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய மனுச தோரணையில் மதிலில் இருந்து கதை அளப்பதும், கோயிலைக் கண்டவுடன் விழுந்து கும்பிட்டு உண்டியலுக்கு காசு போடுவதுமாக அவன் ஒரே அமளி.

அம்மப்பாவின் சாய்மனைக் கதிரையில் சாய்ந்தபடி பாக்கு, புழுக்கொடியல் சாப்பிடுவதாகத் தொடங்கி, கடைசியில் மாங்காய் சாப்பிட்டு வருத்தம் தேடி விட்டானென்று அம்மம்மாவிடம் ஏச்சு வேண்டிக் கட்டிக் கொண்டான். அவவுக்கு தன் பேரன் என்ற பெருமை வேறு. விறாந்தையில் ஏணை கட்டி ரோஜாவும் தீத்தி, கடைசியில் ரோஜன் என்று பெயரும் வைத்து விட்டா.

மீராவுக்கு அவனை இப்ப விட்டாலும் இந்த மண்ணில் தோட்டம் செய்து, தக்காளியைச் சுமந்து கொண்டு வந்து, திண்ணைவேலிச் சந்தையில் விற்றுப் போடுவான் போலவிருந்தது.

அவன் மீராவையே மறந்தவனாக சுற்றிக் கொண்டிருந்தான். காலத்தின் மாற்றங்களை வென்றதாய், சூழலின் மாற்றம் அவனை அணைத்துக் கொண்டது.

வழக்கம்போலவே அவளும் சைக்கிளை எடுக்கத்தான் செய்தாள், கூட வரத்தான் நண்பர்களில்லை. சத்தியாவேசத்தோடு கிராமத்து வீதிகளிளெல்லாம் தடம் பதித்த நண்பர்கள் தொலைந்து போயினர். சொந்த மண்ணை விட்டு நகரோம் என வாழ்ந்த மனிதர்களை அதேமண் விழுங்கிக் கொண்டது.

சின்னவன் தான், இறுகப்பற்றியபடி சைக்கிளின் பின்னால் குந்திக் கொண்டான். அவ்வப்போது அவளே அவனைத் திரும்பித் திரும்பி பார்த்துக் கொண்டாள்.

"உன்னை இங்கு தான் விட்டுச் சென்றேன்; நீ எங்குதான் சென்று தொலைந்தாய்" என தன் நண்பன் தில்லையை அவள் ஓயாமல் காரணமின்றியே திட்டித் தீர்த்தாள். காரணத்திற்காக காரணம் தேடியே தனது நண்பனை விசாரணை செய்தார்களா? என்ற கேள்வி மட்டும் அவளை அரித்துக் கொண்டே இருந்தது.

நண்பன் தில்லையை ஒரு முறை, ஒரேயொரு முறையேனும் பார்க்கத் துடிக்கும் அம்மா, அவவை மீரா சந்தித்தாள். " இருந்து பாருங்க, என் மகன் வருவான், என்ன சொல்லுறீங்க" மீராவைத்தான் கேட்டாள். மீரா பதில் தேடினாள்; அவளை வார்த்தைகள் அறைந்தன.

மீராவோ தில்லை காணாத் தேசமொன்றில் கூட்டிப் பெருக்கி, பிரித்துக் கழித்து வாழ்வு பொறுக்கிக் கொண்டிருப்பவள்; அவனோ அவள் காணா விசாரணை முகாமொன்றில், "டேய் போடா போ" அவள் வேதனையில் கத்தினாள்.

தில்லை இல்லாத யாழ்ப்பாணத்தில் அவளையும் கடந்து நின்ற வெறுமையை நிரப்புவது எப்படி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலைகளின் உரசலும், தண்ணீரின் சலசலப்பும், பறவைகளின் இரைச்சலுமாய் வசந்த காலம் சிரித்து நின்றது. போர்த்துக்கட்டி விறைத்துக் கிடந்த நாட்களைத் தாண்டிய மகிழ்வு முகங்களில் தெரிந்தது.

மீரா குந்திக் கொண்டிருந்தாள். காற்று பையப் பைய வந்து அவளை வருடிச் சென்றது. முகில்களைத் தழுவி, மலைகளில் தவழ்ந்து, அந்த வாவியைத் தாண்டி அவளை இறுகத் தழுவியது.

சின்னவனின் பிஞ்சுக்கரங்கள் பாணைப்பிய்த்துக் கொண்டிருந்தன. அவனைச் சுற்றிச் சுற்றி பறவைகள் சிறகடித்தன. எங்கே அவை தன்னைக் கொத்தி விடுமோவென்ற பயத்தில் இடையிடையே சின்னவன் அம்மாவைத் துணைக்கழைத்தான்.

மீராவுக்கு தன் குட்டியை ஓடிப்போய் அணைக்கவேண்டும் போலிருந்தது; எழும்புவதற்காய் அசைந்தாள்; பறவைகள் எல்லாமே பறந்து போயின. சின்னவன் ஏக்கத்தோடு பார்த்தான். ஏமாற்றம் வழியும், அந்த முகத்தைப் பார்க்கும் துணிச்சலின்றி மீரா தலைகுனிந்தாள்.

அடுத்தகணம் சின்னவனைக் காணவில்லை. குட்டி நாயொன்றைத் துரத்திக் கொண்டிருந்தான். மீண்டும் அதே சிரிப்பு, அதே ஆர்ப்பரிப்பு. அந்தக் குட்டியிடம் இருக்கும் நம்பிக்கை, அந்தச் சின்னவனின் சின்னப்பாதங்கள் கற்றுத் தரும் பாடங்கள்.

ஆனால் மீராவால் முடியவில்லை. இந்த இயற்கையில் ஒன்றிப் போகும் பொழுதிலும், இல்லை ஒன்றிப் போக முயலும் பொழுதிலும் வெறுமை, இடைவெளி. மீட்டப்படும் நினைவுகளிலும் நம்பிக்கை தள்ளாடிக் கொண்டிருந்தது. எல்லாவற்றையும் விடக் கொடுமையானது வலிந்து கட்டிப் பேசவும், சிரிக்கவும் இல்லை நன்கு நடிக்கவும் கற்றுக்கொள்ளல் என நினைத்தாள் மீரா.

மீராவின் சின்னவன் ஆடி ஓடிக் களைத்து அயர்ந்தே விட்டான். மீராவும் நீண்டநாட்களின் பின் சித்தர் பாடல்களைப் புரட்டியபடி கட்டிலில் சாய்ந்தாள். சின்னவன் இயங்கும் ஒவ்வொரு கணமும் தானும் ஏதோவொரு வகையில் இழுபடுவதை உணர்ந்தாள் மீரா.

யன்னலின் ஊடே நிலவு. மீராவுக்கு பிடித்த நிலவு. அவள் போகுமிடமெல்லாம் அவளைத் தொடரும் நிலவு. பனைமரங்களினூடு எட்டி எட்டிப் பார்த்த நிலவு. முற்றத்தில் தன்னை மறந்திருக்கும் மீராவோடு மணிக்கணக்காகப் பேசிய நிலவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு மலைகளால் சூழப் பெற்று ராணி மகா ராணி போல் நிமிர்ந்து நிற்கும் பேர்கனில், வானமகள் மேல் பவனி வந்து கொண்டிருந்த நிலவு, அவளை மௌனமாகப் பார்த்தது. அந்த மௌனத்திலும் நிலவோடு கதை பேசியபடி தன் சின்னவனோடு அயர்ந்து போனாள்.

. . .   . . .   . . .

புலம்பெயர்ந்த தமிழர் மாநாடு சிறப்பு மலருக்காக 'வான் நிலா' என்ற புனைபெயரில் எழுதப்பட்ட கதை. மேலும் சில மாற்றங்களோடு சொந்தப் பெயரில் பிரசுரமாகிறது.



படம்: தமயந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பிரயாணத்தின் பின்னணி"

விஜே.

ஐயாவின் காணியுடன்
அம்மாவின் நகையும் சேர்த்து
கட்டியாகி விட்டது
ஏஜென்சிக்கு ஐந்துலட்சம்.

பலமாத கஸ்ரத்தின் பின்
பாங்கொக்கில் தங்கிவிட்டு
பதறிய மனதின்
பாதம் பட்ட இடம் இத்தாலியாம்.

இத்துடன் முடிந்ததாம்
ஏஜென்சியின் வேலை
நண்பனிடம் பட்ட கடனுடன்
சுவிஸ் காற்றை
சுகமாக இழுத்த போது – வந்தது
அம்மாவின் கடிதம்

தம்பி நீ போய்
ஆறு மாதம் – இங்கு
கடன்காரர் வாசலில்
இலக்கணப் பேச்சுடன்
எங்கள் உயிர் உன்கையில்
போகுமுன் அனுப்பிவிடு
உன் கையில் இருப்பதை

கடைசியாக இருந்த
கைரேகையைக் கொடுத்துவிட்டு
அகதி என்ற பெயரில்
உலா வருகிறேன்
ஒன்றும் இல்லாமல்

அம்மாவுக்குப் பதில் அனுப்ப
காத்திருக்கிறேன்
வேலை ஒன்று கிடைக்கும்வரை
வேலை வருமோ? இல்லையோ?
விடியலுக்காய் காத்திருக்கிறேன்
விரைவில் பதில் போட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வுகளின் உள்ளடக்கம்

சங்கீதா.

இருள் முழுதும் நீங்காத
பனிவிழுந்த ஒரு விடியல்
ரெலிபோன் மணி ஒலித்து
விறைத்துச் சுரண்ட
உடம்புடன் தலைநிமிர்த்தி
"கலோ"
உயிரிழந்த என் குரல் கொடுத்து
விடைக்காய்க் காத்திருப்பேன்.

இரைந்து ஓயும் அலைகளுள்
தவழ்ந்துவரும் உன் சுருதி
இறந்து போன உணர்வுகளின்
நரம்பு மீட்டி உயிர்கொடுக்கும்.
பொங்கிவரும் உணர்வுகளில்
கணநேரம் தத்தளிக்க
இடைமறிப்பாய்! ,

"விசாகிடைக்காதாம்"
சுருதியில் தொனித்தது முகாரி
உயிர்பெற்ற நரம்பொன்று
அறுந்துவந்து
"சுர்" எனத் தைத்தது இதயத்தில்.

மாற்றுவழி பல கூறி
இனிதாய் விடைபெறுவதற்குள்
நூலறுந்த பட்டம் போல்
அந்தரத்தில் நீயங்கே,
இப்போ,
அங்கும் இங்கும்
நிமிடங்கள் எண்ணியே
அன்புகளின் பரிமாற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் இழந்தவை
கொஞ்சமல்ல என்னுயிரே
இத்தனையும் மறந்துவிட்டு
பஞ்சாய்ப் பறந்து
பணம் சேர்த்து
பகட்டாய் வாழ்கின்றார்
மெல்லத்தட்டிவிட உடைந்துவிடும்
எங்கள் ஊர் இராசாக்கள்
உதட்டளவில் ஏாரளம்
முகத்தளவில் தாராளம்
உள்ளத்து அடிமுனையில்
தேங்கி நிற்கும் சாக்கடைகள்
மெல்லக் கிழறுகையில்
இங்கும் தான் பிணவாடை

விதியென்று ஏற்று
வாழ்ந்துவிட முடியவில்லை,
எங்கள் உளவியலும், வரலாறும்
ஒருங்கே இரைமீட்டால்
நல்லதோர் விடைபிறக்கும்
சிலவேளை
எம் இணைவிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னப்பட்சி சொன்ன கதை

## தமயந்தி

வாட்டி எடுத்து விட்டான் வெள்ளை முதலாளி ஐந்து நாட்களும். எண்ணெய்க் கொம்பனிகள் சிலவற்றின் மாநாடு. நான் வேலை செய்யும் ஹோட்டலில் தொடர்ந்து நான்கு தினங்கள். மலைபோல் வந்து ஹோட்டேல் சமையலறையில் குவியும் பாத்திரங்கள். வழமையாக எடுக்கும் மணித்தியாலத்திற்கு ஐந்து நிமிட ஓய்வும் எடுக்க முடியாதென்று கூறி விட்டான் முதலாளி. அவனோடு சட்டம் பேச முடியாது. மீறிப் பேசினால் வேலை காலி. தெருவில் நின்று தந்தனத்தோம் போட வேண்டியதுதான். கடைசியாக ஒருகிழமைக்கு முன் ஊரிலிருந்த தங்கை எழுதிய கடிதத்தில் அம்மாவுக்குச் சுகவீனமென்று எழுதியிருந்தாள். ஈழத்து ஆஸ்பத்திரிகளில் மருந்தில்லையாம். கொழும்பு பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு சென்று சிகிச்சை செய்யும்படி வைத்தியர்கள் கூறி விட்டார்களாம். கொழும்பு கொண்டு செல்ல ஒழுங்குகள் கூடச் செய்து விட்டார்களாம் (இருந்த ஒரு துண்டுக் காணியை விற்று). போக்கு வரத்துச் செலவுக்காகப் பணம் வேண்டுமாம். அதுவும் உடனே வேண்டுமாம். உடனே கிடைக்கக் கூடிய வழிகளையும் தங்கை எழுதியிருந்தாள். "உண்டியல் சிஸ்டமாம்". அதில் அனுப்பி வைத்தால் உண்டியல் கமிஷன் கழித்து மீதி வீட்டில் கொடுப்பார்களாம். இப்படி எல்லாவற்றையும் நினைத்தால் முதலாளியுடன் ஐந்து நிமிட ஓய்வு கேட்டுச் சண்டை பிடித்து வேலையை இழக்கும் நிலையை வேண்டுமென்றே தேடிக்கொள்ள முடியாது.

கிழமை நாட்கள் ஐந்தும் ஆமை வேகத்தில் ஊர்ந்து கழிந்தன. இன்று சனிக்கிழமை. ஓய்வு நாள். உடுப்புக்கள் இருப்பவன் கழுவ முடியும். இங்கு வரும்போது என் உடலோடு ஒட்டிவந்த கறா ரவுசரும், பொலியஸ்டர் சேட்டும், இங்கு அஸில் அடித்தபின் என்னைப் பொறுப்பெடுத்த மாநகர சபை மலிவு விலையில் வாங்கித் தந்த ஒரு டெனிம், இரண்டு சேர்ட் இவைகளைக் கழுவிப் போடுவதற்கு ஏன் சனிக்கிழமை முழுநாளையும் செலவு செய்வான்.

அறையில் கிடந்த பக்கட் தானியங்களைப் போட்டு அவித்து விழுங்கி வயிற்றை வழமைபோல் சமாதானப் படுத்தியாயிற்று. அம்மா, தங்கைக்கும் கடிதம் எழுதியாயிற்று விரைவில் பணம் அனுப்புவதாக. இந்த மாதச் சம்பளத்தை அம்மாவின் வைத்தியச் செலவுகளுக்கு அனுப்பி வைத்தால் சாப்பாடு . . . . ? சமாளிக்கலாம் என்ற சமாதானம் மட்டுமே எஞ்சி நின்றது. எப்படி . . .? எப்படியாவது . . .! ஹோட்டெல் சமையல்காரரில் ஒருவனான சீனாக்காரனை இப்போதுதான் கைக்குள் போடமுடிந்தது. இன்னொருவன் துருக்கியன். அவன் எதற்கும் மசிய மாட்டான். எதையாவது எடுத்துச் சாப்பிட்டால் முதலாளியிடம் போட்டுக் கொடுத்துவிடுவான். அடுத்தவள் அஸ்திறி. அவள் நல்லவள். ஹோட்டேல் நிர்வாகத்தில் ஊழல் என்று என்னோடு அடிக்கடி குறைப்படுவாள். பல தடவைகள் அவளே எனக்குச் சாப்பாடு எடுத்துத் தந்திருக்கிறாள். "நாங்கள் சாப்பிட்டு மீதிதான் விற்பனைக்கு" என்று சொல்வாள். அடுத்த மாதம் அநேகமாக அஸ்திறிதான் சமையலுக்குப் பொறுப்பாய் நிற்பாள். எனவே ஓரளவு சமாளித்து விடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மூஸ்வான்னே' நான் வாழும் மாநகரத்து மத்திய பெருந்தெருவை அண்டியதாக அமைந்திருக்கும் நீர்த்தேக்கம். மிகவும் அழகான சுற்றாடல். எனது சில விடுமுறைப் பொழுதுகள் இந்தத் தேக்கத்துக்குள்ளும் அடக்கம் பண்ணப்பட்டுள்ளன. இன்றும் . . . சன நாட்டமில்லாத ஓர் கரையோரத்தில் இருக்கைபோல் அமைந்திருந்த பாறையொன்றில் அமர்ந்திருந்தேன். சிறிது காற்று வீசியபோதும் நீர்த்தேக்கத்தைச் சுற்றி நிறைய மரங்கள் உயர்ந்து நின்றதால் தண்ணீரில் அலைகள் கெம்பி எழாமல் சாந்தமாகவே மூக்கை நீட்டின.

"ஹோய் . . " கரகரத்த குரல் கேட்டுச் சுற்று முற்றம் பார்த்தேன். எந்த மனிதர்களையும் காணவில்லை. திரும்பவும் நான் எனைச் சூழப் பார்த்துக் கொண்டேன். யாருமே இல்லை. யாரையும் காணவேயில்லை. "யாருடைய குரல் . . ." என்று எனக்குள் எழுந்த கேள்விக்கு விடை கிடைத்தது விரைவாக.

"நீ இலங்கையா ?" தனது நான்கு குஞ்சுகளுடன் கரையைத் தேடி நீந்தி வந்த அன்னத்தின் கேள்வி என் முன்றலில் வந்து விழுந்தது. "ஆமாம் . . . " என்று அதற்குப் பதிலளித்தேன், வார்த்தைகளின்றி வெறும் தலையசைப்பால். "ஏது பகலில் இந்தப் பக்கம் ? இரவில்தானே நீங்கள் இந்தப்பக்கம் வருவீர்கள். இன்றென்ன பகலில் வந்து புதுங்கியிருக்கிறாய்?" அன்னத்தின் கேலித்தனமும், கோபமுமான இந்தக் கேள்விகள் எனக்குப் புரிய மறுத்தன. "என்ன . . திருட்டு முழி வெளியே பாய்ந்து விடும்போலிருக்கிறதே ? நான் சொல்வது உனக்குப் புரியவில்லையா ? அல்லது புரியாத தூயவன்போல் நடிக்கிறாயா?" ஏது சொல்வதெனத் தெரியாது வார்த்தைகளைத் தேடி திக்குமுக்காடிப் போனேன். " உன்னைப் பார்த்தால் அப்பாவிபோலத்தான் தெரிகிறது. உனக்கும் இரவு வேட்டைக்காரருக்கும் சம்பந்தம் இல்லையென்றே நினைக்கிறேன்". "இரவு வேட்டையா?" அன்னத்தைத் தேடி எனது முதலாவது கேள்வி உதிர்ந்தது. "அது உனக்குப் புரியாது. அதைப்பற்றிப் புரிந்தால் நீ பகலில் இந்தப் பக்கம் வந்திருக்க மாட்டாய். சொல்கிறேன் கேள் . . "

அன்னம் தனது பக்கத்தே நீந்தி வந்த நான்கு குஞ்சுகளையும் பார்த்து ஏதோ எச்சரிப்பதுபோன்று ஓர் பார்வையை வீசியது. முரண்டு பிடித்து ஒரு குஞ்சு தாயின் பின் பக்கமாக ஓடியது. அதனைப் பார்வையாலேயே கண்டிப்பதுபோன்று உறுத்து விழித்துவிட்டு, அன்னம் நானிருக்கும் கரையின் அண்மையாக நெருங்கி வந்து கதை சொல்லத் தொடங்கியது.

"என்னைப் பெற்றெடுத்தவர்கள் காலத்திலிருந்து, என்னைப் பெற்றெடுத்தவர்களைப் பெற்றெடுத்தவர்கள் காலத்திலிருந்து, அதற்கும் முதல், பல தலைமுறையாக இந்த நீர்த்தேக்கத்திலேயே எங்கள் வரலாறு வாழ்ந்து முடிகிறது. எனக்குத் தெரியக் கூடியதாக எனது இனத்தவர் யாரும் இங்கே அகாலமாய்ச் செத்துப்போனது கிடையாது. இந்தத் தேக்கத்தைச் சுற்றி பார்க்க வரும் இந்நாட்டு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள், எங்கள் மீது மிகவும் பிரியமாக நடந்து கொள்வார்கள். ரொட்டித்துண்டுகள், தானியங்கள் என்று எமக்குக் கொண்டுவந்து போடுவார்கள். கரையேறும் எங்கள் குஞ்சுகளைப் பவ்வியமாகத் தடவிக் கொடுப்பார்கள்"

"சில வாரங்களின் முன் உனது நாட்டு இளையவர்கள் சிலர் இந்தப் பக்கம் வந்த எம்மைப் பார்த்தார்கள். புகைப்படம் எடுத்தார்கள். நாங்களும் அவர்களைக் கண்டு முதலில் அஞ்சியபோதும் பின்பு அச்சம் தெளிந்து கொண்டோம். அப்போது நானும், என் அன்புக்குரியவனும் சந்தோஷமாக உலா வந்த காலம். இதோ இந்தக் குஞ்சுகளின் வருகைக்காக ஆவலோடு காத்திருந்தோம். எனது எட்டு முட்டைகள் இதோ . . நீமிருக்கும் பாறையருகிலுள்ள புதருக்குள் அடைகாலமாய்க் கிடந்தன. உன்னவர்கள் இந்தப்பக்கம் வந்து சென்ற சில தினங்களாக அவர்களை மீண்டும் காணக் கிடைக்கவில்லை. ஒரு நாள் இரவு, நிலவு செத்த நேரம், பூமியைக் கரிய இருட்டு வியாபித்திருந்த நேரம். இந்தப் புதருக்குள் நானும், என் காதலனும் கண்ணயர்ந்த சற்று நேரத்தில் ஏதோ அரவம் கேட்டு விழித்தேன் நான். இருட்டில் நால்வர். அவர்கள்தான். என்னால் நன்கு அடையாளம் காண முடிந்தது. அவர்களால் எமக்கு ஏதோ அனர்த்தம் நேரப் போகிறதென்பதைப் புரிந்து கொண்ட நான், என் காதலனைத் தூக்கத்திலிருந்து கலைக்கும் முகமாக ஓங்கிய குரலில் ஓலமிட்டபடி ஓடிச்சென்று நீர்த்தேக்கத்துள் குதித்தேன். நால்வரும் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து என் அன்புக்குரியவனை மடக்கிப் பிடித்தனர். எந்தச் சத்தமும் வெளி வராதபடி ஒரே பிடியில் அவர்கள் ஏதோ செய்து எனது காதலனின் உயிரைப் போக்காட்டியிருக்க வேண்டும். என் பிரியத்துக்குரியவனிடமிருந்து ஒரு சிறிதளவு மூச்சுக் கூட வெளிவரவில்லை. அன்றைய இரவு உனது நாட்டின் அந்த நான்கு இளைஞர்களுக்கும் மதுவோடு சேர்ந்து என் பிரியமானவனும் சுவை சேர்த்திருப்பான். அவர்கள் என் காதலனைப் பிடிக்கும் சமயம், அவர்களின் சதிராட்டத்திற்குள் அகப்பட்டு எனது எட்டு முட்டைகளில் இரண்டு உடைந்து நொருங்கி விட்டன. இரண்டு கூழ் முட்டையாகி விட்டன. நான்கு முட்டைகளிலிருந்து வெளிவந்த இந்த நான்கு குஞ்சுகளுமே இப்போது எனக்கு எல்லாத் துணையும். இவர்களைப் பார்க்கவும், இவர்களோடு நீந்தி விளையாடவும் எனது பிரியமானவன் இல்லை என்பது எனக்குப் பெருந்துயரம்தான். என்ன செய்ய முடியும் ?"

நீண்டதொரு மூச்சொன்றை துயரில் தோய்த்து வெளியேற்றி விட்டு அன்னம் என்னை விட்டு அகன்றது. நான்கு குஞ்சுகளும் தமது தாயின் பின்னே சென்றன. இப்போது புதிய துயரொன்று என்னைத்தொற்றிக் கொள்ள அதையும் சுமந்தபடி எனது அறைக்குத் திரும்பினேன்.



குணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கீகாரம்

## 1. விமர்சகன்

*—சங்கீதா—*

ஏதையாவது படி
ஏதையாவது பார்
படைப்பாளனைக் கவனி,
மண்டையில் வெளித்துவிட்ட
முன்முனையைக் கிழறி
ஞாபகத்தை மீட்டிப்பார்,
பாடைப்பாளன் பழையவனா?
இல்லை,
முந்தநாள் மழையில்
முளைத்து வந்த காழானா?

எச்சரிக்கையாகு,
பழையவன் என்றால்
எதற்கு வீண் வம்பு
ஆயிரம் குரல்களுள்
நீயும் ஒரு குரலாய்
வாழ்த்தொன்று பாடிவிடு
உனக்கும் கிடைத்துவிடும்
"விமர்சகன்" பட்டம்.

தலையை நிமிர்த்து
தாடியைத் தடவு
புருவம் உயர்த்தி
மேல்வெட்டாய் நோக்கு
முந்தநாள் முளைத்தவன்
விடாதே குறிவை.

முடிந்தவரை
நையப்புடைத்து
ஓடும்வரை விரட்டிவிடு
அகராதி புரட்டி
இடையிடையே ஆங்கிலமும்
சேர்த்துவிடு,
மேதாவி என்று உன்னை
இரகசியமாய்ப் பாராட்டி
தம் முகங்கள்
காத்துக் கொள்ள
இருக்கிதொரு கூட்டமிங்கே
யாருக்கு என்ன பயன்?
"சேவை மனப்பாங்கு"
வீறுநடை போட்டுச் செல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. கவிஞன்

*– சங்கீதா*

அடுக்கடுக்காய்ச் சொற்களைக்
கிறுக்கு
அதுவும் அவசியமில்லை.
நீண்ட வரிகள் வரும்
வசனங்களை,
நீளமும் கட்டையுமாய்
ஆங்காங்கே கத்தரி.
கத்தரித்த துண்டுகளை
நீள்வரிசை ஒழுங்கு செய்
(புதுக்) கவிதை போல்
காட்சிதரும்.

வசனங்களைக் கிறுக்குமுன்
சற்று நேரம் ! ,
"அகதி வாழ்வின் கோலங்கள்"
"இரத்தம் சிந்தும் போராட்டம்"
இவையேதும் சேர்த்துவிடு.
பின்பு,
கொள்கைகள் அற்று
பக்கங்கள் நிரப்ப அவதியுறும்
ஓர் சஞ்சிகைக்கு
பெரிய மனசு பண்ணி
உனது கவிதையை(?)
தானமாய்ப் பாடிவிடு.

போன் மணிகள் ஒலித்து ஓய
குவியும் பாராட்டுகள்.
விருந்தொன்று படைப்பதற்கு
அவர் வந்து அழைத்திடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்கள் வரிசையிலே
வலம் வரக் காத்திருக்கும்
விருந்துக்குச் செல்கையிலே
ஜாக்கிரதை ! ! !

நாட்டைப் பற்றிக் கதைஎடுத்தால்
மார்புதட்டி எதிர்பு கூறி
வீட்டைப் பற்றிப் பேச்செடுத்தால்
முகவாயைத் தொங்கவிடு.
உன்னைப்பற்றி பேச்செடுத்தால்
தலை குனிந்து தாழ்த்தி நின்று
நாடறிந்த பெரியவருள்
நாலு பேரை எடுத்துவிட்டு
உறவாடிச் சாதனைகள்
பல படைத்தாய் என்று கூறி
நடிகனாய் மாறிவிடு
இப்போ,
ஆலையில்லா ஊருக்கு
நீ தான் சர்க்கரை.

குறிப்பு:

*ஒருவன் வாழுகின்ற சூழலின் யதார்த்தத்திலிருந்து தான் இலக்கியங்களும் பிறக்கின்றன. புலம்பெயர்வாழ்விலே கொள்கைகள், இலக்குகள் கோட்டைவிடப்பட்டு அடையாளங்களும், அங்கீகாரங்களும் பெறுவதே முதன்மையடைந்துவிட்ட நிலை மேலோங்கிவரும் யதார்த்தத்திலிருந்து பிரசவித்த இரு கவிதைகள் இவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளதைச் சொல்வோம்

ராதை: இங்கு தமிழ்நிகழ்ச்சிகளில் பெண்களின் பங்கு குறைவு என்பது என் அபிப்பிராயம். நட்பை விடவும் திறமைக்கு முதலிடமளித்துப் பெண்களை அணுகினால் பலர் முன்வரலாம்.

வானதி: திறமையுள்ளவர்களை அத்தனை சுலபமாக இனம் கண்டுகொள்ளமுடியாது.

கோதை: சந்தர்ப்பம் கொடுத்தாலும் பல பெண்கள் முன்வரத் தயங்குகிறார்கள் என்பதே உண்மை. கேட்டால் குடும்பம், பிள்ளைகள், வீட்டு வேலை, நேரமின்மை என்றெல்லாம் காரணம் கூறுகிறார்கள்.

அருந்ததி: பங்குபற்றுவதனால் என்ன பிரயோசனம்?

ராதை: கலைக்காக ஒரு சேவைதான்.!

கோதை: போதும் ராதை . . . ., கேலி வேண்டாம். நாடு விட்டு நாடு வந்து வாழும் நாம் நம் திறமைகளை, எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதனால் சிந்தனைகளும் நம் பாரம்பரியமும் செழிப்படையச் சந்தர்ப்பம் இருக்கத்தான் செய்கிறது.

அருந்ததி: நான் அப்படி நினைக்கவில்லை. எத்தனையோ சங்கங்கள் இங்கு இருக்கின்றன. ஒவ்வொன்றிற்கும் ஆதரவு இருப்பதுபோல் எதிர்ப்பும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. ராதை சொன்னதுபோல் கலைச்சேவை என்று நினைப்பவர்கள் சிலர் எப்போதும் இருந்துகொண்டே இருப்பார்கள். நம்போல் சராசரிப் பெண்கள் நம் குடும்பம், நம் பிள்ளைகள் என்று கொஞ்சம் சுயநலமாகத் தான் வாழ வேண்டியிருக்கிறது.

வானதி: என் நிலை வேறு. சிறுவயது முதலே பொதுவிஷயங்களில் நான் ஈடுபட்டதில்லை. பலர் முன்னிலையில் என் கருத்துக்கள் வலுவிழந்து- போய்விடுமோ என்கிற பயமும், தயக்கமும் நான் வளர்ந்த சூழலும் தான் இதற்குக் காரணமென நினைக்கிறேன்.

ராதை: முன்பு பெண்களுக்கான அமைப்பு ஒன்று தீவிரமாக இயங்கி வந்தது. அங்கத்தினர் எண்ணிக்கை மிகக்குறைவாகி விட்டமையால் தொடரவில்லை என்பது வருத்தம் தருகிறது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானதி: அப்படிஒரு அமைப்பு இருந்ததாகவே நான் அறியவில்லையே.

கோதை: கூட்டங்களுக்கு வருகை தருமாறு பல கடிதங்கள் அனுப்பப்பட்டும் இதையேதான் எல்லோரும் சொன்னார்கள். ஏனைய சங்கங்களின் தலைமீடுகளும் குழப்பத்தை உருவாக்கியது.

அருந்ததி: உண்மையான ஈடுபாட்டுடன் ஒரு நல்ல விஷயத்தைத் தான் செய்கிறோம் என்ற திருப்தியுடன் செயற்பட்டும் போதிய வரவேற்புக் கிடைக்கவில்லை. எஞ்சியதெல்லாம் மனக்கசப்பு மட்டுமே. தனித்திருந்த காலங்களில் பொதுவிஷயங்களில் ஆர்வம் இருக்கத்தான் செய்தது. ஓய்வுநேரம் பிரயோஜனப்படும் வகையில் கழிகிறதே என்கின்ற திருப்தி இருந்தது. இப்போது இவற்றால் என்ன பலன் என்றொரு சலிப்பு . .. திருமணமாகிவிட்டதும் கூட ஒரு காரணமாக இருக்கலாம்.

ராதை: மாதர் சங்கம் என்றாலே தையல், சமையல் வகுப்புக்கள் தான் இருக்கவேண்டுமா? அறிவுத்திறனை வெளிக்கொண்டு வருகிறாற்போல் விழாக்களை ஒழுங்குசெய்து பட்டிமன்றங்கள், போட்டிகள், புத்தகவெளியீடுகள் போன்ற விஷயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தால் அங்கத்தினர் எண்ணிக்கை அதிகரித்திருக்கலாம்.

கோதை: கண்காட்சி, உல்லாசப்பயணம் என்று வேறுபட்ட விஷயங்களில் ஈடுபடத்தானே செய்தார்கள்?

அருந்ததி: கூட்டங்களுக்கு வருகை தந்தவர்களைக் காட்டிலும் தையல், சமையல் போன்ற வகுப்புகளுக்குச் சென்றோர் எண்ணிக்கைதான் அதிகம் என்று நினைக்கிறேன். இப்போது இப்படி வேறு ஒரு காரணமா?

வானதி: இதுகூடப் பரவாயில்லை. இங்கு திருமணமாகி வரும் பல தமிழ்ப்பெண்கள் நோர்வேஜியமொழியைப் படிக்கப் போதிய ஆர்வம் காட்டுவதில்லையே.

கோதை: ஆமாம், இங்கு பல வருடங்கள் வாழ்ந்து இந்நாட்டின் பிரஜையான பின்பும் இந்நாட்டு மொழியினைச் சரிவரப் பேசப்படிக்கத் தெரியாமல் இருப்பவர்களை நான் கண்டிருக்கிறேன்.

ராதை: குழந்தைப்பேறு காரணமாகவோ அல்லது வேறு காரணங்களாலோ மொழியினைப் படிக்கும் நேரமும், வசதியும் கிடைக்காமல் கூட இருக்கலாம். இதனால் சுயதேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதாயினும் கூட இன்னொருவர் உதவியை எதிர்பார்க்க வேண்டிய நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்ததி: விருப்பமோ இல்லையோ இந்நாட்டில் வாழும்வரை மொழியைப் பேசப்படிக்கத் தெரிந்திருப்பது அவசியம். நோர்வேஜிய சூழலுடன் ஒட்டிப்பழகினால் தான் இந்நாட்டில் தனித்துச் சமாளிக்க முடியும். தனித்தனிக் குழுக்களாக நம்மைச் சுற்றி ஒரு எல்லையை ஏற்படுத்திக்கொண்டு நோர்வேஜியரிடமிருந்து விலகியிருப்பது ஆரோக்கியமானதல்ல.

வானதி: வயதுகூட ஒரு காரணம்தான். திருமணமானபின்னர் இன்னொருவரைச் சார்ந்தே வாழ்ந்து பழகி விட்ட எமக்கு இனிமேல் என்ன படிப்பு என்றொரு சலிப்பு ஏற்பட்டுவிடுகிறது. இங்கு வயது எல்லையின்றிக் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம். இங்கு வாழும் பெண்களால் துணிந்து சுயமாகப் பல முடிவுகளை எடுக்க முடிவதற்கு இதுவும் ஒரு காரணம்தான்.

ராதை: நான் அப்படி நினைக்கவில்லை. இக்கட்டான ஒரு சூழ்நிலை வரும்போது கலாச்சாரம், பண்பாடுபோன்ற வரம்புகளை மீறி முடிவுகளை எடுக்க அன்றும் இன்றும் அனேகமான பெண்கள் தயங்கவே செய்கிறார்கள்.

கோதை: ஆமாம், ஒரு சிலர் வசதிக்காக ஏற்படுத்தப்பட்ட கொள்கைகள் கலாச்சாரம் என்ற பெயரில் ஆதிக்கம் செலுத்துவதனால் இங்கு கூட சில பெண்கள் மனதுக்குள் குமுறிக்கொண்டு விரும்பத்தகாத வாழ்க்கை வாழ்வதை நான் அறிவேன்.

அருந்ததி: எங்கு சென்றாலும் எத்தனை காலம் அந்நியநாட்டில் வாழ்ந்தாலும் எம் வளர்ப்பின்போதே நம்முள் ஊறிவிட்ட இந்தப் பண்புகள் மாறுவதற்கில்லை.

வானதி: இங்குள்ள பெண்கள் பொட்டணிந்து செல்வது குறைவு. தங்கநகையணிபவர்கள் தமிழர்களிடையே புனிதமாகப் போற்றப்படும் தாலியினை மட்டும் பாரமாக எண்ணிக் கழற்றி வைத்து விடுகிறார்களே. இதென்ன நாகரிகமோ?!

ராதை: பொட்டு வைத்துக்கொள்வதாலும், தாலியணிந்து செல்வதாலும் மட்டும் நம் பண்பாடு பேணப்படுகிறதென்று நான் நினைக்கவில்லை.

அருந்ததி: என் வரையில் நாம் பிறந்த நாடு, வளர்ந்த சூழல், நம் பெற்றோர் என்பதுபோல கலாச்சாரமும் ஒருவகை அடையாளம். அவ்வளவுதான்.

கோதை: ஆமாம், கலாச்சாரத்தைப் பேணுவதாகக் கருதி இந்நாட்டில் சேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிக் கொண்டு நடமாட முடியுமா? பொட்டிட்டு வெளியே செல்லும் போதெல்லாம் நோர்வேஜியர்களின் கேள்விகளுக்குப் பதிலளிப்பதிலேயே போதும் போதுமென்றாகி விடுகிறது.

வானதி: மற்றவர்கள் நினைப்பதனால் என்ன? நம் கலாச்சாரத்தை நாம் பேணவேண்டும்!

ராதை: இலங்கைக்கு வரும் வெளிநாட்டுச் சுற்றுப்பிரயாணிகள் கோடை காலங்களில் மிகக் குறைவான ஆடைகளோடு தெருக்களில் சென்றால் அது அவர்கள் கலாச்சாரம் என்று எம்மில் எத்தனை பேர் இயல்பாக எடுத்துக்கொள்வார்கள்!? மற்றவர்கள் தம்மை அந்நியப்படுத்திப் பார்ப்பதை விரும்பாதவர்கள் இருக்கும் இடத்தின் பண்பாடு, காலநிலை, வசதிக்கேற்பப் புறப்பட்டுச்செல்வது நல்லதுதானே.

அருந்ததி: எல்லாமே பழக்கத்தில்தான் தங்கியிருக்கிறது. சிறுவயதுமுதல் நான் பொட்டணிந்து செல்வது தான் வழக்கம். இங்கு வந்த பின் எனது வேலைத்தலத்தில் பலர் வந்து போவதால் அனாவசிய பேச்சு வளர இடம் கொடுக்கும் என்று காரணம் காட்டி நான் பொட்டணிவதை முதலாளி கண்டித்தார். அப்போது விட்டதுதான். இப்போது அதுவே பழகிவிட்டது.

கோதை: பொட்டு சாதிப்பிரிவினைகளைக் குறிப்பதாகப் பல நோர்வேஜியர்கள் நினைக்கிறார்கள். இந்து சமயத்தில் பல கடவுள்கள் இருக்கிறதாமே என்று அதிசயப்படுகிறார்கள். இது குறித்து நம்மவர்களிடமே சரியான விளக்கம் இருக்கிறதென்று சொல்வதற்கில்லை.

ராதை: இந்து சமயம் மிகவும் பழமையானது. அந்தக் காலத்தில் பாமரர் கூடப் புரிந்து கொள்ளும் வகையில் இறைவனை அவரவர் எண்ணங்களுக்கேற்ப எளிமையான பல வடிவங்களில் கற்பனை செய்து வணங்குகிறோமே தவிர கடவுள் ஒருவனே. இதை அவர்களுக்கும் நாம் புரியவைக்க வேண்டும்.

வானதி: சமயம் மட்டுமா? நம்முடன் நெருங்கிப் பழகி நம் கலாச்சாரத்தைப் பற்றி நன்கு தெரிந்து வைத்துக் கொண்டிருக்கும் சில நோர்வேஜியர்கள், இங்குள்ள தமிழ்ப்பெண்கள் வெளியே சென்று நாகரிகம் கருதி மது அருந்துவதையும் புகைப்பிடிப்பதையும் பார்த்து, உங்கள் நாட்டுப் பெண்களிடம் கூட இந்தப்பழக்கங்கள் இருக்கிறதா என்று ஆச்சரியப்பட்டுக் கேட்கிறார்கள்.

கோதை: பழக்கவழக்கம் வேறு, பண்பாடு வேறு. மது அருந்துவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைப்பிடிப்பதுவும் உடல் நலத்திற்குக் கேடு என்பதுதான் எனக்குத் தெரிகிறது.

அருந்ததி: அதைக் கலாச்சாரம் என்றே வைத்துக்கொண்டாலும், கலாச்சாரம் ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவானதொன்றல்லவா? அதைப் பேணுவதில் இருவருக்குமே சரிசமமான பங்கு இல்லையா?

வானதி: எனினும் பெண்கள் இப்படி நடக்கலாமா? இத்தகைய தீய வழக்கங்கள் கொண்ட ஆண்களையும் நம் நாட்டில் கூட சமூகம் குறைகூறத்தான் செய்கிறது. அதனால் இங்கு அவர்கள் தவறான வழிகளில் சென்றால் கலாச்சாரத்தை அவர்கள் மறந்து விட்டதாக அர்த்தமில்லை. தனிமையும் இந்நாட்டின் காலாச்சாரப் பாதிப்பும் தான் அவர்களை மாற்றி விடுகிறது.

ராதை: அதே பாதிப்பினை ஏன் பெண்களிடம் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்கிறார்கள்? ஏதோ பெண்கள் தான் நம் பண்பாட்டினைக் கட்டியாளும் ஏகபோக உரிமையாளர்கள் போல கலாச்சாரம் என்ற கேள்வி எழுந்தாலே நம்மைத்தான் சீண்டுகிறார்கள் என்பது எரிச்சலூட்டுகிறது.

வானதி: இங்கு வாழும் பெண்கள் கலாச்சாரத்தை மறந்து வாழ்கிறார்கள் என்று ஒட்டுமொத்தமாகக் கூறி விடவும் முடியாது. படிப்பு, வேலை என்று எத்தனையோ சிரமங்களின் மத்தியிலும் நம் நாட்டு உணவுவகைகளைச் சுவையாகச் சமைப்பதில் அக்கறை காட்டுகிறார்கள். இங்கு பிறந்த குழந்தைகளுக்கு அவை தெரிந்திருக்க வேண்டியது அவசியம்.

கோதை: உணவுவகைகளில் என்ன இருக்கிறது? நமக்கு மூன்று வேளையும் விதம்விதமாகச் சாப்பிட்டுப் பழகிவிட்டதுதான் காரணம். இதைக் குழந்தைகள் வேறு பழகவேண்டுமா?

வானதி: அப்படிச் சொல்லி விடமுடியாது. நம் நாட்டின் வழக்கங்கள் பற்றி அவர்கள் தெரிந்திருக்க வேண்டியது அவசியமே. அத்துடன் சில ஆண்கள் எங்காவது சென்று தமிழ் உணவுகளைக் கண்டால் அலைகிறார்கள். அது வீட்டிலிருக்கும் மனைவியிடமுள்ள குறைதானே?

(சிரிப்பு)

அருந்ததி: ஒரு சிலரின் சுயநலத்திற்காக உருவாக்கப்பட்ட வழக்கங்கள்தான் பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து இன்று கலாச்சாரம் என்ற பொய்ப்பெயர் தாங்கி உலவுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதை: உண்மைதான். இது நம்மைப் பிடித்துக்கொண்ட சாபக்கேடு என்றுதான் சொல்லவேண்டும். நம்மவரிடையே உள்ள சாதிப்பிரிவினை, சீதனம் போன்றவையும் இவ்வாறே. இவற்றால் பெரிதும் பாதிக்கப்படுவது பெண்கள்தானே.

வானதி: இங்கு சீதனம் வாங்குவதில் காட்டப்படும் தீவிரம் சாதி பார்ப்பதில் இல்லை.

ராதை: அதைத்தவறு என்று சொல்வீர்கள் போலிருக்கிறதே!

வானதி: இல்லை . . ,, இல்லை . . . . .. சாதி அழிந்து வருகிறது. அது வரவேற்கப்படவேண்டிய விஷயம்.

கோதை: சாதி அழிந்து வருகிறதா? நிச்சயமாக இல்லை! படித்தவர்கள் கூட இங்கு சாதி பார்க்கிறார்கள் என்பது மறுக்கப்படமுடியாத, வெட்கத்துக்குரிய கசப்பான உண்மை!

ராதை: இங்கு பல காலம் பழகிய நெருங்கிய தோழிகள் கூட என்னிடம் மறைமுகமாகக் கேள்விகள் கேட்டு என் சாதியைத் தெரிந்து கொள்ள முயற்சிப்பது சிலசமயம் அப்பட்டமாகப் புரியும்போது வெறுப்பாக இருக்கிறது.

கோதை: தொழில்ரீதியில்தான் ஆரம்பத்தில் இப்பிரிவினைகள் தோன்றினாலும் முன்னர் அருந்ததி கூறியதுபோல் ஒரு சிலரின் சுயநலத்திற்காகப் பின்னர் பொருளாதார அடிப்படையில் அடிமட்டத்தினரின் உரிமைகளை நசுக்குவதற்கென்றே உயர்மட்டத்தினரால் தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.

அருந்ததி: அப்பப்பா! சாதி, சீதனம் என்ற வார்த்தைகளைக் கேட்டுக் கேட்டுப் புளித்துப்போய்விட்டது. எங்கு சென்றாலும், எதற்கெடுத்தாலும் சர்ச்சைக்குரிய சுவாரஸ்யமான விஷயமாகப் பொழுதுபோக்கிற்காக இவைதான் அலசப்படுகின்றன. நாம் வெறுமனே பேசிக்கொண்டு தான் இருப்போம். பின்பு மறந்து விடுவோம். அவ்வளவு தான்! பின்னர் பேசிப் பயன் என்ன?

வானதி: திருமணங்களை நிச்சயிக்கும்போது முன்பின் தெரியாதவர்களது குடும்பப்பின்னணி, வளர்ந்த சூழல், பழக்கவழக்கங்கள் போன்றவற்றிற்கு அளவுகோலாகச் சாதி பார்ப்பது தவறல்ல.

கோதை: உண்மைதான். எனக்குத் தெரிந்த ஏழைப் பெண்ணொருத்திக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணம்பேசி முடிக்கும் பொறுப்பு என் பெற்றோரைச் சேர்ந்தது. அவளது ஏழ்மையை உத்தேசித்து சீதனம் கேட்காத, நல்ல வேலையிலிருந்த வேற்றுசாதிப்பையன் ஒருவனை அவளுக்காக நிச்சயிக்க அவர்கள் முன்வந்தபோது சாதியைக் காரணம் காட்டி அவர்கள் மறுத்துவிட்டார்கள். உணவுக்கே வழியின்றிப் பட்டினியே கிடந்தாலும் பரம்பரைக் கௌரவம் என்றும் தாம் உயர்ந்தசாதி என்றும் மார்தட்டிக்கொள்வதில் அப்படி என்ன பெருமையோ!

அருந்ததி: காலகாலமாய் நம்முள்ளே ஊறிவிட்ட மூடக்கொள்கைகள் தான் இவை.

வானதி: இங்கு வசிக்கும் ஜனனியைத் தெரியுமல்லவா? அவள் வீட்டில் அவளும், அவள் சகோதரி இருவருமே காதலித்து வேற்றுசாதிக்காரர்களைப் பெற்றோரின் சம்மதத்துடன் மணமுடித்தார்கள். ஆனாலும் தன் மகளுக்குத் திருமணம் நிச்சயிப்பதானால் சாதி பார்ப்பேன் என்று திடமாகக் கூறுவாள் ஜனனி.

கோதை: காதலித்துத் திருமணம் செய்துகொண்டதால் சாதி பார்த்திருக்கமாட்டார்கள். நிச்சயிக்கப்படும் திருமணமென்றால் நிலைமையே வேறல்லவா?

வானதி: ஆமாம், அதற்கு அவள் கூறிய காரணத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடிந்தது. சாதி மாறித் திருமணம் செய்து கொள்வதனால் சமூகத்தாரிடம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டோமோ என்கிற பயம் ஏற்படும் என்றாள். தன் பிள்ளைக்கு அப்படி ஒரு நிலை வருவதை எந்தத்தாய்தான் விரும்புவாள்?

ராதை: அது எப்படி? ஜனனி சாதி பாராது திருமணம் செய்துகொள்ளும்போது சமூகத்தை நினைவில் கொள்ளவில்லையே. பெற்றோரின் மனப்பூர்வமான சம்மதத்தை மட்டும்தானே எதிர்பார்த்தாள். அதேபோல அவளது குழந்தைக்கும் பெற்றோர் என்ற வகையில் அவளும், கணவனும் மட்டும் ஏற்றுக்கொண்டால் போதாதா? அப்போது மட்டும் சமூகத்தைக் குறைகூறுவானேன்?

(மௌனம்)

வானதி: இங்குள்ள பெண்களைச் சீதனப் பிரச்சனை அவ்வளவாகப் பாதிப்பதில்லை பகுதிநேரவேலைகளால் அதிகளவில் உழைக்கிறார்களே.

அருந்ததி: அப்படிச் சொல்வதற்கில்லை. மாணவர்களுக்கான உதவிப்பணம், பகுதிநேரவேலை இல்லாத கோதை போன்றவர்களால் சீதனம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரில் மிகப்பெரிய தொகையொன்றைக் கொடுக்கமுடியுமா?

கோதை: (சிரிப்பு) . . . உண்மைதான். புதியதொரு வகையில் என்னைச் சிந்திக்க வைத்திருக்கிறீர்கள். தேன்தமிழோசைக்கு நன்றி!

(சிரிப்பு)

ராதை: சாதி, அந்தஸ்த்து என்பன பார்த்து நம் குறைகளை, ஓட்டைகளை எல்லாம் சீதனம் கொடுத்துச் சரிசெய்து திருமணம் நடந்த பிறகு வாழ்க்கை எப்படி இருக்குமோ என்று நினைக்கையில் பயமாகத்தான் இருக்கிறது.

கோதை: உண்மைதான். திருமணம் என்பது இப்போதெல்லாம் ஒரு வியாபாரமாகி விட்டது.

அருந்ததி: இங்குள்ளவர்கள் வெளிநாடுகளில் வாழும் பெண்களைத் திருமணம் செய்து கொள்ள விரும்புவதில்லை. இலங்கைக்குச் சென்று அங்கே பெண்களைத் தெரிந்தெடுக்கத்தான் அனேகமானவர்கள் விரும்புகிறார்கள்.

வானதி: இங்குள்ள தமிழ்ப்பெண்கள் இந்நாட்டின் கலாச்சாரத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாக அவர்களைத் தவறான கண்ணோட்டத்துடனேயே பார்க்கிறார்கள்.

கோதை: அதேபோல் பெண்களும் நினைத்து விட்டால் . . . . ? நல்லது கெட்டதைப் பிரித்தறியத் தெரியாமல் முற்று முழுதாகக் கணவனிடமே தங்கியிருக்கும் பெண்களைத்தானே தமிழ் ஆண்களுக்குப் பிடிக்கிறது!

அருந்ததி: எல்லா ஆண்களையும் அப்படிச் சொல்லிவிடமுடியாது. சுயமாகத் தன் காலில் நிற்கக் கூடிய புத்திசாலிப் பெண்களை விரும்புகிறவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். நல்ல தமிழ்ப் பெண்ணாக இருப்பதை விடவும், நல்ல மனித குணங்கள் இருப்பது தான் அவசியம்.

கோதை: அடக்கமாக, சொல்வதை எல்லாம் கேட்டுக்கொண்டு அனாவசியமாக வெட்கப்பட்டுக்கொண்டு இருக்கும் பெண்களைத் தான் நல்ல தமிழ்ப்பெண் என்று நினைக்கிறார்கள்.

ராதை: அடக்கம் என்பது அதுவல்ல, அடக்கம் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது. இங்கு "நல்ல தமிழ்ப்பெண்"ணாக வாழும் பலர் மற்றவர்களைப் பற்றி வம்பு பேசுவதும், தம் நகைகளைப் பற்றி பெருமையாகத் தம்பட்டமடித்துக் கொள்வதுமாக இருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதிக்கு மீறிய எண்ணம், வம்பு பேசுவது இவற்றைத்தான் அடக்கமின்மை என்று நினைக்கிறேன்.

வானதி: இங்கு வம்பு பேசுவது அனேகமாக ஆண்கள் தான். ஆனால் பெண்கள்தான் பெரும்பாலும் வெளிப்படுத்தினை விரும்புகிறார்கள். ஆனாலும் நோர்வேயில் வாழும் தமிழ்ப்பெண்கள் மற்ற நாடுகளில் வாழும் தமிழ்ப்பெண்களை விடவும் ஒழுக்கம், பண்பாடு போன்றவற்றில் உறுதியாக இருக்கிறார்கள் என்பதென்னவோ மறுக்க முடியாத உண்மைதான்.

கோதை: நல்ல இல்லறத்திற்குத் தேவையான அன்பு, விசுவாசம் போன்றவற்றைக் கருத்தில் கொள்வாரில்லை. எந்தத் தமிழ்ப்பெண்ணிடமும் கொஞ்சம் சாகசங்கள், போலியான வெட்கம் தேவைப்படத்தான் செய்கிறது.

வானதி: திருக்குறளில் வாழ்க்கைத்துணைநலம் என்ற அதிகாரத்தில் நல்ல இல்லாள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்று விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை எனைமாட்சித் தாயினும் இல்" என்ற குறள் ஒன்று இல்வாழ்க்கைக்குத் தகுந்த நற்பண்புகள் கொண்டிராத மனைவியை அடைந்தவன் வாழ்வில் வேறு எத்தனை சிறப்புக்கள் இருந்தும் பயனில்லை என்கிறது.

அருந்ததி: வள்ளுவரின் "வாழ்க்கைத்துணைநலம்" என்ற அதிகாரம் பெண் அடக்குமுறையை ஆதரிப்பதாகவே அமைந்திருப்பதாகத் தமிழ்நாட்டைச் சேர்ந்த பேராசிரியை ஒருவர் எழுதிய கட்டுரை ஒன்றைச் சமீபத்தில் படித்திருக்கிறேன்.

ராதை: நான் திருக்குறளை முழுமையாகப் படித்ததில்லை. ஆனாலும் பெண்மைக்கான நால்வகைக்குணங்களை அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்று வரையறுத்த காலத்தைச் சேர்ந்ததுதானே திருக்குறள்! நாளடைவில் பாரதியால் அந்த நிலை மாறி "நேர்கொண்ட பார்வையும், நிமிர்ந்த நன்னடையும்" கொண்ட புதுமைப்பெண் வந்தாயிற்றே . . . .

அருந்ததி: "நாணமும், அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்" என்று பழைய இலக்கணங்களை பாரதியார் மாற்றியமைத்திருப்பது தெரிந்ததுதானே.

வானதி: எப்படியும் வாழலாம் என்ற எண்ணம் ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் நம் முன்னோர்கள் நமக்காகப் பல நல்வழிகளை வகுத்துக்கொடுத்திருக்கிறார்கள். அதைத் தவறென்கிறீர்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோதை: இல்லையே. நம் நாட்டில் நாம் சிறுவயதில் பாடசாலைகளில் படித்த இராமாயணம், மகாபாரதம் போன்ற நல்வழிக்கதைகள் உண்மை பேசவேண்டும், தர்மம்தான் வெல்லும், பிறர் பொருளுக்கு ஆசைப்படக் கூடாது என்பன போன்ற நல்ல விஷயங்களைக் கற்றுக் கொடுத்திருக்கிறது. ஆனால் இங்கு பிறந்த குழந்தைகளுக்கு அவை தெரிந்திருக்க நியாயமில்லை. அதற்காக அவர்கள் தவறான வழியில் செல்வதாக அர்த்தமா?

வானதி: அப்படியல்ல, ஆனால் இங்கு குழந்தைகளின் பழக்கவழக்கங்களைத் தீர்மானிப்பது பெற்றோர் நடந்துகொள்கிற முறைதான். வீடுகளில் மனைவிமார் கணவனின் வார்த்தைகளுக்கு மதிப்பளிக்காமல், கணவனை மரியாதைக் குறைவாக நடத்தும்போது குழந்தைகளும் கெட்டுப் போய்விட வாய்ப்பிருக்கின்றது.

அருந்ததி: திருமணம் இடையில் வருவதுதான். அதுவரையில் எந்த ஆணையும் போலவே பெண்களும் பல அனுபவங்களைச் சந்தித்திருப்பார்கள். அதனால் தனிப்பட்ட உணர்ச்சிகள் அவர்களுக்கும் இருக்கத்தான் செய்யும். குழந்தைகளின் சிந்தனையை நாம்தான் உருவாக்குகிறோம். வளர்ந்து பக்குவமடைந்த மனைவி என்பவள் தனிப்பட்ட ஒரு ஆத்மா. மாற்றியமைக்க களிமண் பொம்மையல்லவே.

வானதி: கணவனின் சொல்கேட்டு நடந்தால்தான் குடும்பம் என்கின்ற தேர் அழகாக ஓடும். அது அடிமைத்தனம் என்பதல்ல. கட்டுப்பாட்டின் அடையாளமே. இங்கு எல்லாமே தலைகீழாக மாறிவிட்டது. சில வீடுகளில் வேலையால் களைத்து வரும் கணவன்தான் வீட்டில் சமையலையும் செய்ய வேண்டியிருக்கிறது . நாள் முழுவதும் வீட்டிலேயே இருந்தாலும் குழந்தைகளுடன் மாரடிக்கவே நேரம் சரியாக இருக்கிறதென்று காரணம் சொல்கிறாள் மனைவி. இதுதான் நம் நாட்டின் வழக்கமா!

ராதை: இங்கு குழந்தை வளர்ப்பு என்பது அத்தனை சுலபமானதல்லவே. இருவேறு கலாச்சாரங்களுக்குள் வளரும் குழந்தைகட்கு ஒவ்வொன்றாய் உணர்த்தி வெளி உலகை அறிமுகப்படுத்திவைக்கும் பெரிய பொறுப்பு தாயைத்தானே சேர்கிறது!.

கோதை: கணவன், மனைவி இருவருமே கல்வி, வேலை என்று இறங்கி விட்ட நிலையில் நேரமின்மை என்பது பொதுவான பிரச்சனைதானே.

அருந்ததி: அதற்காக நீ சமைத்தால் நான் குழந்தைகளைக் கவனிப்பேன், நான் சமைத்தால் நீ கழுவி வைக்கவேண்டும் என்று 50:50 ஆக வீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகளைக் கணவனும் மனைவியும் சரிசமமாகப் பங்கிட்டுக் கொள்ளவேண்டும் என்பதில்லை. அன்பும் புரிந்துணர்வும் இருந்தால் போதுமே. கணவன் மனைவிக்குள் ஏனிந்தச் சட்டங்கள்?

ராதை: சமையல் யாரும் செய்யலாம். ஆனால் பக்குவம் பார்த்து, ருசி பார்த்து, போஷாக்கு, உடல்நிலை இவற்றைக் கருத்தில் கொண்டு அன்பையும் சேர்த்துப் பரிமாறுபவள் பெண்ணாகத்தான் இருக்கமுடியும்.

அருந்ததி: என் வீட்டில் என் கணவர்தான் பெரும்பாலும் சமையல் செய்கிறார். என்னை விடவும் போஷாக்கு, ருசி பார்த்து உணவு தயாரிப்பதில் அவருக்குத்தான் அதிக ஆர்வமிருக்கிறது. இல்லாவிட்டால் படிப்பு, வேலை, குழந்தைகளோடு என்பாடு சிரமமாகவே இருக்கும். ஒருவரின் சிரமத்தில் இன்னொருவர் கைகொடுத்து உதவமுடியாவிட்டால் திருமணவாழ்வின் அர்த்தம் தான் என்ன?

கோதை: பொதுவாக அனேகமான ஆண்கள் தம் மனைவியின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதுபோல் இருந்தாலும் தம்மைவிடவும் அவர்கள் ஒன்றும் அதிகம் தெரிந்தவர்களில்லை என்றே சாதிப்பதைப் பார்த்திருக்கிறேன்.

வானதி: என் வரையில் அப்படியில்லை. பாராட்டுத்தான் கிடைத்திருக்கிறது. ஆனால் எமக்குத் திருமணமாகி ஒரு வருடம்தானே ஆகிறது. . . . போகப் போக எப்படியோ!

( சிரிப்பு )

அருந்ததி: என்னைப் பொறுத்தவரையில் கூட அப்படி இல்லை. ஊக்கமும், உற்சாகமும் அளித்து என் வெற்றிகளில் என் கணவரும் மகிழ்வதுதான் வழக்கம்.

ராதை: உங்கள் கணவர்களின் பெருமையை விட்டுத் தள்ளுங்கள்! (சிரிப்பு) நம்மவர்களிடையே ஆரோக்கியமான அடிப்படையிலமைந்த சகஜமான நட்பு ஆண்-பெண் இருவருக்கிடையே சாத்தியமில்லை என்றே நினைக்கிறேன். முடிந்தால் திருமணத்திற்குப் பின்னும் அது தொடராததேன்?

கோதை: நாம் மட்டுமல்ல, நோர்வேஜியர்களால் கூட அப்படி ஒரு நட்பினைத் தொடர முடிவதில்லை. நேரமின்மைதான் அதற்குக் காரணம்.

வானதி: அத்துடன் அதே நட்பும் புரிந்துணர்வும் கொண்ட கணவன் அமைந்துவிட்டால் அந்த உறவை வெளியே தேடுகிற அவசியமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமற்போய்விடலாம்.

அருந்ததி: அனேகமானவர்கள் தம் கணவனோ மனைவியோ பிற பெண் ஆண் நண்பர்களோடு பழகுவதைப் பெருந்தன்மையாக ஏற்றுக்கொள்வதாகக் காட்டிக்கொண்டாலும் சம்பந்தமில்லாத வேறு பிரச்சனைகளைக் கிளப்பி தம் ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றனர்.

கோதை: மிகவும் பொதுப்படையாகச் சொல்கிறீர்கள். 'தமது கணவன் அல்லது மனைவிமேல் அவர்கள் கொண்டுள்ள அளவுகடந்த அன்பு கூட இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

அருந்ததி: நான் எதிர்பார்த்ததுபோல மனம்போல் வாழ்க்கை அமைந்திருந்தாலும் ஆரம்பத்தில் பெண்ணாக இருந்து குடும்பப்பெண்ணாக மாறும்போது மனதளவில் ஏற்பட்ட அந்த மாற்றம் . . . இருவேறு நிலைகளுக்கிடையே படிப்படியாக மாற்றமடைந்து கொண்டிருந்த அந்தக் காலகட்டம் . . . ஏதோ ஒருவித சோகத்தை ஏற்படுத்தியது மட்டும் உண்மை.

வானதி: அப்படியா . . ?! புரியவில்லையே . . . .

ராதை: காரணங்கள் வேறுபடலாம். நான் சிறுமியாக இருந்து பின் பெண்ணானபோதும் கூட மனதில் ஏதோ ஒரு சோகம் . . . சிறு மாற்றம் ஒன்றை உணர்ந்திருக்கிறேன். கொஞ்சம் சந்தோஷமாக . . . கொஞ்சம் வேதனையாக . . . ஏன் கொஞ்சம் ஏமாற்றமாகவும் கூட இருந்தது.

கோதை: அதற்குக் கட்டுப்பாடுகள், நம் சமூக அமைப்புக்கள் தான் காரணமென நினைக்கிறீர்களா?

(மௌனம் )

வானதி: ஆணும், பெண்ணும் சமம் என்றொரு நிலை ஏற்பட்டால் சீதனக்கொடுமை உட்படப் பல பிரச்சனைகள் தீர வழி இருக்கிறது. அதுபோலப் புதிய பிரச்சனைகளும் எழக்கூடும்.

அருந்ததி: அப்படி ஒரு நிலை வரும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை!

ராதை: நம் உரிமைகளைக் கேட்டுத்தான் பெறவேண்டுமா? என்னைப் பொறுத்தவரையில் அந்த உரிமைகளை நாமாகவே எடுத்துக்கொள்ளலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பேன். சுதந்திரம் எமது பிறப்புரிமையல்லவா? அதனால் எந்த விதத்திலும் என் உரிமைகள் மறுக்கப்பட்டதாக நான் உணர்ந்ததே இல்லை!.

வானதி: "சுதந்திரம்" என்று இங்கு எதைக் குறிப்பிடுகிறீர்கள்?

ராதை: நல்ல கேள்வி! அதைப்பற்றிய தெளிவு நமக்கு மிக முக்கியம்.

கோதை: சுதந்திரம் என்பது கருத்துக்களுக்கு, நம் வாழ்வை நாமாகவே தீர்மானித்துக்கொள்வதற்கு, எந்த மனிதனையும் போலப் பெண்ணின் உணர்ச்சிகளும் மதிக்கப்படுவதற்குத்தானே தவிர பலர் நினைப்பதுபோல தவறான வழிகளில் செல்வதற்கான வழி அல்ல. அது கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் பெண்மையிலும், நம் மன உறுதியிலும் மாற்றம் ஏற்படுவதிற்கில்லை.

அருந்ததி: ஐரோப்பிய நாடுகளில் கூட சமஉரிமை கிடைக்கவில்லை என்றே நோர்வேஜிய நண்பிகள் கூறுகிறார்கள். பாடசாலைகளில் ஆண்கள் தாமாக முன்வந்து தம் கருத்துக்களை வலியுறுத்திக் கூறுவதுபோலத் தங்களால் ஆணித்தரமாகப் பேசித் தம் கருத்துக்களை நிலைநிறுத்திக் கொள்ள முடிவதில்லை என்று பொருமுவார்கள். இவர்களுக்கே இந்த நிலை என்றால் நம் தமிழ்ப் பெண்கள் நிலை எம்மாத்திரம்?

வானதி: பொதுவாக வெளிநாட்டுக்கு வந்தபின் நம் சிந்தனைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. உதாரணமாகத் திருமணம் செய்தபின்னரும் நம் பெண்கள் கல்வியைத் தொடரும் ஆர்வம் கொண்டிருப்பதைக் கூறலாம்.

கோதை: இங்கு பெரியவர்கள் தம் கருத்துக்களை வலியுறுத்திக் கூறும்போது என்னால் மறுத்துப் பேச முடிகிறது. இது என்னில் ஏற்பட்டிருக்கின்ற பெரிய மாற்றம்தான். ஏனெனில் இலங்கையில் இருந்திருந்தால் இத்தனை தூரம் அவர்களிடம் என் எதிர்ப்பைக் காட்டுவேனா என்பது சந்தேகமே.

அருந்ததி: தனித்து வாழ்க்கையுடன் போராடியே பாலிலிருந்து விஷத்தைப் பிரித்தறியும் பக்குவம் நமக்கு வந்துவிட்டதாகக் கருதுகிறோம். நம்மால் இந்நாட்டின் கலாச்சாரத்தில் உள்ள குறைநிறைகளை இலகுவாக ஏற்றுக்கொள்ள முடிகிறது. பெரியவர்களுக்கு அது கொஞ்சம் சிரமமே. சிலசமயங்களில் இதனால் பொறுமை இழக்க நேர்வது உண்மை.

வானதி: தலைமுறைகளுக்குள் உள்ள இடைவெளியே இதன் காரணம். உதாரணமாக எம் குழந்தைகள் எம் பெற்றோருடன் பேசும் விதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் எம் பெற்றோருடன் பேசியதில்லை. பேரியவர்களுக்கு மரியாதை கொடுப்பதென்பது நம் பண்பாடுகளில் ஒன்று.

ராதை: பெரியவர்கள் என்பதனால் மட்டும் அவர்கள் முழுமையானவர்களாக இருப்பதாகச் சொல்லி விடமுடியாது. நான் நோர்வேக்கு வந்த புதிதில் இங்கிருந்த தமிழர்கள் அனேகமாக என்னை விடவும் வயது வந்தவர்களே. வயதை உத்தேசித்துக் கண்ணை மூடிக்கொண்டு பலரின் வார்த்தைகளை நம்பியதனால் பல சிரமங்களுக்குள்ளாகியிருக்கிறேன்.

கோதை: உண்மைதான், பெரியவர்களுடன் பயமின்றி மனம்விட்டுப் பேசக்கூடியதாக இருப்பது அவசியம். மரியாதை என்ற பெயரில் இடைவெளி இருக்கக்கூடாது. மரியாதை மனதளவில் இருந்தால் போதாதா?

அருந்ததி: நம் சம்பிரதாயங்களைப் பலரும் அனாவசியம் என ஒதுக்கிவிடுகிறார்கள். இது தவறு. நம் முன்னோர்கள் வகுத்த பல விதிமுறைகளுக்குக் காரணங்கள் இல்லாமலில்லை. இவை நமக்கு முழுவதுமாய்ப் புரிய நியாயமில்லைத்தான்.

வானதி: திருமணங்களில் நடக்கும் சடங்குகள் ஒவ்வொன்றிற்கும் காரணங்கள் இருக்கின்றன. அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, அக்கினியை வலம் வந்து . . . .

கோதை: அவற்றின் அத்தியாவசியம் எனக்குத் தெரியாது. இருந்தாலும் மிகவும் சுவாரஸ்யமானவையாகவே அவற்றைப் பார்க்கிறேன். இவை அழிந்து போய்விடக் கூடாது.

ராதை: நம் தமிழரிடையே நல்ல ரசனை, கற்பனைவளம் இருக்கிறது. அம்மியை மிதித்து மணம் புரிந்தால்தான் மன உறுதி இருக்கும், கெட்டிமேளம் கொட்டினால்தான் சந்தோஷமான வேளையில் அபத்தமான வார்த்தைகள் கேளாதிருக்கும் என்றெல்லாம் ஏற்படுத்தப்பட்ட இந்தச் சடங்குகள் வெறும் மூடக்கொள்கைகள் அல்ல. தமிழனின் அழகான ரசனையையே காட்டுகிறது.

அருந்ததி: கலைகளிலும் தமிழர்கள் தான் தெய்வீகத்தைப் பார்க்கிறார்கள். இவற்றையெல்லாம் இங்கு பிறந்த எமது குழந்தைகள் அறிந்திருக்க நியாயமில்லை என்பது கவலை தருகிறது.

வானதி: நம் கலாச்சாரம், பண்பாடு பற்றிப் போதிய தகவல்களைக் கூறிப் பிள்ளைகளை வளர்ப்பதில் நாம் அத்தனை ஆர்வம் காட்டுவதில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றே நினைக்கிறேன்.

கோதை: இதுதான் நம் கலாச்சாரம், இதுதான் நம் நாட்டின் பண்பாடு, அப்படிச் செய்யக் கூடாது, இப்படி நடக்கக்கூடாது என்றெல்லாம் எப்பொழுதுமே சொல்லிக்கொண்டிருந்தால் குழந்தையின் மனதில் குழப்பங்கள் தான் ஏற்படும். நோவேஜிய சூழலில் வளரவேண்டிய குழந்தைகளுக்கு இந்தச் சமுதாயத்துடன் போராடக்கூடிய சக்தியைக் கொடுப்பதிலும் கூடிய கவனம் செலுத்தத்தான் வேண்டும்.

அருந்ததி: திருமதி சில்வியா பதினெட்டு வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளின் தாய். இங்கு பிறந்த அந்தக் குழந்தைகளை அவர் வளர்க்கும் முறை பிரமிக்க வைக்கிறது. சங்கடப்படுத்தும் பல கேள்விகள் அவர்கள் கேட்கும்போதெல்லாம் மிகவும் பொறுமையாக விஷயங்களை விளக்குகிறார். பிள்ளைகளும் அவரை நல்ல நண்பியாக எண்ணி மனம் விட்டுப் பேசுகிறார்கள். எந்தச் சந்தர்ப்பத்திலும் பிள்ளைகள்மேல் நம்பிக்கை கொண்டிருப்பது அவசியம் என்று அடிக்கடி சொல்வார் சில்வியா. இருந்தும் கூட இதையெல்லாம் மீறி மனதுக்குள் சிறு பயமும் அவரிடம் இருக்கத்தான் செய்கிறது.

வானதி: அது நியாயமானது தானே.

ராதை: இலங்கையில் போலன்றி இங்கு நம் பெற்றோர் பிள்ளைகளுக்காக அதிக நேரத்தை ஒதுக்கவேண்டியிருக்கிறது. இதைத் திருமதி சில்வியா நன்கு புரிந்துவைத்துக் கொண்டிருக்கிறார்.

வானதி: இங்கு பாடசாலைகளில் ஆண்–பெண் உறவு பற்றிப் பகிரங்கமாக பாடம் நடத்துகிறார்கள் எனக் குற்றம் சாட்டிச் சில தமிழ்ப் பெற்றோர் நேரிலேயே சென்று ஆசிரியர்களைக் கண்டித்திருப்பதாய்க் கேள்விப்பட்டிருக்கிறேன்.

அருந்ததி: இது குறித்து சில்வியாவோடு ஒருமுறை பேசியபோது ஒரு விஷயத்தைப் பற்றிய விளக்கம் இல்லாவிட்டால்தான் அதை அறியவேண்டும் என்ற ஆர்வம் எழும். தவறான வழிகளில் செல்லத் தூண்டும். அதனால் சரியானபடி பாடசாலைகளில் கற்பிப்பது ஆரோக்கியமான முறையே என்று அபிப்பிராயப்பட்டார்.

கோதை: எல்லாப் பெற்றோரும் இவ்வாறாகச் சிந்திப்பதில்லை. இருந்தாலும் இந்நாட்டில் தனித்து வாழ்வதைக் காட்டிலும் பெரியவர்களோடு இருப்பதுதான் என் வாழ்க்கை சீராக செல்வதற்கான காரணமென நினைக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராதை: நான் இங்கு வந்த புதிதில் சரியான வழி எது என்று தெரியாமல் தடுமாறியிருக்கிறேன். நம் நாடுகளில் எத்தனை வயது வந்தாலும், பிள்ளைகளை அவளுக்கென்ன தெரியும், சிறு குழந்தை என்று சொல்லிச் சொல்லியே கெடுத்துவிடுகிறார்கள். திடீரென இங்கு வந்ததும் தனிமை சுதந்திரம் எல்லாம் சேர இடறிவிழும் அபாயங்கள் பலவற்றைச் சந்திக்க நேர்ந்தது.

வானதி: கேள்வி கேட்கப் பெரியவர்கள் இருந்தால் இந்நிலை ஏற்படுமா? என் சகோதரி கூட பதினேழு வயதில் இங்கு வந்தவள்தான். நம் பேச்சைக் கேட்டுத் தமிழ்ப் பண்பாட்டின்படிதான் அவள் நடந்து கொள்கிறாள். இப்படியான குழப்பங்களுக்குள்ளாகியதில்லை.

கோதை: தன் மனதில் உள்ளதை அவர் உங்களிடம் வெளிப்படையாகப் பேசிக்கொள்கிறார் என்பதை எப்படி நீங்கள் நிச்சயமாகச் சொல்வீர்கள்?

அருந்ததி: பெரியவர்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சுயமாகச் சிந்திக்கும் அறிவு ஒவ்வொருவருக்கும் சிறிதளவாவது இருக்கத்தான் செய்கிறது. நம் நாட்டில் உள்ள பதினாறு வயதுப் பெண்ணுக்கும் இங்குள்ள அதேவயதுப் பெண்ணுக்கும் பக்குவத்தில் அதிக வேறுபாடு இருக்கிறது.

கோதை: அங்கு வாழும் பெண்களுக்கு அதனால் அதிக பாதிப்பு இல்லை. ஏன். . எந்த வயதானாலும் அங்குள்ள பெண்களுக்கு அதிக சமயோசிதம் தேவைப்படாது போலும். உலகம் புரியாத பெண்களைத்தான் "அருமையான பெண்", "அப்பாவிப் பெண்", "வெகுளி" என்றெல்லாம் பாராட்டுவார்கள். நம் ஆண்கள் கூட அப்படிப்பட்ட பெண்களைத்தானே விரும்புகிறார்கள். இங்கு அப்படி இருந்தால் பழகத்தெரியாதவர்கள், கலகலப்பற்றவர்கள் என்பார்களே.

ராதை: நான் இங்கு வந்தபோதும் அப்படி ஒரு வெகுளியாகத்தான் இருந்தேன். இலங்கையை விட்டு வரும் கடைசி நாள்வரை கூட அம்மாவின் கைகளைப் பிடித்துக்கொண்டுதான் தெருவில் நடந்திருக்கிறேன். இங்கு சந்தித்த கசப்பான அனுபவங்கள் படிப்படியாக என்னை மாற்றி விட்டது. அப்பாவியாக இருந்தால் இங்குள்ள நம்மவர்கள் நம்மைத் தூக்கிச் சாப்பிட்டுவிடுவார்கள். மாற்றம் பழக்கவழக்கங்களில் தானே தவிர நம் பண்பாட்டினைக் கெடுப்பதுபோல் நாம் நடந்துகொள்ளவில்லை .

அருந்ததி: உண்மைதான், இங்கு வாழும் நம் தமிழ்ப்பெண்கள் – குறிப்பாகத் தனித்து வாழ்பவர்கள் கூட ஒழுக்கத்துடன் வாழ்வது நிஜம். ராதை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோதை போன்றவர்கள் சுயமாகச் சிந்திக்கும் வயது வருமுன்னரே இங்கு வந்துவிட்டார்கள். கலாச்சாரத்தின் பாதிப்பு நம்மை விடவும் அவர்களிடம் அதிகமாக இருக்கலாம்.

கோதை: கலாச்சாரத்தின் பாதிப்பு என்பதை விட வயதோடு ஏற்படும் சிந்தனை மாற்றம் என்பதுதான் சரியானதென நினைக்கிறேன். அவற்றைக் கலாச்சாரத்தின் பாதிப்பு என்று கூறி விட முடியாது.

ராதை: பெரியவர்களின் அன்பும் அரவணைப்பும் இருந்தால் பல கஷ்டங்கள் இலகுவாக இருந்திருக்கும். இப்போது தனிமை உறுத்துவதில்லை. எத்தகைய துன்பம் வந்தாலும் சமாளிக்கின்ற திடம் ஏற்பட்டிருக்கின்றது.

(வாசல் அழைப்பு மணி ஒலி கேட்கிறது)

வானதி: யாரோ வருகிறார்கள் போலிருக்கிறது. நான் புறப்படுகிறேன். நேரமாகிறது, என் கணவர் வருமுன்னர் சமையலை ஆரம்பிக்க வேண்டும்.

அருந்ததி: நானும் புறப்படுகிறேன். மகனை மழலைகள் பூங்காவிலிருந்து அழைத்து வரும் நேரமாகிறது.

ராதை – கோதை: நன்றி, சென்று வாருங்கள்!

வினி: தீவிரமான பேச்சில் ஈடுபட்டிருப்பதுபோல் தெரிகிறது. உள்ளேவரலாமா?

கோதை: தாராளமாக! வாருங்கள். . . . சற்று முன்னர் உங்களைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தோம்.

விது: எங்களைப் பற்றியா?!

ராதை: ஆமாம், இங்கு பிறந்து வளர்ந்த தமிழ்க் குழந்தைகள் சந்திக்கும் பிரச்சனைகள் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். அபாரமாகத் தமிழ் பேசுகிறீர்களே! வீட்டில் தமிழ் தானே பேசிக்கொள்கிறீர்கள்?

வினி: என் வீட்டில் நோர்வேஜிய மொழிதான் பேசுகிறோம். சிறு வயது முதலே வீட்டிற்கு வரும் தமிழ் நண்பர்கள் கூட என்னுடன் நோர்வேஜிய மொழியிலேயே பேசியதால் அதுவே பழகி விட்டது.

விது: எப்படியோ! தமிழில் பேச முடிந்தாலும் நாம் சிந்திப்பதென்னவோ நோர்வேஜிய மொழியில்தானே. இருவேறு முகங்களோடுதான் தமிழ் நண்பர்களிடமும், நோர்வேஜிய நண்பர்களிடமும் பழக முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும் இருசாராரிடமும் ஏற்றுக்கொள்ளப்படாமற் போய்விட்டாற்போல இரு பக்கமும் குழப்பங்களே!

விநி: நோர்வேஜியர்களுள் ஒருவராகத் தான் என்னையும் எண்ணிக்கொள்கிறேன். ஆனால் ஓரிரு சமயங்களில் வகுப்பில் ஆசிரியர்கள் கேட்கும் கேள்விகளே வேதனைப்படுத்தியதுண்டு.

கோதை: நிறபேதம் பார்க்கிறார்கள் என்கிறீர்களா?

விது: அனேகமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். பேதம் பார்ப்பவர்களில் முன்னணியில் நிற்பது என்றும் தமிழர்கள் தானே. சாதிப்பிரிவினைகள் பார்க்கிறார்களே . . ! வேறு எந்தக் கலாச்சாரத்தில் இப்படி ஒரு வழக்கமிருக்கிறது?

விநி: கலாச்சாரம் என்றதும் என் நினைவில் வருவது கட்டுப்பாடுகளேதமிழ்க் கலாச்சாரம் பெண் அடக்குமுறையைச் செயற்படுத்துவதாகவே அமைந்திருக்கிறது. இலங்கையில் பெண்களுக்காக வகுத்துள்ள கட்டுப்பாடுகளோடு ஒப்பிடுகையில் நாம் இங்கு அத்தனை சிரமப்படவில்லை என்றே சொல்லவேண்டும்.

கோதை: இலங்கையில் உள்ள தமிழ்ப்பெண்களுக்கு எத்தகைய கட்டுப்பாடுகள் இருப்பதாக நினைக்கிறீர்கள்?

விது: பெண்கள் என்றால் அடக்க ஒடுக்கமாக இருக்கவேண்டும் என்றெல்லாம் சொல்வார்கள் என நினைக்கிறேன். . . . . . மற்றும் உடையணிவதில் கட்டுப்பாடுகள் . . . . அத்துடன் அங்கு ஆண்–பெண் சகஜமான நட்புக் கூட வழக்கமற்றதல்லவா?

விநி: நோர்வேஜியர்களைப் பார்த்துப் புன்னகைத்தால் மரியாதை தெரிந்தவர்கள் என்றுதான் நினைப்பார்கள். அதுவே தமிழ் ஆண்களாக இருந்தால் அதைத் தவறாக அர்த்தப்படுத்திக் கொள்கிறார்களே!

கோதை: ஓரிருவரைக் கொண்டு கூறுகிறீர்கள் என நினைக்கிறேன். புன்னகையைத் தவறாக எடுத்துக்கொள்வார்களா? நான் அப்படி நினைக்கவில்லை.

ராதை: கோதை . . . நானும் நீயும் சிரித்தால் வெறுமனே பற்கள்தான் தெரியும். இவர்கள் சிரித்தால் சேர்ந்து சிரிப்பது பதினாறு வயதும் கூடத்தான். . . .!

( சிரிப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விது: நம் வீடுகளில் கூட ஆண் சகோதரர்களுக்குக் கொடுக்கப்படும் சுதந்திரம் நமக்கு மறுக்கப்படுகிறது.

வினி: பாடசாலைகளில் நோர்வேஜிய ஆண் நண்பர்களோடு பேசுவது போலல்லாமல் தமிழ் ஆண் நண்பர்களோடு பேசும்போது சற்றுத் தயக்கமாகவே இருக்கிறது. பெரியவர்களும்கூட நோர்வேஜிய ஆண்களோடு பேசும்போது இயல்பாக எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால் தமிழ் ஆண்களோடு பேசினால் மட்டும் நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமாகவாவது குறை கூறுகிறார்கள்.

விது: நம் குழந்தைப் பருவத்தில் இங்கு வாழ்ந்த தமிழர் எண்ணிக்கை சொற்பம்தான். கடந்த 7, 8 வருடங்களாக அதிகஅளவில் வந்திருக்கிறார்கள். அதுவரையில் தமிழ்க் கலாச்சாரம் பற்றி எனக்கு அதிகம் தெரிந்திருக்கவில்லை. இப்போது பெற்றோரிடமும் பெரிய மாறுதல்தெரிகிறது.முன்போலன்றிக் கட்டுப்பாடுகளும் கெடுபிடிகளும் அதிகமாகிவிட்டன. அதேபோல் எம்மிடமும் உடனடி மாறுதலை அவர்கள் எதிர்பார்ப்பது எந்த வகையில் நியாயம்?

வினி: தமிழர்கள் நோர்வேஜிய கலாச்சாரம் என்றதுமே அதில் உள்ள குறைகளைத்தான் பெரிதுபடுத்துகிறார்களே தவிர நல்ல விஷயங்களை எடுத்துக்கொள்வதில்லை.

விது: நோர்வேஜியர்களிடம் மனம் திறந்து பேசி விட்டுப் பின்னர் பாதுகாப்பாகவும் உணரலாம். ஆனால் தமிழர்களிடம் மனம் விட்டுப் பேசமுடியுமா, யாரை நம்புவது என்பதே யோசிக்க வேண்டிய விஷயமாக உள்ளது.

கோதை: இங்கு தமிழ் விழாக்களுக்குச் செல்லும் வழக்கமுண்டா?

வினி: அனேகமாக! ஆனாலும் என்ன . . . விதுவை முன்னே வந்து என்னோடு உட்கார்கிறாயா என்று கேட்டாலும் மறுத்துவிடுவாள்.

விது: தமிழ் விழாக்களுக்குச் சென்றால் நம் வயதிற்கே உரிய விளையாட்டுத்தனத்தை மறைத்து அடக்க ஒடுக்கமாக இருக்கையிலேயே நிலைகுத்தி அமர்ந்திருக்க வேண்டியிருக்கிறது. அப்படி, இப்படி நடமாடினாலோ, உரக்கப் பேசிச் சிரித்தாலோ இந்நேரங்களில் நம் நடத்தைகளைக் கண்காணித்துக் குறை கூறவென்றே கண்ணில் விளக்கெண்ணெய் போட்டுக்கொண்டு கவனிக்கவென்று சிலர் இருக்கிறார்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோதை: எனக்கு அப்படியான அனுபவமில்லையே. இதையெல்லாமா குறையாக எடுத்துக்கொள்வார்கள்?!

வினி: பின்னே என்ன? இதுவே ஒரு நோர்வேஜிய விழாவாக இருந்தால் நண்பர்களோடு இயல்பாகப் பேசிச் சிரித்து விளையாட்டும் துள்ளலுமாகச் சுதந்திரமாக இருக்கலாம்.

ராதை: தமிழ் விழாக்களில் உற்சாகமும், கலகலப்பும் ஆண்களைச் சேர்ந்தது என்பது உண்மைதான். நம் கலாச்சாரம் பற்றிய விளக்கங்களை உங்கள் பெற்றோரிடம் கேட்டு அறிந்து கொள்வீர்களா?

விது: ஆமாம். பெரியவர்கள் நம்மிடம் அதிகமாக எதிர்பார்க்கிறார்கள். நமக்கு விருப்பமில்லாவிட்டாலும் அவர்களுக்காகத் தமிழ்மொழி, கலைகள் போன்றவற்றை ஆட்சேபிக்காமல் நாம் கற்றுக்கொள்ள முன்வரும்போது அவர்களும் நம் கருத்துக்களுக்கு, விருப்பங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். அவர்களுக்கு நம்மிடம் நம்பிக்கை இல்லையோ என்பதுபோல் நம்மை உணரவைத்து வேதனைப்பட இடம் கொடுக்கக்கூடாது.

வினி: என் பெற்றோரின் பொறுமையும், நட்புணர்வோடு அவர்கள் என் பிரச்சனைகளை அணுகும் விதமும் தான் என் உணர்வுகளை அவர்களிடம் வெளிப்படுத்துகின்ற தைரியத்தைக் கொடுக்கிறது. சிறு விஷயத்திற்கும் பதட்டமடைந்து குறைகூறுபவர்களாக அவர்கள் இருந்தால் இது சாத்தியமற்றதே.

கோதை: இலங்கைக்குச் சென்று வந்திருக்கிறீர்களா?

விது: ஒருமுறை எனது முதலாவது வயதில் சென்றிருக்கிறேன். அங்கு சென்று வாழ்வதை நான் விரும்பவில்லை. விடுமுறையைக் கழிக்க அவ்வப்போது வேண்டுமானால் சென்று வரலாம்.

வினி: நானும் குழந்தையாக இருக்கையில் என்னை அழைத்துச் சென்று வந்ததாக என் பெற்றோர் சொல்லக் கேட்டிருக்கிறேன். படிப்பு முடிந்ததும் இலங்கையிலேயே வேலை தேடிக்கொண்டு அங்கேயே நிரந்தரமாகத் தங்கி விடத்தான் ஆசை.

ராதை: என் விருப்பமும் அதுவே. ஆரம்பத்தில் இங்கு வந்தபோது ஏற்பட்ட அதே சிரமங்கள் அப்போது மீண்டும் எழலாம். அங்குள்ள சமுதாயத்திற்கேற்றாற்போல என்னை மாற்றிக் கொள்ள நேரமெடுக்கலாம்.. . எப்படியோ நம் வேர்கள் அங்குதானே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோதை: உண்மைதான். ஆரம்பத்தில் குழப்பங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும் . . . . . இலங்கை தான் நமது தாய்வீடு என்ற உணர்வே போதுமே. இந்த வாடகை வாழ்க்கைக்கு ஒரு முடிவு வந்துவிடும் காலம் வெகு தொலைவில் இல்லை!

வானதி, அருந்ததி – திருமணமானவர்கள்
ராதை, கோதை – 16 வயதில் இங்கு வந்த திருமணமாகாதவர்கள்
வினி, விது – இங்கு பிறந்த 18 வயதுக்குட்பட்ட பெண்கள்

பேர்கனில் வாழும் தமிழ்ப் பெண்களிடையே பன்னிருவர் சந்தித்து நிகழ்த்திய கலந்துரையாடலை ஆறு கற்பனைக் கதாபாத்திரங்களாகத் தொகுத்து எழுத்து வடிவில் வழங்கியவர்:

உஷா கனகரட்ணம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமர்சனம்

–க.மயில்வாகனம்

"தேன் தமிழோசை", பேர்கன் வாழ் தமிழர்களுக்கு ஓர் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. வாரந்தோறும் அதன் ஒலிபரப்பை மிக ஆவலுடன் எதிர்பார்க்கும் பல நேயர்களில் நானும் ஒருவனாவேன். அண்மையில் இருந்து தமது ஒலிபரப்பு நேரத்தை இரட்டித்தமையையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வொலிபரப்பால் இங்கு வாழும் தமிழ் மக்கள் பல நன்மைகளைப்பெற ஏதுவாயுள்ளது. எம் பிறந்த நாட்டைவிட்டுப் பல தூரம் கடந்து புலம் பெயர்ந்து வாழ்ந்து வரும் எமக்குத் தமிழோசை, வானொலி மூலம் எமது மனையில் காற்றில் மிதந்து வருவதே பெரும் இன்பத்தைத் தரும் ஒன்றாகும். மேலும் அதில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் எமது கலை, கலாச்சாரம், மொழி ஆகியவற்றினை வளர்க்கவும் உதவுகிறது. குறிப்பாக இங்கேயே பிறந்து வளர்ந்து வரும் தமிழ் சிறார்களுக்குத் தம் மொழி, கலாச்சாரம் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ளவும் இது உதவுகிறது. எனவே பாலர் நிகழ்ச்சிகளுக்கு இன்னும் சிறிது அளவு நேரம் ஒதுக்குதல் உசிதமென நான் கருதுகிறேன். இதில் பாலர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்து ஒலிபரப்பல் நலம்.

இதே வண்ணம் இளைஞர் மன்றம், மாணவர், மாணவி, மாதர் பகுதிகள் ஆகியன உருவாக்கப்படுதல் சாலச் சிறந்தது.

பிரதி ஒலிபரப்பிலும் தெய்வ நற்சிந்தனை நிகழ்ச்சிதனை நடாத்தி வருவது மிகவும் வரவேற்கத்தக்கது.

கிழமையில் இரு முறை வரும் தேன் தமிழோசையில் தரப்படும் அறிவித்தல்கள் மூலம் பேர்கனில் நடைபெற இருக்கும் இதர நிகழ்ச்சிகள் பற்றி அவ்வப்போது நாமறியக்கூடியதாயுள்ளது. இந்த வழியில் இது மக்களிடையே ஓர் தொடர்புசாதனமாகவும் அமைகிறது.

மேலும் எமது தாயகத்தில் நடைபெறும் அதர்மப்போரால் நாம் பிரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ள எமது உற்றார், உறவினர், நண்பர், போராளிகள் பற்றி நாம் கவலை கொண்டுள்ள இத்தருணத்தில் அங்கு நடப்பன பற்றித்தமது செய்திகள் மூலம் அவ்வப்போது அறியத்தரப்படுவது எமக்குப் பெரும் ஆறுதலைத் தருகிறது இதில் பக்கம் சாராது நின்று நடுநிலையைக் கடைப்பிடித்தல் அவசியம்.

தமிழரின் செல்வங்களில் எமது கர்னாடக இசையும் ஒன்றாகும். இது சாஸ்திரீய சங்கீதம் என்றும் அழைக்கப்படும். இதனை ஊக்குவிக்க ஆவன செய்தல் உகந்தது.

ஈழத்துக் கவிஞர்கள், கலைஞர்கள், சங்கீத வித்துவான்கள் ஆகியோரின் படைப்புக்கள் இங்கு எமக்கு அறிமுகப்படுத்தப்படல் உசிதம். அவ்வப்போது பேர்கன் வாழ் கலைஞர்களின் திறன் ஒலிபரப்பாவது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

பிரதி கிழமையும் தரப்படும் இரண்டு மணித்தியால ஒலிபரப்பிற்கும் இதில் சம்மந்தப்பட்டோர் பல மணி நேரங்களைக் கிழமை தோறும் செலவிட வேண்டி உள்ளதாயிருக்கும். இயக்குனர் குழுவின் இச்சேவை மிகவும் மெச்சத்தக்கது. இது அவர்களின் தமிழ்ப்பற்றிற்கு ஓர் எடுத்துக்காட்டு. இது ஓர் கர்ம யோகா ஆகும். இதில் ஈடுபட்டோர் கர்மவீரர்கள் எனக் கணிக்கப்படுவர். அவர்கட்கு ஆசிகள் பல.

தேன் தமிழோசை தமிழ் கலை, கலாச்சாரத்திற்கும் தமிழ் மொழிக்கும் ஈட்டி வரும் இவ்வரிய சேவை தமிழ்த் தாய்க்கு ஆற்றிவரும் பெரும் தொண்டாகும்.

இதனை இதய நிறைவுடன் பாராட்டுவதுடன் மென் மேலும் செழித்து வளர வேண்டி எல்லாம் வல்ல இறைவனைப்பிரார்த்திக்கிறேன்.

வாழ்க தமிழ், வாழ்க தமிழினம், வளர்க 'தேன் தமிழோசை'.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமர்சனம்

–திருமதி பி. ஜோர்ஜ்

தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வகை
செய்தல் வேண்டும் என மொழிந்த சீர் மிகு பாரதியின்
மெய்க்கனவை நனவாக்கி நோர்வே நாட்டின்
பெர்கன் மா நகரினிலே பீடு நடை போட்டுவரும்
தேன் தமிழ் ஓசையது தித்திக்கும் முத்தமிழை
திகட்டாத சுவையாகத் தேனாகப் பாகாக
வானொலியின் குரலினிலே வகையாகத் தரும்போது
வண்ணத் தமிழதனை வடிவாகக் கேட்கின்றோம்.

இன்றுபோல் என்றும் வாழ
இதயம் நிறை வாழ்த்தளித்தேன்.

எத்தனையோ சிரமங்களின்
மத்தியிலே சாதனையாய்
எழுந்து குரல் கொடுத்து எம் தமிழர் மொழி சிறக்க
வளர்ந்து வரும் தேன் தமிழின் ஓசையது வாழ்க! வாழ்க!

பெர்கன் வாழ் தமிழ்ப்பாலர் பேணிடும் தமிழ்ப்பண்பாட்டை
பேச்சினிலும், பாட்டினிலும், பேணியே வளர்த்திடுவாய்
பாலர்களை வானொலியில் பாட, பேச வைத்திட்டால்
பார் புகழும், தமிழ் மகிழும் பார்த்துக்கொண்டே நீ வளர்வாய்.

வாழ்த்துக்கள் நான் பாட
மணி ஒலிகள் தான் கூட
வளர்பிறைபோல் நீ வளர்வாய்
வளம் நிறைந்து பெயர் பெறுவாய்!
வாழ்க! வளர்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய நகைகளை உருக்கிப் புதுப்பிக்கவும்
உங்களிற்கு விரும்பிய
டிசைன்களில்
புதிய நகைகளை உங்கள் விருப்பப்படியே
செய்துகொள்ளவும்
நாடவேண்டிய இடம்
Oslo இல்

**NEW GALAXY GULLSMED**

தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி இல. 22 67 30 77
mobil 92 04 25 18

உங்கள் வீட்டுப் பொருட்களை மலிவான முறையில்
ஏற்றி இறக்கும் உதவியை பெற
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
*" உதவும் கரங்கள் "*

உதவும் கரங்கள் ஸ்தாபனத்தின் மூலம் பெறும் உதவிக்காக
நீங்கள் வழங்கும் பணம் எமது நாட்டிலுள்ள
ஏழைச் சிறார்களின் நல்வாழ்வுக்கே சென்றடைகிறது
என்ற
மனத்திருப்தியை பெறுவீர்கள்.
தொடர்புகட்கு:- 55 16 89 49 / 55 96 06 52
முகவரி:- HJELPENDE HENDER
POST BOX 3649
5033 FYLLINGSDALEN.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதூாகலமாக உங்கள் விடுமுறையை களிக்க
விரும்புகின்றீர்களா
அல்லது
கடல் கடந்து வாழும் உங்கள் உறவினர்கள்
நண்பர்களை சந்திக்கத் திட்டமிட்டுள்ளீர்களா?
**Colombo, Madras, Singapore, USA,**
**Canada** இன்னும் பல நாடுகளுக்கு
குறைந்த விலையில் விமான டிக்கட்டுகளை
ஒழுங்கு செய்ய இன்றே தலைநகரில் தொடர்பு கொள்ள
வேண்டிய இடம்
*சுபயாத்திரா*
இல.**188 Grønland T.B.St.**
தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசி இல. **22 17 26 70 / 22 17 22 01**
**Fax. 22 17 26 71**



இலங்கை இந்திய மரக்கறி வகைகளுடன்
உங்கள் வீட்டிற்குத் தேவையான
மளிகை பொருட்களையும்
மலிவுவிலையில் வாங்க
நாடவேண்டிய இடம்
**STAR INTERNASJONAL FOOD**
**No. 4 HANS HOLMBOESG.**
**BERGEN**
நீங்களும் ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்
மலிவு விலை உங்களிற்கு புரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org